
கல்கி

KALKI
28.2.1971
40 காசு



இந்தியாவைக் காக்க
இந்திரா-கம்யூனிஸச் சதிகளை முறியடிக்க
வோட்டுச் சின்னங்கள்





இவள்தான் சரோஜா

வீட்டில் செல்லக்கிளி • விளையாட்டில் கெட்டிக்காரி • படிப்பிலே படுசுட்டி



எது 'அதுவோ' அதேதான் அவளுக்கு வேணும்

சரோஜா விரைவில் வளர விரும்புகிறாள். ஆகவே அவளுடைய தாய் அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் அளிக்கிறார். அதில் அதிக ஊட்டச் சத்தும், உடல்வளர்ச்சிக்கு அவசியமான புரதச் சத்தும், உள்ளன. ஆடை நிறைந்த பால், செழுமையான கோதுமை மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள் அடங்கிய ''ஹார்லிக்ஸை'' 80 ஆண்டுகளுக்கும் மேலாக, டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள்.

நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் உடல் நலத்தோடும், உற்சாகத்தோடும் விளங்க தினமும் ''ஹார்லிக்ஸ்'' அருந்துங்கள்.



'ஹார்லிக்ஸ்' — ஆம் அதேதான்!

கல்கி

பொருளடக்கம்

சிறுகதைச் சிறப்பிதழ்

சாதாரண, மாசி 16 ○ பிப்ரவரி 28, 1971

அட்டைப்படம் உதவி : இண்டியன் எக்ஸ்பிரஸ்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :

	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

தனது வைர விழா வைபவப் பெருநாளில்

தென்னிந்திய வர்த்தகத் தொழில் சங்கம்

நாட்டின் சேவைக்கு

மீண்டும் தன்னை அர்ப்பணம் செய்து கொள்ளுகிறது

தனது குறிக்கோள்களில் கீழே குறிக்கப்பட்டுள்ள அம்சங்களை முக்கியமானதாக அது வலியுறுத்துகிறது.

- வேலை செய்வதற்கான வாய்ப்புக்களை மேன்மேலும் அதிகமாக மக்களுக்கு உண்டாக்கித் தருவதற்காக, நாட்டின் இயற்கை வளங்கள் அனைத்தையும் உச்ச அளவுக்குப் பயன்படுத்தித் தேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளைச் சுறுசுறுப்படையச் செய்வது, இறக்குமதியாகும் பொருள்களை நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயலுவது, அயல்நாடுகளுக்கு நமது பொருள்களை அதிகமாக ஏற்றுமதி செய்து அதன் மூலம் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்கச் செய்வது, தில்லி அரசாங்கத்துக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்கும் வருவாயை அதிகரிக்கச் செய்வது, பொருளாதாரத்தைச் சுறுசுறுப்படையச் செய்து கடைநிலைத் தொழில்களும், லாபகரமாக இயங்கச் செய்ய முயலுவது ஆகியவை தென்னிந்தியத் தொழில் வர்த்தக சங்கத்தின் குறிக்கோள்களில் அடங்கியவையாகும்.

- நாட்டின் யந்திரத் தொழில் துறை அடித்தளத்தை நவீனமாக்கி விரிவாக்குவதன் மூலம் விவசாயத் துறையிலும், யந்திரத் தொழில் துறையிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம் என்று தென்னிந்திய வர்த்தகத் தொழிற் சங்கம் நம்புகிறது. இதைச் செய்வதற்குப் புதுப் புதுத் தொழில்களைத் தொடங்குவதற்கான எல்லாத் தொழில் உற்சாகத்தையும் ஊக்கங்களையும் தொழில் துணிவு உள்ளவர்களுக்கு அளித்து, அவர்களைத் தொழில்களில் ஈடுபடத் தூண்டும் சாதகமான பொருளாதாரச் சூழ்நிலையை நாட்டில் உண்டாக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று தென்னிந்திய வர்த்தகத் தொழில் சங்கம் நம்புகிறது.

- கச்சாப் பொருள்களுக்குத் தட்டுப்பாடுகள் காணப்பட்டாலும், தொழிற்சாலைகள் தங்களுடைய முழு அளவுக்குச் சற்று ஏறத்தாழவேனும் உற்பத்தி செய்து கொண்டு வரக்கூடிய வகையில் தேசத்தில் இப்போதுள்ள தொழில் அமைப்பு கூடுமான வரையில் இயங்கிக் கொண்டிருந்தாலும், நாட்டின் மக்கட் தொகை கவலை தரும் அளவுக்குப் பெருகிக் கொண்டே போவதால் விரைவாக வளர்ந்து கொண்டே செல்லும் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தொழிற்சாலைகளின் இப்போதுள்ள உற்பத்தி அளவுகளை மேலும் உயர்த்தி, அவைகளை விஸ்தரிக்கவும், விரிவடையச் செய்யவும், அதன் மூலம் விவசாயத் துறையிலும் உற்பத்தியை விரைவாகப் பெருக்க வேண்டிய அவசியம் நாட்டில் ஏற்பட்டுள்ளது என்று தென்னிந்தியத் தொழில் வர்த்தக சங்கம் நம்புகிறது.

- நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையில் தனியார்த் துறை, சர்க்கார்த் துறைத் தொழில்கள் தங்களுக்குரிய இடங்கள் குறித்து ஆக்க முறையிலேயே கருத்துக்களை உருவாக்குவதுடன், நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு அவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியம் என்று தென்னிந்திய வர்த்தகத் தொழிற் சங்கம் நம்புகிறது. மேலும் இவ்விரு துறையினர்களும் தொழில் நுணுக்க அறிவு உதவிகளை ஒருவருக்கொருவர் அளிக்கவும், பெறவும், பகிர்ந்து கொள்ளவும், அதன் மூலம் தொழில்களில் உற்பத்தியை உச்ச அளவுக்கு உயர்த்தவும், உற்பத்தித் திறனையும் சாதனங்களின் உபயோகத்தையும் உயர்த்த வசதிகள் இருதுறையினருக்கும் இருத்தல் அவசியம் என்றும் நம்புகிறது.



நீடித்துழைப்பவை!
டுலக்ஸ் பெயின்ட்டுகள் நீடித்துழைப்பதற்குக் காரணம், இவை உயர்வானதும் பூரணமாகக் கழுவக் கூடிய முடிவான தோற்றத்தைக் கொடுக்கிறது. மேலும் ஜஸிஜ தரத்தையே தனது அதி முக்கிய மூலப் பொருளாகக் கொண்டது.
ICI
DULUX
ICI
அழகிற்கு வருடக் கணக்கில் அழகு நிலைத்திட
ICI
டுலக்ஸ் பெயின்ட்
டுலக்ஸை தயாரித்து விற்பவர்கள்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்.
டுலக்ஸ்—இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், லண்டனின் வியாபாரச் சின்னம்.
பதிவு பெற்ற உபயோகிப்பவர்கள்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்.
ACCI (P) 6220

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



மலர் 30

இதழ் 31

பாடம் கற்பிக்க வேண்டும்

*ப*க்தர்களின் உள்ளங்களை மட்டுமல்ல; இந்தப் பாரத தேசத்தின் கோடிக்கணக்கான பாமர மக்களின் உள்ளங்களையும் சகிக்க முடியாத அளவில் மனக் கொதிப்பு உண்டாக்கும் முறையில் "பெரியார்" அவர்களின் தூண்டுதலும் முதன்மையும் உதவியும் கொண்டு சேலத்தில் ஓர் அக்கிரமக் கூட்டம் ஊர்வலமாக அதிகாரிகளுடைய பார்வையுடன் ஜனவரி 24ந் தேதியில் சென்றது. நியாயப்படியும் நீதிப்படியும் இந்த அக்கிரம ஊர்வலத்தை உடனே கலைத்து ஊர்வலத்து முதல்வர்களையெல்லாம் சிறைச்சாலையில் மூடியிருக்க வேண்டியது. கொலைகள் நடக்கக் கூடிய அளவில் கோபமும் ஆத்திரமும் உண்டாக்கக் கூடிய இந்த நடவடிக்கையைத் தடுக்காமல் நடக்க விட்டதால் தமிழ்நாட்டுச் சர்க்காரும் இதற்கு உடந்தையென்றே கருதவேண்டும். தி. மு. க. தலைமையில் நடைபெறும் ஆட்சியின் மனப்பான்மையை உணர்ந்துதான் போலீசாரும் மாஜிஸ்டிரேட் முதலானவர்களும் தங்களுடைய கடமையைச் செலுத்தாமல் பெரிய அக்கிரமத்துக்கு உடந்தையாக நடந்துகொண்டார்கள். தடுக்க வேண்டியதைத் தடுக்காமலும் செய்யவேண்டியதைச் செய்யாமலும் இருந்துவிட்டு, நடந்த விஷயத்தை உலகத்துக்குத் தெரியப்படுத்தும் முறையில் வெளியிட்ட பத்திரிகையின் மேல் தமிழ்நாட்டு தி. மு. க. அரசாங்கம் பாய்ந்திருக்கிறது. கொலை செய்தவனைத் தண்டிக்காமல் சாட்சியைச் சிறையில் அடைத்து வைப்பது போன்ற இந்த நடவடிக்கை ஒன்றே போதும் தி.மு.க. ஆட்சியை உடனே அப்புறப்படுத்த. ஒரு பக்கம் இந்திரா காந்தியின் தில்லி ஆட்சி முறை தேசத்தைக் கம்யூனிஸ்ட் ஆட்சியாக்கி வரப் பார்க்கிறது. மற்றொரு பக்கம் தி. மு. க. ஆட்சி தமிழ்நாட்டு மக்களை உணர்ச்சியற்ற பூச்சிகளாகக் கருதப் பார்க்கிறது.

மார்ச்சு முதல் வாரத்தில் மக்கள் கிளம்ப வேண்டும். தேர்தலில் தி. மு. க. வுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்! தங்களுடைய பதவிக்கு இந்த நிகழ்ச்சி அபாயம் உண்டாக்கி விட்டதே என்பது ஒன்றுதான் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் கவலை. மக்களின் உள்ளம் கொதிப்பதை அவர்கள் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்து இருபத்தைந்து நாட்களுக்குப் பின் இப்போது பெரியார் திரு ஈ. வெ. ரா. பேரில் போலீஸார் நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தமிழ்நாடு முதல்வர் பேசியிருக்கிறார். அவர் கூறும் சமாதானங்கள் எல்லாம் நொண்டிச் சமாதானங்கள். பல ஆண்டுகளுக்கு முன் பிள்ளையாரை உடைத்த சம்பவத்துக்கும், பெரும் கலகமும் கொலையும் நிகழக் காரணமாகக் கூடிய ஜனவரி 24ந் தேதி சம்பவத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம். மக்களின் கொதிப்பு தேர்தலில் உரு எடுக்க வேண்டும். எப்படியாவது நடக்கட்டும் என்று வோட்டுச் சாவடிக்குச் சென்று ஓட்டுப் போடாமல் வீட்டில் இருந்து தேசம் கெட்டுப் போக விடாதீர்கள்.

ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்!

தேசத்தின் நிலைமை மிகவும் சீர்கெட்டு விட்டிருக்கிறபடியால் இந்த வயதில் நானும் அரசியலைக் கவனித்து என் கடமையைச் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன். தில்லி சர்க்காரில் தலைமை வகித்துவரும் ஸ்ரீமதி இந்திராகாந்தியின் நோக்கங்களும் கையாண்டு வரும் முறைகளும் மிகத் தவறு. தேசத்துக்கு அபாயம் என்று நான் உறுதியாக நினைக்கிறேன். என்னுடைய இந்த அபிப்பிராயத்தை யாவரும் அறிவார்கள். அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை எடுத்து விட வேண்டும் என்பது ஸ்ரீமதி இந்திராகாந்தியின் நோக்கம். இதுவே கம்யூனிஸ்டுகளின் நோக்கமும்.

அம்மையாருக்குத் தில்லி சட்டசபையில் போதிய ஆதரவு இல்லை. ஆனபடியால், அதிக ஆதரவு பெற வேண்டும் என்று இந்த மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் தி. மு. க. தலைவர்கள் ஸ்ரீமதி இந்திராவுக்கும் அவர் துணையான கம்யூனிஸ்டுகளுக்கும் உடந்தையாக இருப்பதை மக்கள் அறிவார்கள். அரசியல் சட்டத்தைப் பற்றிய இந்திரா காந்தியின் நோக்கங்களில் தமிழ் நாட்டு அரசின் அபாய உடந்தை மிக உறுதியாகி விட்டபடியால் தமிழ் நாட்டு ஆட்சியிலிருந்து தி. மு. க.வினரை அகற்ற வேண்டும். தில்லி ஆட்சியிலிருந்து ஸ்ரீமதி இந்திராகாந்தியையும் அகற்றிவிட வேண்டும். இந்தக் காரியத்தில் நானும் திரு காமராஜும் சேர்ந்து உழைப்பது பொதுமக்களுக்கு மிக மகிழ்ச்சி தருவதை நான் உணருகிறேன். மக்களின் இந்த ஒத்துழைப்புக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

இந்தத் தேர்தலில் இரண்டு தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒன்று தில்லி சட்டசபைக்கு; மற்றொன்று தமிழ் நாட்டுச் சட்டசபைக்கு. இரண்டு தேர்தல்களுக்கு இரண்டு வாக்குக் காகிதங்கள் மக்கள் ஒவ்வொருவரும் பெறுவார்கள். இரண்டு தேர்தல் காகிதங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே தேர்தல் சாவடியில் கொடுப்பார்கள். அதே சாவடியில் தேர்தல் காகிதங்களில் வோட்டு குறிப்பிட்டுப் போடும்படி ஏற்பாடு நடக்கும்.

பழைய காங்கிரஸும் சுதந்திரக் கட்சியும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வேலை செய்கிறபடியால் இந்த இரு கட்சிகளுக்கிடையே போட்டியில்லை. அபேட்சகர்களின் பெயர்களும் அவர்களுடைய சின்னமும் அச்சடித்த காகிதங்களை ஒவ்வொருவரும் பெறுவார்கள். ராட்டைச் சின்னம் பழைய காங்கிரஸ் வேட்பாளர்களுடைய சின்னம். நட்சத்திரம் சுதந்திரா வேட்பாளர்களுடைய சின்னம். ஒவ்வொருவர் பெறும் சர்க்கார் தேர்தல் காகிதத்தில் பழைய காங்கிரஸுக்கும் சுதந்திரா கட்சிக்கும் இடையில் போட்டியில்லாதபடியால், இந்த இரண்டில் ஒரு சின்னம்தான் இருக்கும். மக்களை நான் வணக்கத்துடன் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ராட்டைச் சின்னம் இருக்கும் தேர்தல் காகிதத்தில் அதன் பேரில் முத்திரை இடுங்கள். நட்சத்திரச் சின்னம் இருக்கும் தேர்தல் காகிதத்தில் அதன் பேரில் முத்திரை இடுங்கள்.

தேர்தலுக்குக் குறிக்கப்பட்ட தேதியில் அனைவரும் தேர்தல் சாவடிக்குப் போக வேண்டும். எப்படியாவது நடக்கட்டும் என்று வீட்டில் இருந்துவிட்டால் தேசம் பாழாகிப் போகும். அரசாங்கம் கம்யூனிஸ்டு ஆட்சியாகிப் போகும். மக்களுடைய சுதந்திரங்கள், சொத்துரிமை, தொழிலுரிமை எல்லாம் வர வர அழிந்து போகும். நாட்டில் மக்களுடைய வாழ்க்கை அடிமை வாழ்க்கையாகும். தொழில் உற்பத்தி வளராமல் போகும். தரித்திரமும் அதிகரிக்கும். ஆகையால் அனைவரும், ஆண்களும், பெண்களும் தேர்தல் கச்சேரிக்குச் சென்று தேர்தல் காகிதத்தில் சரியானபடி ராட்டைக்கும், நட்சத்திரத்துக்கும் அதாவது பழைய காங்கிரஸ் அபேட்சகருக்கும் சுதந்திரா அபேட்சகருக்கும் வாக்குகளை முத்திரையிட்டுத் தர வேண்டுமாறு கோருகிறேன்.

ஏமாற்றுப் பேச்சுக்களுக்கு இரையாகாதீர்கள். விவேகத்தோடு வாக்குத் தந்து தேசத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள். மக்களின் சுதந்திர வாழ்வைக் காப்பாற்றுங்கள். ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள் அப்போதுதான் தொழில்கள் அபிவிருத்தியாகி மக்களுக்கு வேலைவாய்ப்பு விசாலப்படும். கம்யூனிஸ்ட் பாணி ஆட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சிகளுக்கும், இந்திரா அவர்களின் ஆட்சிக்கும் முழுத் தோல்வி தந்து கடமையைச் செலுத்துவீர்களாக.

எல்லா வேட்பாளர்களுக்கும் எல்லா வாக்காளர்களுக்கும் தேர்தல் பணி செய்து வெற்றி வாங்கித் தரும் அனைவருக்கும் என்னுடைய ஆசீர்வாதம்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

ராஜாஜியின் கருத்துக்கள்

கடைசியாக, சேலத்துப் பயங்கர அசம்பாவிதத்தின் நிர்வாகிகள் மீதும் திரு ஈ.வெ.ரா. பெரியார் மீதும் தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. தமிழ் நாட்டு அரசாங்கம் சேலத்தில் நடந்த ஊர்வலம் பற்றித் தகவல் பெறுவதற்கு இத்துணைக் காலம் ஆகியிருப்பதாக அர்த்தம் போலும்!

மகா ஆபாசமான முறையில் இந்த ஊர்வலம் நடந்திருக்கிறது. இந்த ஊர்வலத்தின் புகைப்படங்களை வெளியிட இருந்த 'சோ'வுக்குத் தமிழ்நாட்டுச் சர்க்கார் நன்றி தெரிவிக்க வேண்டும். ஊர்வலப் படங்களை 'சோ' வெளியிட முன்வந்திராவிடில் இந்த விபரீத ஊர்வலம் குறித்துத் தமிழக அரசாங்கம் கவனமே செலுத்தியிராது.

சில ஆண்டுகளுக்குமுன், பிள்ளையார் உடைப்பு என்ற பெயரில் திரு ஈ. வெ. ரா. செய்த கோமாளி நாடகவிஷயமாக அப்போது தமிழக அரசாங்கத்தில் பொறுப்பு வகித்த நான் என்ன செய்தேன் என்று வாதத்தில் இறங்குகிறார் திரு கருணாநிதி. இந்த வாதத்தைக் கண்டு யாரும் ஏமாற மாட்டார்கள். ஏனெனில், திரு ஈ. வெ. ரா. தமக்குச் சொந்தமான ஒரு பிள்ளையார் சிலையை உடைத்ததற்கும், சேலத்தில் மிக ஆபாசமாகவும், அபசாரமாகவும் ஊர்வலம் நடத்தியதன் மூலம் மக்கள் கொதித்தெழத் தூண்டுகோல் அளித்ததற்கும் மிக மிக வித்தியாசமுண்டு. இப்போது நடந்ததற்கும் அப்போது நடந்ததற்கும் இடையே இமய மலைக்கும் சென்னைப் பரங்கிமலைக்கும் இடையே உள்ள அளவு வித்தியாசமுண்டு.

சேலம் ஊர்வலம் நடந்தபோது ஸ்தலத்திலேயே ஒருசில கொலைகள் நடந்திருந்தாலும் கூட ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன் உணர்ச்சிகளை அவ்வளவு தூரம் தூண்டி விடக்கூடிய முறையில் ஊர்வலம் நடத்தி யிருக்கிறார்கள். இது ஹிந்து மதத்தை எதிர்க்கும் நாஸ்திகர்கள் ஏதோ வெறுமே நடத்திய ஊர்வலமாக மட்டும் இல்லை. ஊர்வலத்தினர் ஆயுதம் தரித்த ஒரு பெரும் கூட்டத்தினர். இப்படி ஆயுதபாணிக் கூட்டம் ஊர்வலத்துக்காக ஒன்று சேருவது சட்ட விரோதமானது. இப்படிப்பட்ட சட்ட விரோதக் கூட்டத்தை உடனுக்குடனே கலையச் செய்து நிர்வாகிகளைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும். போலீஸாரும் மாஜிஸ்திரேட்டு அதிகாரிகளும் இவ்வித நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் தெள்ளத் தெளிவு: திரு ஈ. வெ. ரா. இன்றைய தமிழ் நாட்டு அரசாங்கத்தின் அன்புத் தந்தை என்பது தான் காரணம். முதன் மந்திரியின் கருத்தை அறியாமல் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று அதிகாரிகள் ஒரு 'புது சம்பிரதாயத்தை'ப் பின்பற்றுவதாலேயே மேற்படி ஊர்வலம் குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

★

ஒரு வருடத்துக்கு முன்னால் செய்திருப்பின் எந்த ஒரு காரியம் பாராட்டுப் பெற்றிருக்குமோ, அதுவே இந்தத் தேர்தல் காலத்தில் செய்யப்பட்டால் லஞ்சமாகவும் ஊழல் நடவடிக்கையாகவும் ஆகிறது. இதற்கு ஓர் உதாரணம், பரங்கிமலைத் தொகுதியிலிருந்து சட்டசபைக்குப் போட்டியிடும் திரு எம். ஜி. ராமச்சந்திரன் சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கி, தவணைக் கட்டணங்களில் விலைபெற **இந்த பிப்ரவரி மாதத்தில்** முன்வந்திருப்பதாகக் கூறப்படுவது.

■ இதைவிட மிக மோசமான இன்னோர் உதாரணம்: ஆலைத் தொழிலாளருக்கென ஒரு குடும்பப் பென்ஷன் திட்டம், இம்மாதம் பிரதமரின் தூண்டுதலில் அவசரப் பிரகடனமாக வெளிவந்திருக்கிறது. மக்கட்சபைக் கூட்டத் தொடர் நடக்கும்போது இவ்விஷயமாக ஏதும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே பாங்குகளில் சிறு சேமிப்பு செய்திருப்பவர்களுக்குரிய வட்டித் தொகையிலிருந்தே பிரீமியம் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் காப்புத் தர எல்.ஐ.ஸி ஒரு திட்டம் கொண்டு வந்திருப்பதாகவும் வானொலி கூறியது. இவை எல்லாம் 'வோட்டர்களைப் பிடிப்பதற்காக வீசப்படும் தூண்டிற் புழு' என்று வர்ணிக்கிறது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்.'

'வோட்டுப் பிடிப்பதிலேயே கருத்தை வைத்து முக்கியமான முடிவுகளை இச்சமயத்தில் எடுக்கும் போக்கு வேதனையளிப்பதாக உள்ளது. தேர்தலுக்கு முன்னம் இன்னும் இதுபோல் எத்தனை தூண்டிற் புழுக்கள் வீசப்படுமோ என்று எண்ணத் தோன்றுகிறது' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறுகிறது.

★


ஆளும் காங்கிரஸ், ஸ்தாபனக் காங்கிரஸ் இரண்டுமே ஒரே விதமான மூவர்ணக் கொடி வைத்துக் கொண்டிருக்கின்றன. காந்திய காங்கிரஸையும், அதன் மூவர்ணக் கொடியையும் ஏற்ற ஸ்தாபக அங்கத்தினர்களில் நானும் ஒருவன். இப்போது தி. மு. க.வின் சிவப்பு — கறுப்புக் கொடிகளோடுகூட மதிப்புக்குரிய அந்தப் பழைய காங்கிரஸ் கொடியும் பறக்கக் காண்கையில் எனக்கு விசித்திரமாக இருக்கிறது.

அரசாங்கங்களுக்குக் கொடி வேண்டியது தான். அரசியல் கட்சிகளுக்குத் தனித் தனிக் கொடி எதற்காக இருக்க வேண்டும்? கட்சிகளுக்குக் கொடியே தேவையில்லை.

காங்கிரஸ் பிளவுக்கு முன்னரே, தேசியக் கொடியைப் பெரும்பாலும் ஒத்த மூவர்ணக் கொடியைக் காங்கிரஸ் உபயோகிப்பதை ஆட்சேபித்து வந்திருக்கிறேன். இப்போது இரண்டு காங்கிரஸ் கட்சிகளும் இந்தக் கொடியை உபயோகிப்பதால் குழப்பம் முன்னிலும் அதிகமாகி யுள்ளது.



நாட்டைக்காக்க
ஜனநாயகத்தைக் காக்க





ராட்டைச் சின்னத்திற்கே

வாக்களியுங்கள்

நட்சத்திரச் சின்னத்திற்கே

வாக்களியுங்கள்

அவசரமான
காலைவேளையில்
ஐந்து செகண்டு
ஒதுக்குங்கள்



புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே
ஒரு கப் தயாரித்து
அருந்துங்கள் !



முற்றிலும் சுத்தமான
காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே !

NCE 6367

ஒரு நெஸ்லே தயாரிப்பு

மோகினித் தீவு

அமரர் கல்கி

ஏழாம் அத்தியாயம்

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த மோகினித் தீவின் சௌந்தரிய ராணி குறுக்கிட்டுக் கூறலுற்றாள்: "ஆமாம்! ஆமாம்! ஆண்பிள்ளைகள் மிக்க மன இரக்கம் உள்ளவர்கள். அதிலும் சுகுமார சோழனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. புவன மோகினியை நினைத்து நினைத்து அவன் உருகிக் கொண்டே போனான். அங்கே பாண்டிய குமாரிக்கு அன்றெல்லாம் கவலையாகவே இருந்தது. யாரோ ஊர் பேர் நிச்சயமாகத் தெரியாதவனிடம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்து விட்டோமே, அது சரியோ தவறோ, அதனால் என்ன விளையுமோ என்ற கவலை அவள் மனத்தை அரித்தது. இதைக் காட்டிலும் அதிக கவலை அளித்த ஒரு விஷயமும் இருந்தது. ஒற்றர் தலைவர் தினகரன் தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான் என்பது புவனமோகினிக்குத் தெரிந்திருந்தது. அதைக் குறித்துத் தந்தையிடம் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குச் சில சமயம் தோன்றிற்றாயினும், குற்றமுள்ள நெஞ்சு காரணமாக அதற்குத் தைரியம் உண்டாகவில்லை. இப்போது அந்தத் தினகரனால் மதிவாணனுக்கு ஏதாவது அபாயம் உண்டாகலாமல்லவா?— இந்தக் கவலை காரணமாக அரண்மனைச் சேவகர்களில் தன்னிடம் மிக்க பக்தியுள்ள ஒருவனை அழைத்து, தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வரச் சொன்னாள். அப்படிப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தவன், இளஞ்சிற்பியும் ஒற்றர் தலைவனும் சேர்ந்து குதிரை லாயத்துக்குப் போய் இரண்டு குதிரைகளில் ஏறிக் கொண்டு திருப்பரங்குன்றத்தை நோக்கிப் போனார்கள் என்று தெரிவித்தான். இதனால் புவனமோகினியின் மனக் கலக்கம் மேலும் அதிகமாயிற்று. அரண்மனையில் இருப்புக் கொள்ளவில்லை. தான் செய்துவிட்ட தவறினால் ஏதோ ஒரு விபத்து நடக்கப் போகிறது என்று அவளுடைய உள்மனத்தில் வேதனை நிறைந்த ஒரு மௌனக் குரல் அடிக்கடி இடித்துக் கூறிக்கொண்டிருந்தது. தினகரன் ஒற்றர் தலைவன் என்பது இளஞ் சிற்பிக்குத் தெரியாது தானே? அவனை நம்பி மோசம் போகிறானோ என்னமோ? அல்லது ஒருவேளை அந்த இளஞ் சிற்பியும் ஒரு வஞ்சகனோ? இருவரும் ஒத்துப் பேசிக் கொண்டு ஏதாவது தீங்கு இழைக்கப் போகிறார்களோ? உத்தம சோழர் மீது ஏதேனும் புதிய பழியைச் சுமத்தி அவருடைய உயிருக்கே உலை வைத்து விடுவார்களோ? இப்படிப் பலவாறு எண்ணி வேதனைப் பட்டாள். கடைசியில் அவளால் பொறுக்க முடியாமற் போயிற்று. அரண்மனை ரதத்தை அவசரமாக எடுத்து வரச் செய்து இரவு இரண்டாம் ஜாமத்தில் திருப்பரங்குன்றத்துச் சிறைக் கூடத்தை நோக்கிச் சென்றாள். முன்னும் பின்னும் அரண்மனைக் காவலர்கள் பாண்டிய குமாரியைத் தொடர்ந்து வந்தார்கள்.

சிறைக் கூடத்து வாசலுக்குப் பாண்டிய குமாரி வந்து சேர்ந்ததும், சிறைக் காவலர்கள் வியப்புடனே வந்து வணங்கி நின்றார்கள். 'யாராவது இங்கு வந்தார்களா? சிறைக்குள் இருக்கும் சோழ மன்னனைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்களா?' என்று அவர்களைக் கேட்டாள். 'ஆம், தாயே! இரண்டு பேர் வந்தார்கள். முத்திரை மோதிரத்தைக் காட்டிவிட்டு உள்ளே போனார்கள். சோழ மகாராஜாவைப் பார்த்துப் பேசிவிட்டுத் திரும்பியும் போய்விட்டார்கள்! வந்தவர்களில் ஒருவனைப் பார்த்தால் ஒற்றர் தலைவன் தினகரன் மாதிரி இருந்தது' என்று சிறைக் காவலர்களின் தலைவன் கூறினான்.

இதைக் கேட்டதும் புவனமோகினிக்கு ஓரளவு மன நிம்மதி ஏற்பட்டது. அதே சமயத்தில் சிறையில் கிடந்து வாடும் உத்தம சோழரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. காவலர்கள் முன்னும் பின்னும் தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு வர, புவன மோகினி சிறைக்குள் சென்று உத்தம சோழரை அடைத்திருந்த அறையை அடைந்தாள். அறைக்குள்ளே கருங்கல் மேடையில் சோழ மன்னர் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த காட்சியைப் பார்த்ததும் அவள் உள்ளம் உருகிற்று. ஆனால் அடுத்த நிமிஷம் அந்த உருவம் தலை நிமிர்ந்து பார்த்ததும் புவனமோகினிக்

குச் சொல்லி முடியாத ஆச்சரியம் உண்டாயிற்று. ஏனெனில் நிமிர்ந்து பார்த்த முகம் உத்தம சோழரின் முகம் அல்ல; அது பாண்டிய நாட்டு ஒற்றர் தலைவன் தினகரனுடைய முகம்!

பாண்டிய குமாரியும் மற்றவர்களும் வருவதை நிமிர்ந்து பார்த்துத் தெரிந்து கொண்ட ஒற்றர் தலைவன், 'மோசம், மோசம்! என்னை அவிழ்த்து விடுங்கள்! சீக்கிரம் அவிழ்த்து விடுங்கள்! இத்தனை நேரம் அவர்கள் வெகு தூரம் போயிருப்பார்கள்! உடனே அவர்களைத் தொடர்ந்து பிடிக்கக் குதிரை வீரர்களை அனுப்ப வேண்டும்!' என்று கத்தினான். உடனே சிறைக் காவலர்கள் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்கள். புவனமோகினி இன்னது நடந்திருக்க வேண்டும் என்று ஒருவாறு ஊகித்துக்கொண்டாள். தினகரனுடைய நிலையையும் அவனுடைய பதற்றத்தையும் கண்டதும் முதலில் அவளுக்குத் தாங்க முடியாத சிரிப்பு வந்தது. 'ஆமாம் அம்மணி! இன்றைக்குச் சிரிப்பீர்கள். நாளைக்கு அரசர் திரும்பி வந்தால் அப்போது தெரியும், எத்தனை பேர்களுடைய தலை உருளப் போகிறதோ? மதுரை நகரம் என்ன பாடுபடப் போகிறதோ!' என்றான்.

இதைக் கேட்ட புவனமோகினிக்கு நெஞ்சில் சிறிது பீதி உண்டாயிற்று. ஆயினும் வெளிப்படையாக வேண்டுமென்றே அதிகமாகச் சிரித்தாள். அன்றைக்கு இந்தத் தினகரன் சிற்பக் கூடத்தில் தன்னுடைய வேஷத்தைக் கலைத்து அவமானப்படுத்தியதற்கு இது தக்க தண்டனை என்று கருதினாள். பிறகு, 'ஒற்றா! வெறுமனே பதற்றப்படுவதில் என்ன பிரயோசனம்? நடந்ததை நிதானமாகச் சொல்லு!' என்றாள். 'நிதானமாகச் சொல்லச் சொல்கிறீர்



களே? அவர்கள் இத்தனை நேரமும் மதுரையைத் தாண்டிப் போயிருப்பார்களே? சீக்கிரம் அம்மா, சீக்கிரம்!' என்றான் தினகரன். 'அவர்கள் என்றால் யார்?' என்று புவனமோகினி கேட்டாள். 'உத்தம சோழரும் அவருடைய புதல்வர் சுகுமாரனும்தான். வேறு யார்?' என்றான் தினகரன்.

அப்போதுதான் புவனமோகினிக்குத் தான் செய்த தவறு எவ்வளவு பெரிது என்று தெரிந்தது. ஆயினும் தன்னுடைய கலக்கத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் 'அவர்கள் ஓடிப் போகும்படி நீ எப்படி விட்டாய்? ஒற்றர் தலைவன் என்ற உத்தியோகம் வேறு பார்க்கிறாயே?' என்றாள். 'ஆம் அம்மணி, என் பேரில் குற்றம் சொல்ல மாட்டீர்களா? ஊர் பேர் தெரியாத சிற்பியிடம் பாண்டிய சாம்ராஜ்யத்தின் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தது நானா, நீங்களா?' என்றான் தினகரன்.



'வாயை மூடிக்கொள்! முத்திரை மோதிரத்தை யாருக்காவது கொடுக்கிறேன், அதைக் குறித்துக் கேட்க நீ யார்? உத்தம சோழர் தப்பிச் செல்வதற்கு நீ உடந்தையாயிருந்தாய் என்று நான் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் எதற்காக அந்தப் பையனுடன் நீ இங்கு வந்தாய்? உன்னைச் சங்கிலியால் கட்டிப் போடும்வரையில் என்ன செய்தாய்? நீயும் இளஞ் சிற்பியும் சேர்ந்து சதி செய்துதான் உத்தம சோழரை விடுதலை செய்திருக்கிறீர்கள்!' என்று புவனமோகினி படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

'அம்மணி! என் மீது என்ன குற்றம் வேண்டுமானாலும் சாட்டுங்கள். ஆனால் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். நாலாபுறமும் குதிரை வீரர்களை அனுப்புங்கள்! முக்கியமாகத் தஞ்சாவூர்ச் சாலையில் அதிகம் பேரை அனுப்புங்கள். நான் வேண்டுமானால் இந்தச் சிறையிலேயே அடைபட்டுக் கிடக்கிறேன் — மகாராஜா திரும்பி வரும் வரையில்!' என்றான் தினகரன்.

'ஓகோ! சிறையில் அடைபட்டுக் கிடந்தேன். அதனால் ஓடியவர்களைப் பிடிக்க முடியவில்லை என்று சாக்குச் சொல்லப் பார்க்கிறாயோ? அதெல்லாம் முடியாது. உன்னாலேதான் அவர்கள் தப்பிச் சென்றார்கள். நீதான் அவர்களைப் பிடிக்க வேண்டும்' என்று பாண்டிய குமாரி சொல்லி, அவனை விடுவிக்கும்படி காவலர்களிடம் கூறினாள். விடுதலை அடைந்ததும் தினகரன் தலை தெறிக்க ஓடினான்.

ஒற்றர் தலைவனிடம் அவ்விதம் படாடோபமாகப் பேசினாளே தவிர, உண்மையில் புவனமோகினியின் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. தான் செய்த காரியத்தினால் விளைந்ததை எண்ணி ஒரு பக்கம் கலங்கினாள். இளஞ் சிற்பி உண்மையில் சோழ ராஜ குமாரன் என்பதை எண்ணியபோது அவள் சொல்ல முடியாத அவமான உணர்ச்சியை அடைந்தாள். அவன் தன்னை ஏமாற்றியதை நினைத்து அளவிலாக் கோபம் கொண்டாள். இரவுக்கிரவே முதன் மந்திரியை வரவழைத்து நடந்ததை அவரிடம் கூறி நாலாபக்கமும் குதிரை வீரர்களை அனுப்பச் செய்தாள். இத்தனைக்கும் நடுவில் அந்தப் பெண்ணின் பேதை உள்ளம் சுகுமாரனும் அவன் தந்தையும் தப்பிச் சென்றது குறித்து உவகை அடைந்தது. குதிரை வீரர்களுக்குக் கட்டளை தந்து அனுப்பும்போதே அவளுடைய இதய அந்தரங்கத்தில், அவர்கள் அகப்படாமல் தப்பித்துக் கொண்டு போய்விட வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. வீரர்கள் நாலா பக்கமும் சென்ற பிறகு, 'தாயே! மீனாட்சி! அவர்கள் அகப்படாமல் தப்பிச் செல்ல வேண்டும்!' என்று அவள் உள்ளம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தது.''

இந்தச் சமயத்தில் அந்தப் பெண்மணியின் நாயகன் குறுக்கிட்டு, ''புவனமோகினியின் பிரார்த்தனை நிறைவேறியது. சோழர்கள் இருவரும் அகப்படவேயில்லை. முத்திரை மோதிரத்தின் உதவியால் பாண்டிய நாட்

டின் எல்லையைக் கடந்து பத்திரமாகக் கொல்லிமலைச் சாரலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்'' என்றான்.

பெண்மணி தொடர்ந்து கூறினாள்: ''அவர்கள் தப்பிப் போய் விட்டார்கள் என்று தெரிந்ததும் தினகரன் புவனமோகினி மேல் தனக்கு வந்த கோபத்தைத் தேவேந்திரச் சிற்பியின் பேரில் காட்டினான். சோழ நாட்டு இளவரசனுக்குச் சிற்பக் கூடத்தில் இடம் கொடுத்து வைத்திருந்ததற்காக அவரைச் சிறையிலிட்டான். உத்தம சோழர் இருந்த அதே அறையில் தேவேந்திரச் சிற்பியை அடைத்து வைத்தான். உத்தம சோழர் தப்பிச் சென்ற செய்தியை முதன் மந்திரி உடனே ஓலையில் எழுதி அவசரத் தூதர்கள் மூலம் குடகு நாட்டில் போர் நடத்திக் கொண்டிருந்த பராக்கிரம பாண்டியருக்கு அனுப்பினார்.

பாண்டிய மன்னர் ஏற்கெனவே போரில் காயம் பட்டிருந்தார். இந்தச் செய்தி அவரை மனமிடிந்து போகும் படி செய்து விட்டது. உள்ளமும் உடலும் புண்பட்டு மிகவும் பலவீனமான நிலையில் பராக்கிரம பாண்டியர் மதுரைக்கு விரைந்து வந்தார். உத்தம சோழர் தப்பிச் சென்ற விவரங்களையெல்லாம் அறிந்ததும் அவரும் மகள் பேரில் வந்த கோபத்தைத் தேவேந்திரச் சிற்பியின் பேரில் காட்டினார். நாற்சந்தியில் அவரை நிறுத்திச் சவுக்கினால் அடிக்கும்படி கட்டளை யிட்டார். புவன மோகினி அவர் காலில் விழுந்து வேண்டிக்கொண்டும் பயனில்லை. தேவேந்திரச் சிற்பிக்குப் பதிலாகத் தன்னைத் தண்டிக்கும்படி கேட்டுக் கொண்டது, அவருடைய கோபத்தை அதிகமாக்கியது.

எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போன்ற ஒரு செய்தி அப்போது வந்தது. உத்தம சோழரும் குமாரனும் பெரிய படை திரட்டிக் கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருகிறார்கள் என்பதுதான். இதைக் கேட்ட பாண்டியர் தம் தேக நிலையைப் பொருட்படுத்தாமல் போர்க் களம் செல்ல ஆயத்தமானார். புவனமோகினிக்கு அப்போது தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரம் செய்ய ஒரு வழி தோன்றியது. 'அப்பா! நீங்கள் படுத்திருந்து உடம்பைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள். நான் சைன்யத்துக்குத் தலைமை வகித்துச் சென்று சோழர்களை முறியடித்து அவர்களுடைய கர்வத்தை ஒடுக்குகிறேன். அந்தச் சோழ ராஜகுமாரனை எப்படியாவது சிறைப்பிடித்து வருகிறேன்!' என்றாள். பராக்கிரம பாண்டியர் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். 'நீ என்னுடைய உண்மையான வீரப் புதல்விதான்; சந்தேகமில்லை. அப்படியே செய்!' என்று அனுமதி கொடுத்துத் தேவேந்திரச் சிற்பியையும் விடுதலை செய்தார். புவனமோகினி பாண்டிய சைன்யத்துக்குத் தலைமை வகித்துப் போர்முனைக்குச் சென்றாள்.'' (தொடரும்)

ஏழைபங்காளர்

கடந்த 9-2-71ந் தேதி இரவு சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நிகழ்ந்த தேர்தல் பொதுக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சிப் பிரமுகர் டாக்டர் எம். சந்தோஷம் அவர்கள் கூறிய ஒரு செய்தி:

பாரிஸ்டர் வரை படித்த காந்தியடிகள், சுகபோகத்தில் வாழ்வதற்குச் சகல வசதிகளும் படைத்த காந்தியடிகள் முழங்காலுக்கு மேல் துணிபுடுத்துக்கொண்டு ஏழையிலும் பரம ஏழையாக நம்மிடையே வாழ்ந்து காட்டியதை நாம் மறக்க முடியுமா? அண்ணல் வழி நின்று இன்று மூதறிஞர் ராஜாஜி நம்மிடையே எத்தகைய எளிய வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன்: சென்ற ஆண்டு கோடையின்போது ராஜாஜி உடம்பு முழுவதும் நிறைய வேர்க்குரு கிளம்பி அதனால் ஏற்கனவே நல்ல சிவப்பான அவரது உடம்பு மேலும் 'ஜெவஜெவ' என்று சிவந்து காணப்பட்டது. இதனால் அவர் சற்றுச் சிரமப்பட்டார். மருத்துவன் என்ற முறையில் ராஜாஜி தமது உடம்பை என்னிடம் காட்டி அதைக் குணப்படுத்த ஆலோசனை கேட்டார். நான் 'இதில் பயப்படும்படியாக ஒன்றுமில்லை. கோடை உஷ்ணம் தாங்காமல் வந்ததுதான் இது. தாங்கள் சில தினங்கள் உதகமண்டலத்துக்குப் போய் வந்தால் இது நன்கு குணமாகிவிடும்' என்றேன்.



ராஜாஜி இதற்கு உடன்படவில்லை. 'இந்த உடம்பைப் பார்த்துக்கொள்ள நான் இதுவரை எந்த மலை வாசஸ்தலத்துக்கும் போய் வந்ததில்லை. சாதாரண மக்கள் வாழ்வதுபோல், நான் வசிக்கும் இந்த இடத்தின் சீதோஷ்ண நிலையை மகிழ்ச்சியோடு அனுபவித்து வந்தாலே போதுமானது' என்றார்.

நான் உடனே 'அப்படி நீங்கள் ஊட்டி செல்ல இஷ்டப்படாவிட்டால் நீங்கள் பெரும்பாலும் தங்கும் இந்த ஓர் அறையையாவது 'ஏர்கண்டிஷன்' செய்து கொள்ளுங்கள். தங்கள் உடல்நிலைக்கு அது பூரண இதமளிக்கும்' என்றேன். புன்முறுவலுடன் மூத்த தலைவர் இந்த யோசனையையும் மறுத்தார். 'சாதாரண மக்களுக்குக் கிடைக்காத ஒரு சுகம் தனியாக எனக்குத் தேவையில்லை. அப்படி சொகுசாக இந்த உடம்பைக் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை' என்று கூறிவிட்டார். நான் வியந்து நின்றேன்.

தகவல்: அமர்தா வாசுதேவன்

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

65

ஒவ்வொரு ஸ்திரீயும் தனக்கு ஒரு கூடப் பிறந்த சகோதரி அல்லது தாய் அல்லது மகள் என்கிற எண்ணம் ஒருவன் கொண்டு விட்டால் அந்த எண்ணமே ஒவ்வொருவனுடைய உள்ளத்தை மேலே தூக்கித் தரும். கணவனும் மனைவியும் பிரமசரிய விரதத்தால் நஷ்டமடைய மாட்டார்கள். குடும்ப நிலையும்கூட முன்னைவிட நல்ல நிலைமை அடையும். அவர்களுக்கு இடையிலுள்ள அன்பு காமவிகாரத்தினின்று விடுபட்டுப் பரிசுத்தமடையும். அவர்களுடைய அன்பு இன்னும் பலம் பெறும். நிர்மலமான அன்பு வளர்ந்து ஒருவருக்கொருவர் முன்னைவிட அதிகமாக நல்ல பணி செய்வார்கள். குடும்பத்தில் நடைபெறும் சிறு பூசலுக்குக் காரணமில்லாமற் போகும். அன்பானது சிறுமையடைந்து சுயநலமாக மாறி விட்டாலேதான் பூசல்கள் உண்டாகின்றன.

நான் இதுவரையில் சொன்னதின் உண்மையைக் கண்டபின் பிரமசரிய விரதத்தினால் சரீரத்துக்கு உண்டாகும் நன்மையைப் பற்றி எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமுமிராது. நாம் பெற்றிருக்கும் உயிர்ச் சக்தியை வீணாக்கி நாசப்படுத்தி விடுவது எவ்வளவு அறிவீனம்? மூளைக்கும் உள்ளத்துக்கும் தேகத்துக்கும் வரம்பற்ற பலத்தைத் தரும்படியான ஒரு சக்தியைச் சிற்றின்பத்தில் வீணாக்கி இழந்து விடுகிறோம். இந்தத் துர்விநியோகமே பல நோய்களுக்குக் காரணம்.

பிரமசரியம் என்கிற விரதம் மற்ற விரதங்களைப் போலவே மனம், வாக்கு, காயம் மூன்றிலுமே காக்கப்பட வேண்டும். உடலில் மாத்திரம் பிரமசரியத்தைக் காத்து, மனத்தில் காமத்தை வளர்த்தால் அது பயனற்ற முயற்சியாகும். உடலுக்கு அது நல்லதாகாது. மனம் சென்ற வழியில் உடலும் இன்றோ நாளையோ கட்டாயமாகச் செல்லும். அசுத்தமான எண்ணங்களில் மனத்தைச் செல்ல விடுவது மடமையாகும். இவ்விடத்தில் ஒன்று சொல்ல வேண்டும். நாம் எவ்வளவு முயன்றாலும் மனமானது தவறிச் செல்லப் பார்க்கும். அதை நாம் தடுத்துக் கொண்டே வரவேண்டும். முடிவில் வெற்றியடைவோம். மனம் தீய வழியில் செல்லும் போது, அதை நாம் சத்துருவாகப் பாவித்து அதன் வழி நாமும் செல்லாமல் உள்ளத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

அநுபவத்தில் பார்க்கிறோம்; உடலைத் தடுக்கலாம். உள்ளத்தை அடக்கியாள்வது மிகக் கஷ்டம். இடையறாத கவனம் செலுத்த வேண்டும். தேகத்தை அடக்கியாண்டு கூடவே உள்ளத்தையும் இழுத்துப் பிடிக்க வேண்டும். நம்மால் செய்யக் கூடியதையெல்லாம் செய்தோமானால், ஆண்டவனுடைய உதவி கிடைக்கும். இந்திரியங்களை அடக்கி விட்டு மனத்தைத் தன்பாட்டுக்குச் செல்ல விட்டோமானால் பெரிய மோசத்துக்கு ஆளாவோம். பொய்யர்களாவோம். ஒவ்வொரு விநாடியும் ஜாக்கிரதையாக இருந்து ஓர் அசுத்தமான கருத்தானது வரும்போதே அது நெருங்காமல் தடுத்தோமானால் உடலும் உள்ளமும் சேர்ந்தாற்போல் பிழையின்றிச் செல்லும்.

பிரமசரிய விரதம் மிகக் கடினம். ஏன், முடியாத காரியம் என்றுகூடப் பலர் எண்ணுவார்கள். பிரமசரிய விரதம் இன்னதென்று சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பது இப்படி நினைப்பதற்கு ஒரு காரணம். பிரம்மசரியத்துக்கு விரிந்த பொருள் தராமல் குறுகிய பொருள் கொண்டு அதை நடத்தப் பார்க்கிறார்கள். ஆண் பெண் சேர்க்கை மட்டும் கூடாது என்று வைத்துக் கொண்டு மற்ற விதங்களில் எதேச்சையாக நடந்தோமானால் விரதத்தைக் காக்க முடியாது. எல்லாப் புலன்களையும் அடக்கி ஆண்டாலொழிய வெற்றி பெறமாட்டோம். ஒரு புலனை மட்டும் ஆளப் பார்ப்பது வீண். காதால் கேட்கும் கதைகள், பார்வையைச் செலுத்தும் காட்சிகள், ருசி தேடி, உண்ணும் உணவு முதலிய அனைத்திலுமே அபாயம் உண்டு. இந்தத் துறைகளில் இன்பம் கண்டு அநுபவித்துக் கொண்டு பிரம்மசரியத்தைக் காக்கப் பார்ப்பது வீணாகும். நெருப்பில் கை வைத்துக் கை சுடாமல் இருக்க வேண்டும் என்று விரும்புவது போலாகும். எல்லாப் புலன்களையும் அடக்கியாண்டாலேதான் வெற்றி காண்போம். பல துறைகளிலும் ஆசைகளை அடக்கியாள வேண்டும். எல்லாப் புலன்களையும் அடக்கியாள வேண்டும். அப்பொழுது தான் பிரம்மசரியத்தில் வெற்றிபெறுவோம். நாக்கை முதலில் அடக்கியாள வேண்டும். உண்ணும் உணவு அடிப்படையான விஷயம். நம்முடைய ஆசிரமத்தில் இதனாலேதான் ஆகாரக் கட்டுப்பாட்டை முக்கியமாக வைத்துக் கொண்டிருக்கிறோம்.

'சரியம்' என்றால் நடத்தை, அதாவது வாழ்க்கை முறை. மெய்ப்பொருளை, அதாவது பிரமத்தைத் தேடிச் செல்லும் பாதை அல்லது வாழ்க்கை முறை பிரம்மசரியம் என்பது. புலன்களை அடக்கியாள்வதே பிரம்மசரியம். எல்லாப் புலன்களை அடக்குவதும் அதில் அடங்கும். ஆண் பெண் சேர்க்கையைத் துறத்தல் மட்டுமல்ல.

(எரவாடா சிறையிலிருந்து எழுதியது)

ஏன் முடியாது?

உலகிலேயே மிக உயரமான பாலம்

அமெரிக்காவிலுள்ள அர்கான்ஸாஸ் நதிக்கு மேலாக ஒரு பாலம் 1929ல் கட்டப்பட்டது. கொலராடோ மாநிலத்தில் உள்ள இந்தப் பாலத்தின் விசேஷம் என்னவென்றால், நதி மட்டத்திலிருந்து 1053 அடி உயரத்தில் பாலம் கட்டப்பட்டுள்ளது! உலகிலேயே மிக உயரமான பாலம் இதுதான். இந்தப் பாலத்தின் ஒரு முனையில் நின்று கீழே பள்ளத்தாக்கினைப் பார்க்க உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். கிடுகிடு பள்ளம் தலையைச் சுற்ற, அடிவாரத்தில் ஒரு சிறு நீரோடை போல் தெளியும் அர்கான்ஸாஸ் நதியைக் காண்கிறார்கள்.

பள்ளத்தாக்கின் அடிவாரத்தில் நதியின் போக்கோடு ஒட்டிய மாதிரி ஒரு ரயில் பாதை அமைந்திருக்கிறது. இதுவும் ஓர் அதிசய படைப்புத்தான். 1848 ல் ஜே. ஸி. ஃப்ரீமாண்ட் இப்பகுதியில் ஒரு ரயில் பாதை அமைக்க முடியுமா என்று ஆராய்ந்து நடவாத காரியம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார். ஆயினும் இரண்டு ரயில்வே கம்பெனிகள் இங்கு இருப்புப்பாதை அமைக்கப் போட்டியிட்டன. இரு தரப்பினருக்கும் போட்டி பலமாக இருந்ததால் ஒருவர் அமைத்த இருப்புப் பாதைப் பகுதிகளை மற்றொருவர் பிடுங்கி எறியக்கூடத் துணிந்தனர்! துரிதமாக இருப்புப் பாதை அமைப்பதில் இருந்த சாமர்த்தியமோ, அல்லது மற்றவர் அமைத்த இருப்புப் பாதையைப் பிடுங்கி எறிவதில் காட்டிய வேகமோ எப்படியானாலும் இறுதியில் டென்வர் அண்டு ரியோ கிராண்டி கம்பெனியே வெற்றி பெற்றது. அவர்கள் அமைத்த இருப்புப்பாதை இன்றும் பயனாகிறது.

அமெரிக்காவின் டெல்மார்வா தீபகற்பத்திலிருந்து அந்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள பெரிய நகரங்களுக்குச் செல்வதென்றால் ரொம்பவும் சுற்றி வளைத்துக் கொண்டு போக வேண்டியிருந்தது. கடல் குறுக்கிட்டதால். காலதாமதமும் ஆயிற்று. ஆயின் 1965ல் செஸபீகே மேம்பாலமும் சுரங்கப் பாதையும் அமைத்ததன் விளைவாகப் பிரயாண காலம் வெகுவாகக் குறைந்து போய்விட்டது. பதின்மூன்று மைல் நீளத்துக்குக் கடலில் ஏராளமான தூண்கள் எழுப்பித் தாழ்வான பாலம் அமைத்திருக்கிறார்கள். இடையில் நாலு செயற்கைத் தீவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றும் ஒரு மைல் நீளமுள்ள இரண்டு 'டன்னல்'களும் கடலுக்கடியில் உருவாயின. இவையெல்லாம் இணைந்து கடல் மீது பதினேழரை மைல் நீளத்துக்கு அமைந்த ஒரு நெடுஞ்சாலையாகி விட்டன. இங்கு காரிலே சென்றால் பெரும்பாலான நேரம் கார், கடல் பரப்பு மீதே விரைந்து செல்வது போன்ற பிரமை ஏற்படும்!



ஹட்ஸன் ஆற்றின் அடிவாரத்தில் ஒரு 'டன்னல்' அமைக்கப் போகிறேன் என்று க்ளிஃபோர்டு ஹாலண்ட் கூறிய போது எச்சரிக்கை விடுத்தவர்களுள் பிரபல விஞ்ஞானி தாமஸ் எடிஸனும் ஒருவர். இந்தச் சுரங்கப் பாதை வழியே மான்ஹாட்டன் தீவிலிருந்து நியூஜெர்ஸி மாநிலத்துக்கு விரையும் கார்களும் அங்கிருந்து இங்கு வரும் கார்களும் சேர்ந்து வெளியிடும் புகையை டன்னலிலிருந்து வெளியேற்றுவது சாத்தியமல்ல என்று கருதினார் எடிஸன். அந்தப் புகை பலரைப் பலி வாங்கிவிடும் என்று கருதப்பட்டது. ஆயினும் ஹாலண்ட் தைரியமாகக் காரியத்தில் இறங்கினார். அவருடைய பிரதான பொறி இயல் நிபுணர், ஸிங்ஸ்டாட் டன்னல்களில் உள்ள அசுத்தக் காற்றை நீக்கித் தூய காற்றை உட்செலுத்தும் விசிறியை முதன் முதலாகக் கண்டுபிடித்து இந்தச் சுரங்கப் பாதையில் அதைப் பயன்படுத்தினார். 1927ல் சுரங்கப் பாதை திறந்து வைக்கப்பட்டபோது 51,000 கார்கள் முதல் நாளே இதன் வழியே சென்றன. ''டன்னலினுள்ளே காற்று மண்டலம் நியூயார்க் நகரில் காணப்படுவதை விடத் தூய்மையாகத்தான் இருக்கிறது'' என்று ஒரு பத்திரிகை எழுதியது. உலகிலேயே மிக நீளமான இந்தச் சுரங்கப் பாதையைக் கட்டி முடிக்க ஏழு ஆண்டுகள் ஆயின.

பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

அத்தியாயம் பதினன்கு

வானதியின் சபதம்

திடும் பிரவேசமாக உள்ளே புகுந்த ஆழ்வார்க்கடியானைப் பார்த்துக் குந்தவை, "திருமலை! நீ எப்படி இங்கே வந்து முளைத்தாய்? எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

"அம்மணி! எல்லாம் இந்த ஜோசியருடைய மோசடி வார்த்தையினால்தான்! இன்று காலையில் இவரிடம், 'நான் போகும் காரியம் வெற்றிகரமாக முடியுமா?' என்று கேட்டேன். 'முடியும்' என்று சொன்னார். ஆனால் இந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் போகக் கூட முடியவில்லை. காரியம் வெற்றி பெறுவது எப்படி? ஆகையினால்தான் சற்று முன் பழுவேட்டரையர் கூறியதை நான் ஆமோதித்தேன். இவருடைய ஜோதிட சாஸ்திரமே ஏமாற்றமா அல்லது இவர்தான் வேண்டுமென்று ஏமாற்றினாரா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு போக வந்தேன். பழுவேட்டரையரின் குரலை இங்கே கேட்டதும் இவர் பேரிலேயே எனக்குச் சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. ஆனால் தங்களை இங்கு நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றான்.

"என்னை நீ எதிர்பார்த்திருக்க முடியாதுதான். நீ எதற்காக வந்தாய்? என்ன காரியம் வெற்றி அடையுமா என்று ஜோதிடரைக் கேட்டாய்? இரகசியம் ஒன்றுமில்லையே?" என்றாள் இளவரசி.

"தங்களுக்குத் தெரிய முடியாத இரகசியம் என்ன இருக்க முடியும்? சக்கரவர்த்தியின் கட்டளைப்படி நேற்றிரவே முதன் மந்திரி என்னை நாகைப் பட்டினத்துக்குப் போகும்படி ஏவினார். இளவரசரைக் கையோடு அழைத்து வருவதற்காகத்தான். வழி



யில் செம்பியன் மாதேவியைப் பார்த்து அவரிடமும் ஓர் ஓலையைக் கொடுத்துப் போகும்படி ஏவினார். தாங்கள் எப்போது தஞ்சையிலிருந்து கிளம்பினீர்கள், தேவி?''

''பொழுது விடிந்து சிறிது நேரத்துக்குப் பிறகு கிளம்பினோம். இதை ஏன் கேட்கிறாய், திருமலை?''

''கொடும்பாளூர்ப் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு விட்டனவா என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன்.....''

'' என்ன? என்ன?''

''ஆம், தேவி ! தங்களுக்குத் தெரியாதா, என்ன? நேற்றிரவு சக்கரவர்த்தியைப் பார்த்து விட்டு முதன் மந்திரி அவருடைய மாளிகைக்குத் திரும்பி வந்த போது இரண்டு செய்திகள் காத்திருந்தன. ஒன்று தான் நாகைப்பட்டினத்திலிருந்து இளவரசர் புறப்பட்டு வருகிறார், பெரும் ஜனக் கூட்டம் புடைசூழ வந்து கொண்டிருக்கிறார் என்பது......''

''அதை நானும் இன்று காலை அறிந்தேன். என் தம்பியை இங்கேயே தடுத்து நிறுத்திக் கொள்வதற்காகவே புறப்பட்டு வந்தேன். இன்னொரு செய்தி என்றாயே, அது என்ன?''

ஆழ்வார்க்கடியான் வானதியைச் சுட்டிக்காட்டி, '' அம்மா ! இந்தக் கொடும்பாளூர் இளவரசியை எதற்காக அழைத்துக் கொண்டு வந்தீர்கள் ?'' என்று கேட்டான்.

''அவள் எப்போதும் வருவது போல் இப்போதும் வந்தாள்; அழைத்து வந்தேன். எதற்காகக் கேட்டாய்?''

'' இரண்டாவது செய்தியை இந்த இளவரசி இருக்கும்போது சொல்லத் தயக்கமா யிருக்கிறது.''

''சொல், திருமலை! இவள் எனக்கு எவ்வளவு அந்தரங்கமானவள் என்பது உனக்குத் தெரியாதா ? எனக்குத் தெரியக் கூடியது எதுவும் இவளுக்கும் தெரியலாம்......''

'' ஆனாலும் இந்த இளவரசிக்குச் சம்பந்தப்பட்ட காரியம் அது. தென் திசைச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி ஒரு மாபெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு தஞ்சைக் கோட்டையை நெருங்கி வந்துகொண்டிருக்கிறார் என்று நேற்றிரவு முதன் மந்திரிக்குச் செய்தி வந்தது. சேனாதிபதியிடமிருந்து ஓர் ஓலையும் முதன் மந்திரிக்கு வந்தது. சக்கரவர்த்தியைத் தஞ்சைக் கோட்டையிலும் சின்ன இளவரசரை ஏதோ ஓர் இரகசிய இடத்திலும் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக அதில் குற்றம் சாட்டியிருந்தது. பழுவேட்டரையர்கள் தனாதிகாரி பொறுப்பையும் தஞ்சைக் காவல் பொறுப்பையும் உடனே விட்டு நீங்க வேண்டும் என்றும், இளவரசரைக் கொண்டு வந்து ஒப்பு

விக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தது. இல்லாவிட்டால் இன்று மாலைக்குள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை ஆரம்பமாகி விடும் என்று எழுதியிருந்தது. அம்மணி! தஞ்சைக்குத் தெற்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் ஏற்கனவே கொடும்பாளூர்ப் படைகள் நெருங்கி வந்து விட்டனவே? தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது. முதன் மந்திரி இதைப் பற்றி ஒரு வார்த்தையும் என்னிடம் சொல்லவில்லையே?''

''சொல்லியிருந்தால் நீங்கள் ஒரு வேளை தஞ்சைக் கோட்டையை விட்டுப் புறப்பட்டிருக்க மாட்டீர்கள். முக்கியமாக, கொடும்பாளூர் இளவரசியை உடனே வெளியேற்றிவிட முதன் மந்திரி விரும்பியிருக்கலாம்......''

''அது ஏன்? இவள் அங்கு இருந்தால் என்ன நேர்ந்துவிடும்?''


''இந்த இளவரசியைச் சின்னப் பழுவேட்டரையர் ஒருவேளை சிறைப்படுத்தினாலும் படுத்தி விடுவார்.....''

''அவ்வளவு துணிச்சல் அவருக்கு வந்து விடுமா? மெய்யாகவே இதை நீ சொல்கிறாயா?''

''ஆம், தேவி! மேலும் தென் திசைச் சேநாதிபதி சொல்லி அனுப்பிய செய்தியைக் கேட்டால் தாங்களே அறிந்து கொள்வீர்கள்......''

''என்ன? மேலும் என்ன?''

''இளவரசர் அருள்மொழிவர்மருக்கும் கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிக்கும் உடனே திருமணம் நடத்தியாக வேண்டும் என்றும், ஆதித்த கரிகாலர் தமக்கு இராஜ்யம் வேண்டாம் என்று சொல்வதால் அருள்மொழிச் சோழரையே அடுத்த பட்டத்துக்கு உரியவராக யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். இதற்கெல்லாம் சம்மதிக்கா விட்டால் தஞ்சைக் கோட்டையை மூன்றே நாட்களுக்குள் தரைமட்டமாக்கி விடுவேன் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். சோழ நாட்டு மக்கள் தம்மை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்....''



இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வானதி, ''அக்கா! என் பெரியப்பாவுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''ஏன், வானதி, அப்படிச் சொல்கிறாய்? வெகுகாலமாகப் பலர் மனத்தில் இருந்த விஷயத்தையே உன் பெரியப்பா இப்போது பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். பழுவேட்டரையர்கள் 'மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட வேண்டும்' என்று முயற்சி தொடங்கியிருப்பதனால் கொடும்பாளூர் மன்னரும் திருக்கோவலூர் மலையமானும் இவ்விதம் வெளிப்படையாகச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்........''

''ஆம், தாயே. திருக்கோவலூர் மலையமான்கூட இதற்குள் ஒரு பெரிய சைன்யத்துடன் கடம்பூர் கோட்டைக்குச் சமீபம் வந்திருப்பார். என்னிடம் அவர் பேசியதிலிருந்தே அவ்வாறுதான் ஊகித்தேன். முதன் மந்திரிக்கும் தகவல் கிடைத்திருக்கிறது......''

''ஆனால் இப்போது நான் அறிந்திருக்கும் செய்திகள் அவர்கள் இருவருக்கும் தெரியாது. அவர்கள் இரண்டு பேருடனும் நான் பேசி உள்நாட்டுச் சண்டை நேராமல் தடுத்தாக வேண்டும். எப்படிச் செய்யப் போகிறேனோ, தெரியவில்லை.......''

''தாயே! நிலைமை இப்பொழுது மிகவும் முற்றிப் போய் விட்டது. இனிமேல் ஒரு பெரிய பாரத யுத்தம் நடந்தே தீரும் போலிருக்கிறது....''

''இதைப் பாரத யுத்தம் என்று கூறியது ரொம்ப சரி, திருமலை! இப்போது யுத்தம் மூண்டால் அது ஒரு சகோதரச் சண்டையாகத்தான் இருக்கும். உற்றார் உறவினருக்குள்ளே நிகழும் சர்வநாச யுத்தமாக இருக்கும். வானதி! இதைக் கேள்! என் பாட்டனாரின் தகப்பனார் புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி பழுவேட்டரையர் குலத்தில் பெண் கொண்டார். அவருடைய மகள், — என் சிறிய பாட்டி, —கொடும்பாளூரின் அரசரை மணந்து கொண்டார். என் பாட்டனார் அரிஞ்சயர் கொடும்பாளூர்ப் பெண்ணை மணந்து கொண்டார். என் தந்தையோ திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்திருக்கிறார். இப்படி இந்த மூன்று குல மன்னர்களும் எங்கள் குலத்துடன் நெருங்கிய உறவு பூண்டவர்கள். ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்து போனவர்கள். ஆயினும் அவர்கள் இப்போது கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்கு ஆயத்தமாகி வருகிறார்கள்! இந்த விதியை என்னவென்று சொல்கிறது?— இவர்களுடைய சண்டையினால் சோழ ராஜ்யமே அழிந்து விடும் போலிருக்கிறது........''

''அக்கா! எனக்கு அதைப்பற்றியெல்லாம் கவலை இல்லை. எப்படியாவது சண்டைபோட்டுக் கொண்டு சாகட்டும். ஆனால் இதில் என் பெயரை என் பெரிய தகப்பனார் எதற்காக இழுக்க வேண்டும்? உடனே திரும்பிப் போய் என் பெரியப்பாவைப் பார்த்துச் சண்டை பிடிக்க வேண்டும் என்று தோன்றுகிறது....''

''அதனால் என்ன பயன், கண்ணே! நீ சொல்வதை உன் பெரிய தகப்பனார் கேட்க மாட்டார். நீயும் நானும் சேர்ந்து மன்றாடினாலும் பயன்படாது. சிறு வயதுப் பெண்களாகிய நாம் சொல்வதை உன் பெரியப்பாவைப் போன்ற கிழவர்கள் கேட்கமாட்டார்கள். என் தம்பி அருள்மொழி வர்மன் மூலமாகத்தான் இந்தச் சண்டை நேராமல் தடுக்க முடியும். திருமலை! நீ போனவன் ஏன் திரும்பி வந்தாய்? அருள்மொழி இப்போது எங்கே இருக்கிறானாம்?''

''திருவாரூரிலிருந்து நேற்றிரவே புறப்பட எண்ணியதாகக் கேள்வி. ஆனால் வழியெல்லாம் ஒரே வெள்ளக் காடாக இருப்பதால் வர முடியவில்லையாம். நானும் பழையாறைக்கு அப்பால் போகப் பார்த்து முடியாமல் திரும்பி வந்தேன். குடமுருட்டி உடைப்பெடுத்து ஒரே சமுத்திரமாகச் செய்திருக்கிறது.......''

''எப்படியும் வெள்ளம் வடியும். அதற்குப் பிறகு அருள்மொழி இந்த வழியாக வந்துதானே ஆக வேண்டும்? அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். அதற்குள் தஞ்சையில் ஏதேனும் விபரீதம் நேர்ந்து விடப் போகிறதே என்று கவலையாயிருக்கிறது. திருமலை! நீ உடனே தஞ்சாவூர் திரும்பிப் போய்க் கொடும்பாளூர் மன்னரைக் கண்டு நான் சொல்லும் செய்தியைச் சொல்ல முடியுமா? அருள்மொழி வரும் வரையில் தஞ்சைக் கோட்டையை முற்றுகையிடவேண்டாம் என்றுதெரிவிப்பாயா?''

''அக்கா! நானும் இவருடன் தஞ்சைக்குப் போகட்டுமா?''

''நீ இந்த மனிதருடன் போய் என்ன செய்வாய், என் கண்ணே!''

''போய் என் பெரிய தகப்பனாருடன் சண்டை பிடிப்பேன்.....''

''என்னவென்று சண்டை பிடிப்பாய்? உன் பேச்சை அவர் கேட்டுச் சண்டையை நிறுத்தி விடுவாரா?''

''சண்டையை நிறுத்தினால் நிறுத் தட்டும்; நிறுத்தா விட்டால் எப்படி யாவது நாசமாகப் போகட்டும். என் பெயரை இதில் இழுக்க வேண்டாம் என்று வற்புறுத்துவேன்.''

'' உன் பெயரை இழுக்கிறார்களா? அது எதற்காக ?''

''சற்று முன் இந்த வீர வைஷ்ணவர் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா, அக்கா?'' என்று வானதி கூறி வெட்கத் தினால் தலை குனிந்தாள்.

''உன்னைப் பற்றி யார் என்ன சொன் னார்கள்? திருமலை! நீ இந்தப் பெண்ணைப் பற்றி என்ன சொன்னாய்?''

'' இவரைப் பொன்னியின் செல்வ ருக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று சேநாதிபதி வற்புறுத்துவதைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதைக் குறிப்பிடுகிறார் போலிருக்கிறது !''

''வானதி ! அதில் என்ன உனக்கு ஆட்சேபம்? பொன்னியின் செல்வனை மணந்து கொள்வதற்கு உனக்குப் பிரியம் இல்லையா ?''

''பிரியம் இருக்கிறதோ, இல்லையோ, அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு? கலியாணத்தையும் பட்டம் கட்டுவதை யும் என் பெரிய தந்தை சேர்த்துப் பிரஸ் தாபிப்பதைத்தான், நான் ஆட்சேபிக் கிறேன். என்னைச் சோழ சிம்மாசனத் தில் ஏற்றுவிப்பதற்காகவே என் பெரிய தந்தை இந்தச் சண்டையை ஆரம்பிக் கிறார் என்றல்லவா ஏற்படுகிறது?....''

இச்சமயத்தில் ஒரு பெண்ணின் குரல், ''கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மா சனம் ஏறுவது என்றாலே ரொம்ப வெறுப்புப் போலிருக்கிறது!'' என்று கூறியதைக் கேட்டு எல்லாரும் அக்குரல் வந்த இடத்தைப் பார்த்தார்கள். அங்கே ஓடக்காரப் பெண் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள்.

குந்தவை அவளை வியப்புடன் பார்த்து, '' பெண்ணே ! நீ எப்படி இங்கே வந்தாய்? இன்று காலை உன்னை யும் ஈழத்து ராணியையும் காணாமல் நாங்கள் தேடி அலைந்தோமே ? உன் அத்தை எங்கே?'' என்று கேட்டாள்.

''தேவி! மன்னிக்க வேண்டும்! என் அத்தை என்னைப் பலவந்தமாகப் பழு வூர் அரண்மனையின் சுரங்க வழியாகப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கோட்டைக்கு வெளியே அனுப்பிவிட் டாள். நான் தஞ்சை அரண்மனையில் ஒரு நாள் இருப்பதுகூட என் அத்தைக் குப் பிடிக்கவில்லை! எனக்கும் அரண் மனை வாழ்வு பிடிக்கவில்லைதான் ! கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மாச னமே வெறுத்துப் போயிருக்கும் போது, என்னைப் போன்றவர்களுக்கு அரண் மனையில் வசிக்க எப்படிப் பிடிக்கும் ?'' என்றாள் பூங்குழலி.

''பெண்ணே! எதையோ கேட்டால், எதையோ சொல்லுகிறாயே? உன் சித் தம் சரியான நிலையில் இல்லை போலிருக் கிறதே ?'' என்றாள் குந்தவை.

''அக்கா! அவள் சித்தம் சரியாகத் தான் இருக்கிறது. என்னைக் கேவலப் படுத்துவதற்காக வேண்டுமென்று இப் படிப் பேசுகிறாள். நான் சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறி மகாராணி ஆகவேண் டும் என்று ஆசை கொண்டிருக்கிறேனாம்! அதற்காகத்தான் தங்கள் தம்பியை — பொன்னியின் செல்வரை — மணக்க விரும்புகிறேனாம் ! இவளுடைய மனசு எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது!'' என்றாள் வானதி.

'' பாம்பின் கால் பாம்பு அறியும் என்ற பழமொழி பொய்யாகப் போகுமா ?'' என்றாள் பூங்குழலி.

''பெண்களே! நிறுத்துங்கள்! எந்தச் சமயத்தில் என்ன பேசுவது என்றே உங்களுக்குத் தெரியவில்லை, பூங்குழலி! உன் அத்தை இப்போது எங்கே இருக் கிறாள்?'' என்று குந்தவை கேட்டாள்.

''பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் இருக்கிறாள்.''

''எதற்காக?''

''அங்கே யாரோ ஒரு கொலைகாரன் கையில் வேலுடன் ஒளிந்து கொண்டிருக் கிறான். ஆகா! அவனை நாங்கள் இருவ ரும் இன்று அதிகாலையில் படுத்திவைத்த பாட்டை நினைத்தால்! எங்கள் இரு வரையும் இரண்டு பெண் பேய்கள் என்று நினைத்துக் கொண்டு அவன் மிரண்டு போய் அங்குமிங்கும் ஓடியதை எண்ணினால்....!'' என்று கூறிவிட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

இந்தப் பெண்ணுக்குச் சித்தப் பிரமைதான் என்று குந்தவை மனத்தில் எண்ணிக் கொண்டு, ''அப்புறம் சொல்! அவன் யார்? எதற்காக அங்கே ஒளிந் திருக்கிறான்? உங்களுக்கு எப்படி அது தெரிந்தது?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது, தேவி ! என் அத்தைக்கு வாய் பேச முடியாவிட்டாலும் காது கேளாவிட் டாலும், நமக்கெல்லாம் தெரியாத விஷ யங்களைத் தெரிந்து கொள்ளும் அதிசய மான சக்தி உண்டு. அரண்மனையில் உள்ள யாரோ ஒருவரைக் கொல்வதற் காக அவன் அங்கே காத்திருக்கிறான் என்று எப்படியோ அறிந்து கொண் டாள். தேவி! பத்துத் தலை இராவணைக வரனுடைய கைகளை உடைப்பதற்கு

என் அத்தை பிரயத்தனப்பட்டாளே? அது எதற்கு என்று தெரியுமா?''

''தெரியாது; உனக்குத் தெரிந்தால் உடனே சொல்லு!''

''என் அத்தை இராவணன் கரங்களைத் தகர்க்க முயன்றதைப் பார்த்த போது நீங்கள் எல்லாரும் அவளைப் பிச்சி — பைத்தியக்காரி என்று நினைத்தீர்கள். ஆனால் என் அத்தை பிச்சி அல்ல. அந்த இராவணன் கைகளுக்கு மத்தியிலே தான் பழுவேட்டரையரின் நிலவறைப் பொக்கிஷத்துக்குப் போகும் சுரங்கப் பாதை இருக்கிறது.....''

''ஆகா! அப்படியா?'' என்று குந்தவை அதிசயித்தாள்.

''ஈழத்து ஊமை ராணி சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு எப்படி வந்தாள் என்பதும் இப்போது தெரிகிறது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''இத்தனை நாட்களும் அரண்மனையிலிருந்த நமக்கு அப்படி ஒரு சுரங்க வழி இருப்பது தெரியாமற் போயிற்றே? இருக்கட்டும்; நீ ஏன் உடனே அரண்மனைக்கு வந்து எங்களிடம் இதையெல்லாம் சொல்லவில்லை? உன் அத்தையைத் தனியாக விட்டு விட்டு ஏன் வந்து விட்டாய்?'' என்றாள் இளையபிராட்டி.

''அத்தையின் பிடிவாதந்தான் காரணம். அங்கே ஒளிந்திருப்பவனைத் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி என்னை வெளியே அனுப்பி விட்டாள்!''

''ஏன்? ஏன்? அதைவிட முக்கியமான காரியம் எதற்காகவாவது உன்னை அனுப்பினாளா?''

''ஆம், அம்மணி!''

''அது என்ன, பெண்ணே!''

''பொன்னியின் செல்வருக்கும் ஏதோ ஆபத்து வரப் போகிறது என்று என்னுடைய அத்தை தன் அதிசய சக்தியினால் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் இருக்குமிடத்துக்குப் போகும்படி என்னை அனுப்பினாள்!''

''ஆகா! பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைத் தேடித்தான் நீ போய்க் கொண்டிருந்தாயா? அப்படியானால் ஏன் நின்று விட்டாய்?''

''இல்லை, தேவி! உண்மையைச் சொல்லி விடுகிறேன். அரண்மனைக் காரியங்களில் இனிமேல் தலையிடுவதில்லையென்று தீர்மானித்து விட்டேன். கோடிக்கரைக்குப் போய்க் கொண்டிருந்தேன். வழியில் இந்த வீர வைஷ்ணவன் என்னைச் சந்தித்து இங்கே அழைத்துக் கொண்டு வந்தான்!..... நீங்கள் இருப்பது தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்!''

''பெண்ணே! அரண்மனை உனக்கு ஏன் அவ்வளவு வெறுத்துப் போய் விட்டது? எங்களை ஏன் பிடிக்காமல் போய் விட்டது? உன்னை யார் என்ன செய்து விட்டார்கள்?'' என்று இளையபிராட்டி குந்தவை கேட்டாள்.

''என்னை யாரும் எதுவும் செய்துவிடவில்லை. யார் பேரிலும் எனக்குக் குறையும் இல்லை. சில பேருக்குச் சிம்மாதனம் பிடிக்காமலிருப்பது போல் எனக்கும் அரண்மனை வாழ்வு பிடிக்கவில்லை! அவ்வளவுதான்!'' என்று பூங்குழலி கூறிவிட்டு, வானதியைக் கடைக் கண்ணால் பார்த்து நகைத்தாள்.

அதைக் கவனித்த வானதி ஆவேசம் வந்தவள்போல் ஓர் அடி முன்னால் வந்து கூறினாள்: ''அக்கா! இவள் மறுபடியும் என்னைத்தான் ஏசிக் காட்டுகிறாள். நான் சொல்கிறேன், கேளுங்கள். தங்கள் திருப் பாதங்களின் ஆணையாகச் சொல்கிறேன். ஆகாசவாணி பூமாதேவி சாட்சியாகச் சபதம் செய்கிறேன். பொன்னியின் செல்வர் இந்தக் கண்டத்திலும் தப்பிப் பிழைத்தாரானால், அவர் மனமுவந்து என்னைக் கரம் பிடித்து மணந்து கொண்டாரானால், அத்தகைய பெரும் பேறு எனக்குக் கிடைத்ததானால், தஞ்சை அரண்மனைச் சிம்மாதனத்தில் நான் ஒரு நாளும் உட்காரவே மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!''

அத்தியாயம் பதினைந்து

கூரை மிதந்தது!

அனைவரும் திகைத்துப் போனார்கள்.

இளையபிராட்டி கோபமும் பரிதாபமும் கலந்து பொங்கிய குரலில், ''பெண்ணே! இது என்ன சபதம்? எதற்காகச் செய்தாய்? இப்படியும் ஒரு மூடத்தனம் உண்டா? ஏதோ வெறி பிடித்தவள் போல் அல்லவா பிதற்றி விட்டாய்?'' என்றாள்.

''இல்லை, அக்கா! இல்லை! எனக்கு வெறி இல்லை. என் அறிவே தெளிவாயிருக்கிறது. பல நாட்களாக யோசித்து என் மனத்துக்குள் முடிவு செய்து வைத்திருந்ததையே இப்போது பலர் அறியக் கூறினேன்'' என்றாள் வானதி.

அதற்குக் குந்தவை மறுமொழி சொல்வதற்குள் பூங்குழலியின் சிரிப்பு

அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே இப்போது வெறிபிடித்து விட்டது போலத் தோன்றியது. முதலில் கலகலவென்று சிரித்தாள். பிறகு, முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். பின்னர் திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு மெல்லிய குரலில்,

''அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?''

என்று பாடத் தொடங்கினாள்.

குந்தவை ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''இந்த இரண்டு பெண்களும் சேர்ந்து என் மனத்தையும் குழப்பிப் பைத்தியமாக்கி விடுவார்கள் போலிருக்கிறது. திருமலை! இளவரசரைப் பார்க்கப் புறப்பட்டவன் இவளை எதற்காக இங்கு அழைத்துக் கொண்டு திரும்பி வந்தாய்?'' என்று கேட்டாள்.

''தேவி! பொன்னியின் செல்வரைச் சந்திப்பதற்குத்தான் புறப்பட்டுச் சென்றேன். வழியெல்லாம் ஒரே வெள்ளமாயிருந்தபடியால் போக முடியவில்லை. என்னைப் போலவே இவளும் தடைப்பட்டு நிற்பதைப் பார்த்தேன். படகு சம்பாதித்துக் கொடுத்தால் தள்ளிக்கொண்டு போய்த் திருவாரூர் சேர்ப்பதாகச் சொன்னாள். அதற்காக ஜோதிடரிடம் திரும்பி வந்தேன். கோயிலுக்குப் பக்கத்தில் தங்கள் ரதப் படகைப் பார்த்ததும் சந்தோஷமாயிற்று. தங்களிடம் கேட்டுப் படகு வாங்கிச் செல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் பழுவேட்டரையர் ரதத்தோடு படகையும் கொண்டு போய் விட்டார்!''

''இப்போது என்ன யோசனை செய்கிறாய்? பழுவேட்டரையர் கூறியதையெல்லாம் நீயும் கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா?'' என்றாள் குந்தவை.

''ஆம், தாயே! அதைக் கேட்ட பிறகு இங்கே வீண் போகும் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றுகிறது. இந்தப் பெண் சொல்வதிலிருந்தும் சக்கரவர்த்தியை உண்மையிலேயே பயங்கரமான அபாயம் நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது முதன் மந்திரிக்குக்கூடத் தெரியாது. ஆகையால் தாங்கள் கொடும்பாளூர் இளவரசியை அழைத்துக் கொண்டு உடனே தஞ்சாவூருக்குச் செல்லுங்கள். கொடும்பாளூர் படைகள் ஒருவேளை கோட்டையை முற்றுகையிட்டிருந்தால் தங்களைத் தவிர யாராலும் அப்படைகளைத் தாண்டிக்கொண்டு போக முடியாது. வானதி தேவியும் தங்களுடன் வந்தால் அதிக வசதியாகப் போய்விடும். நான் இந்த ஓடக்காரப் பெண்ணைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு, ஒரு படகு சம்பாதித்துக் கொண்டு பொன்னியின் செல்வரிடம் போகிறேன். ஜோதிடரின் சீடனைப் படகு கொண்டு வருவதற்காக ஏற்கனவே அனுப்பிவிட்டேன்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

வானதி திடுக்கிட்டு எழுந்தவள் அவனை வெறிக்கப் பார்த்து, ''முடியாது! முடியாது! பொன்னியின் செல்வரிடந்தான் போவேன்! செத்தாலும் அவர் காலடியிலேதான் சாவேன்!'' என்றாள்.

அதைக் கேட்ட பூங்குழலி 'கிறீச்' என்ற குரலில், ''வைஷ்ணவரே! நான் உம்முடன் வர முடியாது! கோடிக்கரையில் என் காதலர்கள் என்னை அழைக்கிறார்கள்! நள்ளிரவில் நெருப்பைக் கக்கும் என் காதலர்கள் என்னை அழைக்கிறார்கள்! இளவரசி ஓலை கொடுத்து அனுப்பினாரே, அந்த வாணர் குல வீரருக்குக்கூட என் காதலர்களை நான் காட்டினேன். அவர்களிடம் நான் போக வேண்டும்!'' என்று கூவினாள்.

இதுவரையிலும் இவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு திகைத்து நின்ற ஜோதிடர் இப்போது குறுக்கிட்டார். ''அம்மா! அம்மா! எல்லாரும் சற்றுச் சும்மா இருங்கள்!'' என்று இரைந்து கத்தினார்.

ஒரு நிமிடம் அங்கே பேச்சின் ஒலி நின்றிருந்தது அப்போது வேறோர் ஒலி,—ரோமாஞ்சனத்தை உண்டாக்கும்படியான பேரொலி,—புயல் அடிக்கும் போது அலைகடலில் உண்டாகும் இரைச்சலையொத்த பேரோசை, — கேட்டது.

''தாய்மார்களே! இந்தச் சந்தர்ப்பம் பார்த்து நீங்கள் இந்தப் பாவியின் குடிசைக்கு வந்தீர்களே! நான் நாட்டுக்கெல்லாம் ஜோதிடம் சொல்லி வந்தவன். உங்களுக்கு எச்சரிக்கை செய்து அனுப்பாமல் இருந்துவிட்டேனே?'' என்று ஜோதிடர் புலம்பினார்.

''ஐயா! இது என்ன? புதிய அபாயம் எங்களுக்கு என்ன வருகிறது?'' என்று குந்தவை கேட்டாள்.

''தாயே! அரசலாற்றில் வெள்ளம் பெருகி வடகரையை உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறது என்று காலையிலேயே என் சீடன் சொன்னான். அரசலாறு உடைத்துக் கொண்டால் அந்த ஜலமெல்லாம் காவேரியில் வந்து விழும். காவேரி கரை புரண்டால் இந்த ஏழையின் வீடு அடியோடு முழுகிப் போய் விடும். காவேரிக்கு வெகு சமீபத்தில் இந்த வீடு இருக்கிறது. வாருங்கள்!

வாருங்கள்! வெளியே வாருங்கள்!'' என்று ஜோதிடர் கதறிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே ஓடினார்.

எல்லாரும் அவரைத் தொடர்ந்து வெளியேறினார்கள். பீதி கொண்ட முகத் தோற்றத்துடன் ஜோதிடர் ''அதோ!'' என்று சுட்டிக் காட்டினார். அவர் சுட்டிக்காட்டிய தென் மேற்குத் திசையில் ஓர் அபூர்வமான காட்சி தென்பட்டது. அரைத் தென்னை மரம் உயர முடைய ஒரு பசுமையான சுவர்,—நீண்டு படர்ந்து ஓரளவு வளைந்திருந்த விசால மான சுவர், — அந்த வீட்டை நோக்கி இரைச்சலிட்டுக் கொண்டு வந்ததைக் கண்டார்கள். காவேரியின் கரை உடைந்து நீர் வெள்ளம் அப்படிச் சுவரைப் போல் நகர்ந்து வருகிறது என்பதை அங்கிருந்த அனைவரும் ஒரு நொடியில் அறிந்து கொண்டார்கள்.

''அம்மா! வாருங்கள்! எல்லாரும் ஓடி வாருங்கள்! அம்மன் கோயில் மண்டபத்தின் மீது ஏறி நிற்கலாம்! வேறு தப்ப மார்க்கம் இல்லை! திருமலை என் சிடனைப் படகு கொண்டுவர அனுப்பியதே நல்லதாய்ப் போயிற்று! ஓடி வாருங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே ஜோதிடர் வழிகாட்டினார்.

மற்றவர்களும் அவரைப் பின்பற்றினார்கள். எல்லாருக்கும் முன்னதாகக் கோவில் மண்டபத்தை அடைந்து அதில் தாவி ஏறினாள் பூங்குழலி.

இதற்குள் வெள்ளம் கோயில் அருகிலும் வந்து சூழ்ந்து கொண்டு விட்டது. கீழே நின்றவர்களின் முழங்கால்வரை ஏறிவிட்டது. ஜோதிடரும் ஆழ்வார்க்கடியானும் தத்தித் தடுமாறி மண்டபத்தின் மீது ஏறினார்கள்.

குந்தவையும் வானதியும் மட்டும் இன்னும் கீழே நின்றார்கள்.

இருவரும் ஏற முயன்றார்கள். மேலேயிருந்த பூங்குழலி இளையபிராட்டியின் கைகளைப் பிடித்துத் தூக்கி விட்டாள்.

வானதி மட்டும் கீழே நின்றாள். அவள் இரண்டு தடவை ஏற முயன்று இரண்டு தடவையும் கைதவறி விட்டு விட்டாள்.

மேலே இருந்த இரு பெண்மணிகளும் அவளைப் பிடித்து மண்டபத்தில் தூக்கிவிட முயன்றார்கள்.

பூங்குழலி ஒரு கரத்தையும் இளைய பிராட்டி குந்தவை ஒரு கரத்தையும் பிடித்துத் தூக்கினார்கள்.

வானதி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய ஒரு கரத்தைப் பூங்குழலி பிடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அந்தக் கையை உதறினாள். அவள் பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டாள்.

அந்த வேகத்தில் குந்தவை பிடித்திருந்த கரமும் நழுவி விட்டது.

வானதி தொப்பென்று விழுந்தாள்; தண்ணீரிலேதான் விழுந்தாள். அதற்குள் தண்ணீர் அவளுடைய கழுத்து வரையில் ஏறி விட்டது. கால் நிலை கொள்ளவில்லை. வானதி தண்ணீரில் மிதந்தாள். வெள்ளம் அவளை அடித்துக் கொண்டு போயிற்று.

இவ்வளவும் ஒரு கணத்தில் நடந்து விட்டது. மண்டபத்தின் மேலேயிருந்தவர்கள், ''ஆகா!'' என்று பரிதாபமாகக் கதறினார்கள்.

சில கண நேரத்துக்குள் வெள்ளம் வானதியைச் சோதிடர் வீட்டுக் கூரை மேல் கொண்டு போய்ச் சேர்த்தது. அந்தக் கூரை மேல் அவள் ஏறிக்கொண்டாள். ''நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை!'' என்று எண்ணினாள்.

மண்டபத்தின் மேலிருந்தவர்களும் அவளைப் பார்த்தார்கள். வீட்டுக் கூரை மீது தொத்திக் கொண்டதைப் பார்த்தார்கள். அவர்களும், ''நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை. படகு வந்ததும் அவளை எப்படியும் தப்புவிக்கலாம்!'' என்று கருதினார்கள்.

''கூரையை விட்டு விடாதே! கெட்டியாகப் பிடித்துக் கொள்!'' என்று பலமாகக் கத்தினார்கள்.

வானதி வீட்டுக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தக் கூரையே அசைவது போல் தோன்றியது. அடடா! வீடு இடிந்து விழுகிறதா, என்ன?

ஆம்; ஜோதிடர் வீட்டுச் சுவர்கள் இடிந்து விழுந்து விட்டன. ஆனால் கூரை மட்டும் விழவில்லை!

கூரை வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டது.

வானதி அந்தக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மிதந்தாள்.

கோயில் மண்டபத்தை நோக்கித் திரும்பிப் பார்த்தாள்.

''அக்கா! நான் அவரைப் பார்க்கப் போகிறேன். பொன்னியின் செல்வரைப் பார்க்கப் போகிறேன். காவேரித் தாய் என்னை அவரிடம் கொண்டுபோகிறாள்!'' என்று கூவினாள்.

அவள் கூறியது அவர்கள் காதில் விழுந்திருக்கும். முக்கியமாகப் பூங்குழலியின் காதில் விழுந்திருக்கும் என்று மனப்பூர்வமாக நம்பினாள்.

ஜோதிடர் வீட்டுக் கூரை வெள்ளத்தில் மிதந்து சென்று கொண்டிருந்தது.

வானதியும் போய்க் கொண்டிருந்தாள்.

(தொடரும்)


five past nine
Five Past Nine
and Lady gains a smile
for, its a whistle in time
from the cooker very fine.
with Volga cooker
Mind is without Pressure
for Volga has
the Correct Pressure.
Volga is Precious
Time is Precious
Meals are Delicious
for all to be Voracious.
To be in Time
Insist on Volga fine
Cooker that is thine
free
RUBBER GASKET
FUSSIBLE PLUG
SPANNER
SAFETY PIN
RECIPE BOOK
VOLGA
FOR PREPARING TIME BOUND MEALS INSIST ON
75 MONTHS GUARANTEE
VOLGA PRESSURE COOKER
MARKETED BY
VOLGA METAL CORPORATION BOMBAY-4. PHONE: 336901
தென்னிந்தியாவுக்கு ஏஜெண்டுகள்: M/s. J. T. K. எண்டர்பிரைஸஸ், சிராச்சிரா, சங்கனச்சேரி-4 (கேரளா)]
மற்றும் எல்லாப் பிரபல எவர்சில்வர் பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்

அத்தியாயம் 41

யாமினி மனோரஞ்சித மலரைப் போல் இருந்தாள் என்றால் அஜிதா சூரியகாந்தி மலரைப் போல் இருந்தாள் என்று பாஸ்கரன் தனக்குள் சொல்லிக் கொண்டான். ஒரு காரணமுமில்லாமல் இந்த உவமைதான் அவனுக்குத் தோன்றிற்று. இரண்டு மலர்களுக்குமுள்ள விசேஷத் தன்மை, மணம், குணம் இவற்றை ஒப்பிட்டுப் பார்த்து அவன் இப்படி நினைக்கவில்லை. என்னவோ அப்படித் தோன்றிற்று; அவ்வளவுதான். அதற்குமேல் சொல்ல ஒன்றுமேயில்லை.

பார்க்கப் போனால் யாமினியையும் அஜிதாவையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே இல்லை. அழகிலும் குணத்திலும் அவள் எங்கேயோ, இவள் எங்கேயோ , பண்பாட்டிலும் சரி, பழக்க வழக்கங்களிலும் சரி, அப்படித்தான். பெண்மைக்கே இயல்பான இங்கிதம், இனிமை, மென்மை, நளினம் எல்லாம் பொருந்தியவள் யாமினி. பேச்சு, பார்வை, பாவனைஎல்லாமே மிருதுத் தன்மை வாய்ந்தவை. நல்ல அழகு அவள். அஜிதாவிடமோ அசாதாரணமான கவர்ச்சி ஒன்று இருந்தது. ஆனால் அத்தனைக்கு ஒரு நெடியும் செயற்கையான ஒரு பூச்சும் அவளிடம் கலந்திருந்தன. அதே சமயத்தில் பெண்மையை மீறிய ஒரு தாட்டிகமும் நிறைந்திருந்தது. இருவருக்குமுள்ள வேற்றுமை அவனுக்கு வெளிப்படையாகவே தெரிந்தாலும் இந்த அஜிதா தன்னைப் பற்றியும் யாமினியைப் பற்றியும் என்ன நினைக்கிறாள் என்று அறிந்துகொள்ள அவனுக்கு ஆவலாக இருந்தது.

ஆனால் அவன் எண்ணியதற்கு மேல் அஜிதா அபார சாமர்த்தியசாலியாக இருந்தாள். பம்பாயில், கொழுத்த வசதி படைத்த உயர் வட்டங்களில்,



விநோதமான பல கட்டங்களில் ஊடாடிப் பழகி, ஊறித் திளைத்து, நெளிவு சுளிவுகளில் தேறி வந்தவன் அவன் என்பது அவனுக்கு ஓரளவுதான் தெரியும். முழுவதும் தெரியாது. பல பக்கங்களில் விளக்க வேண்டிய விஷயத்தை ஒரு சிரிப்பினால் உணர்த்தக் கூடியவள் என்பது தெரியாது. அவன் சம்பந்தப்பட்ட வரையில் அவள் அன்றும் சரி, இன்றும் சரி, ஒரு புதிர் தான். விடுபடாத புதிர்!

அஜிதா சென்னைக்கே வந்துவிட்டாளா, மறுபடியும் பம்பாய் போகப் போகிறாளா என்பதைக் கேட்க வேண்டும் என்று இரண்டு மூன்று தடவை நினைத்தான். ஆனால் அதைக் கேட்க முடியாமல் ஏதோ ஒன்று அவனைத் தடுத்து விட்டது. அவளாகச் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும்; இல்லாவிட்டால் தெரிகிற போது தெரியட்டும் என்று நாசூக்காக இருந்து விட்டான். அவனுடைய ஏ. ஐ. வி. இப்பொழுது 'அல்லைடு இன்டஸ்ட்ரியல் கன்ஸெர்ன்ஸ்' என்று பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்தத் தொழிற்சாலைக்குள் நுழைகிற வரையில்தான் அவன் சாதாரண பாஸ்கரனாக இருந்தான். உள்ளே நுழைந்த பிறகு அவனுடைய ஆகிருதியே மாறி விட்டது. படித்த பல இளம் பொறி இயல் கலைஞர்களுக்கு மத்தியில் அவன் ஒரு முடிசூடா மன்னனைப் போலத் திகழ்ந்தான்.

அஜிதா முதல் நாள் அப்படியே வியப்பில் மூழ்கிப் போனாள். கித்தான் நாற்காலியில் உட்கார்ந்து, எந்த இடத்திலும் நடுநாயகமாக நிற்கும் பாஸ்கரனையே அவள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜேஷ், மாணிக்கம், ஷண்முகசுந்தரம், மகாதேவன், துரைபாண்டியன், சீனிவாசன்

காணிக்கை

ஆர்வி



— இவர்கள் எல்லாம் உபகிரகங்களைப் போல் அவனைச் சுற்றி வந்தார்கள். எல்லாரிடமும் அவன் உற்ற தோழனைப் போலப் பழகியும் வேடிக்கையும் விளையாட்டுமாகவே வேலையில் பழக்கியதையும் பார்ப்பது அவளுக்கு ஒரு ரசமான பொழுதுபோக்காக இருந்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்பான வேலையைக் கொடுத்த பிறகுதான் அவனுக்கு மூச்சு விடச் சிறிது நேரம் கிடைத்தது. அப்போதுதான் அஜிதாவிடம் பேச வந்தான்.

" 'போர்' அடிக்கும் உனக்கு. வீட்டில் இருந்தால் சுகமாகத் தூங்குவே, இல்லையா?"

" இல்லே; ரொம்பச் சுவாரசியமா இருக்கு."

" யாமினிக்கு என்கிட்டே ரொம்பக் கோபம். ஒரு நாள்கூட நான் அவளை இங்கே அழைச்சிண்டு வந்ததில்லே."

"எனக்குத்தான் இப்படி ஒரு தனிச் சலுகை கிடைச்சிருக்கு போலிருக்கு! அதுதானே?"

'' அதுக்காகச் சொல்லல்லே. அவளாலே எப்படி முடியும்?''

இதைக் கேட்டதும் மின்னல் வெட்டுப் போல் அவள் முகவண்ணம் மாறித் திரும்பியது.

'' ஆமாம்! ரொம்ப நுணுக்கமான காரியம்! அவளாலே முடியாதுதான்!''

''உன்னாலேயுந்தான்! கண் முழிக்கிறது; காத்திண்டிருக்கிறது. 'போர்' அடிச்சுப் போகும் ! பேச்சுத் துணைகூட இல்லாமே எத்தனை நேரம் கொட்டு கொட்டுனு உட்கார்ந்திருக்க முடியும்?''

''ஓ! அதுக்குச் சொல்றியா ? ஆனா அதெல்லாம் ஒருத்தரோட சுபாவத்தைப் பொறுத்த விஷயம். இல்லையா?''

''அவளுடைய சுபாவம் தெரிஞ்சதனாலே சொல்றேன் !''

இப்படி அவன் சொன்னது அஜிதாவுக்கு என்னவோ ரோசமாக இருந்தது. அவள் பதில் சொல்லவில்லை. அதைக் காட்டிக் கொள்ளவும் இல்லை.

''அவளுக்குத் தனியா ஊருக்குப் போகவே விருப்பமில்லை.''

''அதான் ஒரு வாரத்திலே திரும்பி வந்துடப் போறாளே!''

''இருந்தாலும் அதுகூட அவளுக்கு விருப்பமில்லை.''

''ம்ம்..... அப்படியா ?''

''அப்படித்தான் நினைக்கிறேன். அவளாலே இப்பல்லாம் போய் இருக்க முடியாது.''

''ம்....'' என்று அதைக் கேட்டுக் கொண்ட அஜிதா, சன்னமாகச் சிரித்தபடி, ''எனக்கென்னமோ உன்னாலே தான் அப்படி இருக்க முடியாது போலப் படறது !'' என்றாள்.

''இப்ப இருக்கல்லியா, இதோ ?''

''எங்கே இருக்கே? இந்த ரெண்டு நிமிஷங்களுக்குள்ளே அவள் பேரை இருபது தடவை சொல்லிப்பிட்டியே!''

பாஸ்கரன் இதை மறுத்துப் பேசுவதற்குள் மாணிக்கம் அவனைக் கூப்பிட வந்து விட்டான். அவனுக்கு இது ஒரு நல்ல சாக்காகப் போயிற்று.

மறு நாள் இரவும் அஜிதாவே வற்புறுத்தித்தான் அவன் அழைத்துக் கொண்டு வந்தான். கிட்டத்தட்ட இதே போலத்தான் ஏதாவது பேச்சு நடந்திருக்கும். ஆனால் அன்றைக்குக் காமேசுவரன் வந்து விட்டான். யந்திரங்களை நிர்மாணம் செய்கிற வேலை தொழிற்சாலையில் இரவெல்லாம்கூட நடக்கிறது என்று கேள்விப்பட்டு, அதைப் பார்த்துவிட்டுப் போவதற்காகக் குதிரைப் பந்தய கிளப்பிலிருந்து நேராக ஏ. ஐ. வி.க்கு வந்திருந்தான். இந்தத் தொழிற்சாலை விஷயத்தில் அவனுக்கு அக்கறை இருந்தது. பாஸ்கரனுக்கு அவன் ஒரு பெரும் தொகை கொடுத்திருந்தான். காமேசுவரன் அதை எப்படி நினைத்திருந்தானோ தெரியாது. பின்னால் தனக்கு எது அநுகூலமாக இருக்குமோ அப்படி வைத்துக் கொள்ளலாம் என்று அவன் இருந்திருக்கலாம். பாஸ்கரனுக்கும் இதெல்லாம் புரியாத சங்கதிகள் அல்ல. ஆகவே அவன் எதற்கும் தயாராக இருந்தான். நாளைக்கு இந்தக் காமேசுவரன் சட்டத்தின் ஏதாவது ஓர் ஓட்டைக்குள்ளே நுழைந்து கொண்டு எல்லாமே தன்னைச் சேரவேண்டும் என்று சொல்ல முற்பட்டால்கூட பாஸ்கரன் கவலைப்பட மாட்டான். ஏனென்றால், அப்படி ஒருநாளும் நேராது; நேர்ந்தாலும் நடக்காது என்று அவனுக்குத் தெரியும்.

பாஸ்கரனுக்கு அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தி வைப்பதில் என்ன காரணத்தாலோ அத்தனை உற்சாகமில்லை. இருந்தாலும் அவர்கள் இருவரும் தன் முன்னிலையில் சந்தித்துவிட்ட பிறகு அப்படிச் செய்யாமல் இருப்பது உசிதமாகப்படவில்லை. காமேசுவரன் முதலிலெல்லாம் தான் ரொம்பப் பெரிய மனிதன் என்ற நினைப்பில் ஆகாசத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அஜிதா இன்னாருடைய மருமகள், இன்னாருடைய மனைவி என்று தெரிந்த பிறகு அவன் பார்வையெல்லாமே சட்டென்று மாறிவிட்டது. குரல், பாவனையெல்லாம் கூடவே மாறி விட்டன. பிரமுகர் வட்டாரத்தில் பம்பாய் நாராயணன் என்றால் அது எத்தனை பெரிய பெயர் என்பது காமேசுவரனுக்குத் தெரியும். தொழில்—வர்த்தகத் துறைகளில் பம்பாய் நாராயணன் ஒரு யானை என்றால் இங்கிருப்பவர்கள் எல்லாரும் பூனைகள் போலத்தான். நூறு பூனைகள் சேர்ந்தாலும் ஒரு யானைக்கு எங்கேயாவது ஈடாகுமா ? அவருக்கு ஒரே பிள்ளைதான் என்பதும் காமேசுவரனுக்குத் தெரியும். இந்த அஜிதா அவன் மனைவிதான் என்று தெரிந்த போது காமேசுவரனுக்கு மூச்சுத் திணறியது. அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அத்தனை பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணுவது இங்கே இந்தத் தகர டப்பா தொழிற்சாலைக்கு வந்து பாஸ்கரனைப் பார்க்கக் காத்துக் கிடப்பதாவது? அவன் எந்தக் கருத்தில் பாஸ்கரனுடைய தொழிற்சாலைக்கு வந்திருந்தாலும் அதெல்லாம் அஜிதாவைத் தெரிந்துகொண்ட மறு நொடியிலேயே மாறிப் போய் விட்டது.

'' பாஸ்கரனை எப்படித் தெரியும், உங்களுக்கு? அமெரிக்காவிலே....''

''அதெல்லாம் இல்லே. அவர் எனக்கு உறவு !''

காமேசுவரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்புறம்தான் அஜிதா என்ன உறவு என்பதை விளக்கமாகச் சொன்னாள். இதைக் கேட்டதும் அவனுக்கு ஒரு பக்கம் அதிசயமாகவும் இன்னொரு பக்கம் பொறாமையாகவும் இருந்தது. அவனுக்குத்தான் எப்படிப்பட்ட போட்டியெல்லாம் வந்து சேருகிறது ! அப்போது பியர்ஸன் இந்தியா போட்டியாக நின்றது என்றால் இப்போது இப்படி ஒருத்தி எங்கிருந்து வந்து முளைத்தான்? இவள் நினைத்தால் இந்தத் தொழிற்சாலையை எப்படியெல்லாமோ செய்துவிட முடியுமே!

''எனக்கு உங்க தகப்பனாரைப் பத்தித் தெரியும். அவருக்கு ஒரு புதல்வி உண்டு என்றும் தெரியும். ஆனால் நீங்கதான் அந்த மிஸஸ் முரளின்னு நான் தெரிஞ்சுக்கல்லே. பாஸ்கரனும் இது வரையிலே சொல்லல்லே....!'' என்றான் காமேசுவரன்.

'' இதைச் சொல்லணும்னு தோணியிருக்காது. அதையும் தவிர ஞாபக மறதி வேறே எக்கச் சக்கம்....''

''எனக்கும் ஞாபக மறதி உண்டு ; ஆனால் இவ்வளவு மோசமில்லே.''

'' ஏன்? அதில் என்ன தப்பு? ஞாபக மறதிதானப்பா மனிதனைக் காப்பாத்தறது. எல்லாமே ஞாபகத்திலே இருக்கத் தொடங்கிட்டா வேறே வினையே வேண்டியதில்லே. பெரிய தொல்லைதான் !'' என்று சொல்லிக் கொண்டே வந்து உட்கார்ந்தான் பாஸ்கரன்.

'' அப்படி ஒண்ணும் உனக்கு வேலையிலே ஞாபகமறதி இருக்கிறதாத் தெரியல்லியே !'' என்றாள் அஜிதா.

அந்தக் குற்றச்சாட்டே மிகப் பெரிய பாராட்டாக இருந்ததால், காமேசுவரனுக்கு அது ரசிக்கவேயில்லை. அவன் உடனே எழுந்து இருவரிடமும் பிறகு சந்திப்பதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

''எதுக்கு வந்தார் மனுஷன், ஏன் இவ்வளவு சிக்கிரமாப் போயிட்டார் ?'' என்று கேட்டாள் அஜிதா.

'' அவன் எப்போதுமே இப்படித்தான் ! என்னமோ நினைச்சிண்டு வருவான்; திடீரென்று எதையாவது நினைச்சிண்டு போயிடுவான் !'' என்றான் பாஸ்கரன்.

''சில பேர் வந்தால் போகவேமாட்டாங்க, இல்லையா ?''

'' சில பேர் அப்படிப் போகவே கூடாதுதான் !''


அத்தியாயம் 42

விளையாட்டுப் போல் நாட்கள் போய்க் கொண்டிருந்தன. பாஸ்கரனும் அஜிதாவும் சம்பந்தப்பட்டவரையில் நாட்கள் போவதே தெரியவில்லை. ஆனால் ஊரில் யாமினிக்குத்தான் ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருந்தது. சாப்பிடுவது, தூங்குவது, வருவோர்—போவாரிடம் அரட்டை அடிப்பது, கோயிலுக்குப் போவது, குளத்துக்குப் போவது, தம்புராவை மீட்டிச் சுருதி சேர்த்துப் பார்ப்பது என்று என்ன செய்தும் பொழுதை நெட்டிப் பிடித்துத் தான் தள்ள வேண்டியிருந்தது. விளக்கு வைத்து அத்தனை நேரமாகிவிட்டதே என்று பார்த்தால், மணி ஏழுகூட ஆகவில்லையே என்று காட்டும் கடிகாரம். அவளுக்கு எரிச்சல் எரிச்சலாகத் தான் வந்தது.

பத்திரிகைகளைப் புரட்டினால் சுவாரசியமே இருப்பதில்லை. கண்ணைக் கொண்டு போய்ச் செருகி, தூக்கம் தூக்கமாய் வரும். தூக்கம்தான் வருகிறதே என்று கட்டிலில் போய் எட்டரைக்கெல்லாம் படுத்துக் கொண்டால், 'இந்தப் படுக்கையெல்லாம் எனக்கு எதற்கு?' என்று கேட்பது போல் வந்த தூக்கமெல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடி விடும். வேலை கெட்ட வேளையில் பசிப்பது போல் இருக்கும். ஆனால் எதை நினைத்தாலும் அடிவயிற்றிலிருந்து குமட்டும். முற்றத்தில் போய்க் காற்றாட நிற்கலாம் என்றால், வயிறும் பிள்ளையுமாய் இருட்டில் போய் நிற்பதாவது என்று அத்தை அதட்டுவாள்.

இந்த வீட்டில்தான் பொழுது போகவில்லை என்று இரண்டு நாட்கள் அண்ணா பட்டாபியின் வீட்டுக்குப் போய் இருந்து பார்த்தாள். மன்னியோடும் குழந்தைகளோடும் இருந்தது மனத்துக்குத் திருப்தியாயும் ஆறுதலாயும் தான் இருந்தது. ஆனால் அங்கேயும் அஸ்தமித்து விட்டால் இதே கதை தான். அதையும் தவிர, மன்னியை வேலை செய்யச் சொல்லிவிட்டு, அவள் உட்கார்ந்து சீராடிக் கொண்டிருப்பதற்குக் கஷ்டமாயும் இருந்தது. மன்னி வேலை செய்ய வேண்டாம் என்றாலும் மனச்சாட்சி அதற்கு இடம் கொடுத்தால்தானே ?

''இங்கே வந்து நிம்மதியாய்ப் பத்து நாட்கள் இருக்கட்டும்னு கூட்டிண்டு வந்



''வேலி போட்டிருந்த இடத்திலே புதுசா காம்பவுண்டு சுவர் எழுப்பினேன். அநியாயம் பாருங்க, ஏமாத்திட்டான்! செங்கல்லாம் ரொம்ப மட்டம்!''

''கவலைப்படாதீங்க; தேர்தல் முடியறதுக்குள்ளே போஸ்டர் ஒட்டி ஒட்டி உறுதியான சுவர் ஆயிடும்!''

தால் நீ இத்தனை வேதனைப்பட்டுப் போறியே. இதுக்கு நீ ஊருக்கே போயிட்டு, பிள்ளைப்பேறு சமயத்தில் வந்தால் போதும் போலிருக்கே!''

''அதான் அத்தை தேவலை. எனக்கு என்னமோ இங்கே இருப்பே கொள்ளலே'' என்றாள் யாமினி.

''அதிசயமாத்தான் இருக்கு நீ பேசறது. நாலு நாட்கள்கூட உன்னாலே அவரை விட்டுட்டு இருக்க முடியல்லியே, இருபது வருஷங்களாய்ப் பாடுபட்டு எடுத்து வளர்த்த எங்களுக்கு எப்படி இருக்கும்னு நீயே தெரிஞ்சுக்கோ. பாலு கசக்கிறது; படுக்கை முள்ளாய்க் குத்தறது இப்பவே உனக்கு. அப்புறம் என்ன செய்யப் போறே? எப்படியும் நீங்க கொஞ்ச நாட்களானும் பிரிஞ்சிருந்துதானே ஆகணும்?''

''அதுக்கு என்ன வந்தது இப்போ பிடிச்சு? இப்ப நான் இங்கே ஒரு காரணமும் இல்லாமல்தானே உட்கார்ந்திண்டிருக்கேன்! அவரை வந்து அழைச்சிண்டு போகச் சொல்லி எழுதட்டுமா?''

''எப்படியோ செய். என்னை என்ன கேள்வி? நீ கல்லூரியிலே படிச்சவள். நான் ஏதாவது சொன்னால் அப்புறம் அதனாலே போச்சு, இதனாலே போச்சுன்னு பேச்சு வரதுக்கா? உன் இஷ்டம் எதுவோ அப்படியே செய்!'' என்றாள் அத்தை எரிச்சலோடு.

உடனே வந்து தன்னை அழைத்துக் கொண்டு போகும்படி பாஸ்கரனுக்குக் கடிதம் எழுதிப் போட்டாள் யாமினி. மறு நாள் போக மறு நாளே பதில் வந்து விட்டது. அவள் அதை எதிர்பார்க்கவில்லை; அவனைத்தான் எதிர் பார்த்தாள். ஆனால் அவன் வர முடியாததற்குச் சரியான காரணம் இருந்தது. மந்திரி ஒருவர் வந்து தொழிற்சாலையைத் திறந்து வைக்கப் போகிற சமயம் பார்த்து அவனால் எப்படி வந்து அவளை அழைத்துப் போக முடியும்?

''இந்தச் சமயம் நீயும் இங்கே என் கூட இருந்தால் எனக்குப் பெருமையாகவும் நிறைவாகவும்தான் இருக்கும். ஆனால் இதை நினைத்துக் கொண்டு நீ அவசரப்பட்டு வர வேண்டாம். நீயாக வர முடியுமானால் எனக்கு இரட்டிப்புச் சந்தோஷம்தான். ஆனால் உடம்பைக் கவனித்துக்கொள்வதுதான் முக்கியம்'' என்று எழுதியிருந்தான் பாஸ்கரன்.

''என்னவாம்?'' என்று கடிதத்தைப் பற்றிக் கேட்டாள் அத்தை.

''அவராலே திடீர்னு வர முடியல்லே. அதனாலே நான்தான் புறப்பட்டுப் போகணும். இதென்ன பெரிய காரியம்? நான் தனியாகவே போயிடுவேன். அவர் ஸ்டேஷனுக்கு வண்டி கொண்டு வந்து விடுவார்!''

அத்தை பேசவில்லை. எல்லாவற்றையும் அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். யாமினி போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்து விட்டாள்.

''நல்ல நாள் பார்க்க வேண்டாமா? எந்த வண்டீன்னு குறிப்பிட்டு அவருக்கு எழுத வேண்டாமா?'' என்று யாரிடமோ சொல்வது போலக் கேட்டாள்.

''பார்த்துச் சொல்லேன்; எழுதறேன்'' என்றாள் யாமினி.

இந்த விஷயங்களில் பாவம், அவளுடைய அப்பா தலையிடவேயில்லை. இரண்டு நாட்கள் கழித்து அவள் ஊருக்குப் புறப்பட்ட போது, அவர் கூடவே பஸ்ஸில் வந்து, ரயிலுக்கு டிக்கெட் வாங்கி ரயிலேற்றி அனுப்பி விட்டுத்தான் ஊர் திரும்பினார்.

''இப்படியா இருக்கும் ஒரு பொண்ணு? வந்ததிலேயிருந்து வாய்க்குப் புடிச்சதா சாப்பிடாமெ, இராத் தூக்கம் தூங்காமெ? பிறந்த வீட்டுக்கு வந்தால் நிம்மதியா, சந்தோஷமா, வேடிக்கையும் விளையாட்டுமா இருந்துட்டுப் போகாதோ, ஒரு பொண்ணு?'' என்று வெடித்துப் போனாள் அத்தை.

''எப்படியோ சந்தோஷமா இருந்தால் சரிதான்! புருஷன்னு வந்துட்டப்புறம் பிறந்த வீட்டிலேயெல்லாம் இருப்புக் கொள்ளுமா? போனதுவரைக்கும் சரி, போ!'' என்று போய்விட்டார் யாமினியின் அப்பா.

''உங்கிட்டே போய்ச் சொல்ல வந்தேன், பாரு!'' என்றாள் அத்தை. ''அப்பனு இவன், அப்பன்! வெறும் மரமண்டை! ஆசையா பூ வெச்சுப் பின்னி, வளையல் வாங்கி அடுக்கி, ஒரு மணையிலே வைச்சுப் பாடி அனுப்புவோம்னு இல்லாமெ, போனதுவரையிலே சரியாமே! கூர்கெட்டவன்!'' என்று வசை பாடினாள். அதெல்லாம் அவர் காதுக்கு எட்டவில்லை. **(தொடரும்)**

அழகுக் கோலம்



டெக்கோலாம்

DECOLAM

டெக்கோலாம்—வனப்பே வடிவான லாமினேட்
பேகலைட் ஹைலாம் லிமிடெட் தயாரிப்பு.

லின்டாஸ்-BHL-DLM-22-77 TM

மராட்டி

நானும்



: நமஸ்காரம், எழுத்தாள மன்னரே!

: நமஸ்காரம். வாருங்கள், உட்காருங்கள்!

: எங்கள் காரியாலயக் கடிதம் தங்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

: ஆமாம். கிடைத்தது. ஆனால் கடிதம் அனுப்பும்போது அதற்குத் தபால் பில்லை ஒட்டி அனுப்புங்கள்.

: தபால் தலை ஒட்டவில்லையா? (ஆச்சரியத்துடன்).

: இல்லவே இல்லை.

: அப்படியானால் நாற்பது பைசாக் கொடுத்து வாங்கினீர்களா?

: கொடுத்துத்தான் வாங்கினேன்! போன வருடம் எழுதின கதைக்குச் செக் அனுப்பி விருப்பார்கள் என்ற ஆசையில்!

: கேட்க ரொம்ப வருத்தமாக இருக்கிறது.

: நான் சாதாரண எழுத்தாளன். ஆசிரியராக இருந்தால் தபால் பில்லை இல்லை என்று பெற்றுக் கொள்ள மறுத்திருப்பார். அது அவருக்குக் கைவந்த பழக்கம்.

:சரி. இப்பொழுது நாம் விஷயத்துக்கு வருவோமா? விஷயம் என்றால் நாற்பது பைசா தபால் பில்லை பற்றி அல்ல! நான் உங்களைப் பற்றியும், உங்கள் எழுத்து பற்றியும் பேட்டி காண வந்திருக்கிறேன். ''நானும் என் எழுத்தும்'' என்கிற விஷயத்தைப் பற்றி நீங்கள் இன்று சொல்லணும். (உட்கார இடம் தேடுகிறார்.)

: சொல்கிறேனே!

: இந்த உட்காரும் ஆசனம் தாங்கள் புதிதாக வாங்கினீர்களா?

: பழசுதான். உண்மையில் இதற்கும் இந்தப் பேட்டிக்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

: இல்லை, இல்லை. சும்மாத் தான் கேட்டேன்!

: பரவாயில்லை. ஆனால் நீங்கள் கேட்ட கேள்விக்கும் என் படைப்புகளுக்கும் இந்த ஆசனத்துக்கும் சம்பந்தம் உண்டு!

: அது எப்படி?

: நீங்கள் எதன் மேல் உட்கார்ந்திருக்கிறீர்களோ, அது உட்காரும் ஆசனம் அல்ல. உண்மையில் அது என் முதல் கவிதைத் தொகுப்பு நூல். அந்த நூல்களின் மூட்டை மேல்தான் நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள்!

: அப்படியா? ஒரு பிரதியைப் பார்க்கலாமா?

: மதிப்புரைக்காக ஒரு பிரதியை முன்பே உங்கள் காரியாலயத்துக்கு அனுப்பிவிட்டேன். அது கைக்குக் கிடைக்காது என்றால் ஒரு பிரதியைக் கட்டில் இருந்து எடுத்துக் கொடுக்கிறேன்.

: சே சே! அப்படியெல்லாம் இல்லை. அங்கே போயே பிரதியைப் பார்த்துக் கொள்கிறேன்.

: பாருங்கள், பாருங்கள்! உங்களுடைய காரியாலயத்தில் மூன்றும் நம்பர் அலமாரியில் இரண்டாவது தட்டில் இடதுபுறமிருந்து வைத்த நான்காவது புத்தகம்தான் என்னுடைய கவிதைத் தொகுப்பு நூல்!

: இவ்வளவு சரியாக எப்படித் தெரியும்?

: இவ்வளவு சரியாக, எழுதின எழுத்தாளனைத் தவிர வேறு யாரால் சொல்ல முடியும்? சென்ற ஐந்து வருடங்களாக அதே இடத்தில் நான் பார்த்துக் கொண்டு வருகிறேன்!

: மதிப்புரை என்றைக்காவது வந்ததா?

: எங்கே வந்தது? ஆனால் மதிப்புக்குரிய இடத்தில் புத்தகம் இருக்கிறது!

: இந்தக் கவிதை நூலின் பெயர் என்ன?

: சற்றுப் புதுப் பெயராகக் கொடுத்திருந்தேன் — ''ஸோபா—கம் — பெட்!''

: அந்தப் பெயரைக் கொடுத்தபோது உண்மையிலேயே அது இப்படி ஆசனமாகப் பயன்படலாம் என்று எண்ணினீர்களா?

: உங்கள் கேலி 'ஆப் த ரிகார்ட்' தானே?


: ஆமாம், தாங்கள் கவிதை எழுத எப்பொழுது ஆரம்பித்தீர்கள்?

: இளமையில்!

: ஆனால் இப்பொழுதெல்லாம் நீங்கள் கவிதை இயற்றுவதில்லையே! கவிதை எழுதுவதை எப்பொழுது நிறுத்தினீர்கள்?

: வயது முதிர்ந்தவுடன். இந்தக் கவிதைக் கொத்து வெளிவந்தவுடன் எனக்கு மூப்பே வந்து விட்டது!

என் எழுத்தும் ·ஜெயவந்த் தள்வி



: தங்களுடைய கவிதைகள் எவற்றில் பிரசுரமாகியிருக்கின்றன?

: கையெழுத்துப் பத்திரிகையில் தொடங்கி அச்சாகும் அத்தனை பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன !

: எல்லாப் பத்திரிகைகளும் தங்கள் கவிதைகளுக்கு இடம் கொடுக்கின்றனவா?

: ஆமாம்! கதை போட்டு மிச்சமுள்ள இடத்தில் கவிதை போட்டு நிரப்புகிறார்கள்!

: என்ன சன்மானம் தருகிறார்கள்?

: கொடுக்கிற சன்மானத்தில் மிளகாய், புளி, உப்பு வாங்கலாம்.

: அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு நீங்கள் எதற்காக எழுதுகிறீர்கள்?

: புகழ் வருவதற்காக! வரவில்லை என்று தெரிந்ததும் நிறுத்திக் கொண்டு விட்டேன்.

: நீங்கள் எப்பொழுதாவது தாடி மீசை வளர்த்ததுண்டா ?

: வளர்த்ததில்லை. ஆனால் பல சமயம் வளர்ந்ததுண்டு!

: உங்கள் கவிதைகளை நீங்கள் எங்கே பாடினீர்கள் ?

: குளியல் அறையில் !

: உங்களுடைய இந்தக் கவிதை நூல் என்றைக்காவது விற்பனையாகலாம் என்று நம்புகிறீர்களா ?

: ''என்னுடைய ரசிகன் என்றைக்காவது பிறக்கப் போகிறான்'' என்று ஒரு சம்ஸ்கிருத மகாகவி சொன்னானாம்.

: அந்த சம்ஸ்கிருத மகா கவிக்கு ரசிகன் என்றைக்காவது பிறந்தானா?

: நிச்சயமாக எனக்குத் தெரியாது! ஆனால் அவனுடைய புத்தகத்தைக் கல்லூரிகளில் பாடப் புத்தகமாக வைத்திருந்தால் ஒருவேளை பிறந்திருக்கலாம்!

: அப்படியானால் நீங்கள் கவிதை இயற்றுவதை அடியோடு நிறுத்தி விட்டீர்களா?

: அடியோடு நிறுத்தி விட்டேன் என்று சொல்ல முடியாது. தற்பொழுது நான் சிறுவர்களுக்கான சிறு கவிதைகளை எழுதுகிறேன்.

: பல பெற்றோர்கள் உங்கள் சிறுவர் கவிதையைப் படித்துவிட்டுத் தங்களுக்கே புரியவில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள் ! அந்த நிலையில் சிறுவர்களுக்கான கவிதைகளை நீங்கள் எழுதுவானேன் ?

: சிறுவர் கவிதை எழுதினால் அரசாங்கம் பரிசு தருகிறது. ஒரு தடவை பரிசு கிடைத்துவிட்டால் இரண்டு மூன்று வருடங்கள் எழுதாமல் இருக்கலாம் அல்லவா?

: இப்பொழுதெல்லாம் நீங்கள் கதைகள் நிறைய எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே?

: ஆமாம்! சிறுகதை எழுதுவதை நிறுத்திவிடச் சொல்கிறீர்களா?

: சேச்சே! அப்படியெல்லாம் நான் எதற்காகச் சொல்லப் போகிறேன்! தாராளமாக எழுதுங்கள்; நிறைய எழுதுங்கள்!

: நன்றி!

: வழக்கமாகக் கதைகளுக்கு எவ்வளவு சன்மானம் கொடுக்கிறார்கள்?

: சன்மானமா? மானத்தைக் காப்பாற்றும் உயிர்ப் பிச்சை என்று சொல்லுங்கள்!

: அந்த உயிர்ப் பிச்சைதான் எவ்வளவு கொடுக்கிறார்கள்?

: அதைச் சொன்னால் என் மானம் என்ன, தருபவர்களின் மானமே போய்விடும்!

: அப்படியா! தவறாகக் கேட்டுவிட்டதற்கு மன்னிக்கவும்! உங்களுடைய முதல் சிறுகதைத் தொகுப்பின் பெயர் என்ன?

: ''ஏதாவது!''

: முதல் பதிப்பு தீர்ந்து விட்டதல்லவா?

: தீர்வதில் இரண்டு வழிகள் உண்டு.

: என்ன அவை?

: புத்தகம் நிறைய வாங்குவதாலும் தீரலாம் — அல்லது புத்தகம் வாங்குபவர்களே இல்லை என்பதாலும் தீரலாம்!

: அப்படியென்றால் உங்கள் புத்தகங்கள் எப்படித் தீர்ந்தன?

: வாசகர்கள் வாங்கிவிட்டதால் தீர்ந்துவிட்டது என்கிறேன் நான். வாங்குபவர்களே இல்லை என்பதால் (ஸ்டாக் வைக்காமல் எடையில் போட்டு) தீர்ந்து விட்டது என்கிறார் பிரசுரகர்த்தர்.

: உங்களுடைய சமீபத்திய நூல் எது?

: ''ஏமாந்தவன்!''



கோவாவைச் சேர்ந்த அர்போரா வில் மராட்டி ஆசிரியர் ஜெய்வந்த் தள்வி 14-8-25ல் பிறந்தவர். பம்பாய் சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்றவர். மாணவ வாழ்க்கையிலேயே ஒரு சில பத்திரிகைகளுக்கு நிருபராக வும் உதவி ஆசிரியராகவும் பணி யாற்றியிருக்கிறார். தற்சமயம், அமெரிக்கத் தகவல் நிலையத்தில் உத்தியோகம் பார்த்து வருகிறார். பம்பாய் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட இவரது 'சக்ர' என்னும் நவீனம் மராட்டி மொழியில் பல பரிசுகளைப் பெற் றிருக்கிறது. நகைச்சுவை மிக்க இவரது மராட்டி நாடகங்களும், சிறுகதைகளும் பிரசித்த மானவை. ஏறக்குறைய பதி னைந்து நூல்கள் இதுவரை வெளி வந்துள்ளன. இவரது 'நானும் என் எழுத்தும்' என்ற நடை யில் துள்ளுநடை போடுவதோடு எழுத்துத் தொழிலில் உள்ள இன்னல்களையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

: ஏமாந்தவன் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

: ஒவ்வொரு கதையும் மகா காவியத்தின் ஒவ்வோர் அடி போல் அவ்வளவு அருமை யாக இதனை ஆசிரியர் எழுதி யிருக்கிறார் என்று பத்திரிகை களில் மதிப்புரை படித்தேன். மராட்டிக் கதைகளுக்கு ஓர் உதாரணம் தேவை என்றால், அவை எப்படி இருக்கும் என்று அறிய வேண்டுமென் றால் இந்த நூலை ஒவ்வொருவ ரும் வாங்கிப் படிக்கணும் என்று விமரிசனத்தில் குறிப் பிட்டிருந்தார்கள்.

: அப்படியென்றால் நீங்கள் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்று சொல்லுங்கள்!

: அப்படித்தான் எனக்குப் படுகிறது. காரணம் மதிப் புரைப் பகுதியில் வேறொரு புத்தகத்தைப் பற்றி எழுதும் பொழுது என் கதையில், என் நடையில் இருந்த வேகம், உத்தி, இப்பொழுது நவீனக் கதை எழுதுபவர்களிடம் இல்லை என்று எழுதியிருக் கிறார் விமர்சகர்.

: பொதுவாக உங்களுக்கு ஈடுபாடு பழைமையிலா, புதுமையிலா?

: இரண்டிலுமே எனக்கு ஈடுபாடு உண்டு. என் சொத்து என்ன கொள்ளை போகிறது? ஒன்றை வேண்டாம் என்று ஒதுக்க, இன்னொன்றை வேண்டுமென்று ஏற்க?

: உங்களை வாசகர்கள் எந்த வகையில் எடுத்துக் கொள்ளு கிறார்கள்?

: பழைமைவாதிகள் என் னைப் புதிய படைப்பாளன் என்கிறார்கள், நவீன வாச கர்கள் பழைமைவாதிகள் பக்கம் தள்ளுகிறார்கள்.

: நீங்கள் கதை எழுதி, அதனால் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்திருப்பதாக நினைக்கிறீர்களா?

: நிச்சயமாக! ஏனெனில் இந்தக் காலத்து இலக்கியம் நாலைந்து மாதங்கள் கூட நிலைத் திருப்பதில்லை. எனவே எந்த ஓர் எழுத்தாள னும் தன் படைப்பு புதிய சகாப்தத்தை உண் டாக்கி இருப்பதாக நினைப்பதில் என்ன தவறு?

: சில பத்திரிகைகள் குறிப்பிட்ட எழுத் தாளர்களிடமே திரும்பத் திரும்பக் கதை எழுதித் தருமாறு கேட்கிறார்களாமே! உண் மையா?

: உண்மையே.

: அவர்கள் அரைத்த மாவையே அரைக் கும் கதையாக எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதுகிறார்களா? அல்லது புதிய கற்பனைகளை வடிக்கிறார்களா?

: எழுதியதையே திரும்பத் திரும்பத்தான் எழுது கிறார்கள். ஆனால் புதிய கற் பனைகளை உதிர்ப்பதாகக் கூறு கிறார்கள்.

: நீங்கள் சினிமாவுக்குக் கதை எழுதியிருக்கிறீர்களா?

: எழுதவில்லை. ஆனால் எழுத வேண்டும் என்று மட் டும் ஆசை இருக்கிறது.

: அதற்கான அனுபவம் உண்டா?

: அனுபவம் எதற்கு? ஆசிரியரின் விருப்பம் போல் கதையை மாற்றி எழுதும் அனுபவம் எனக்குத்தான் ஏற் கனவே தாராளமாக இருக் கிறதே! அதனால் சினிமாக் காரர்களின் விருப்பத்துக்குக் கதை எழுதுவதில் ஒரு கஷ்ட மும் இருக்காது என்று நினைக் கிறேன்.

: ஆனால் சினிமாவுக்கு என் றால் தனிப்பட்ட முறையில், அதற்குரிய பாணியில் கதை அமைந்திருக்க வேண்டாமா?

: அது ஏற்கனவே ஆங் கிலத்தில் எழுதப்பட்டிருப் பதுதானே?

: நீங்கள் ரேடியோவுக்கு எழுதுவதுண்டா?

: பேஷாக எழுதுவதுண்டு. ரேடியோவுக்கு எழுதுவது என் றால் எனக்கு ரொம்ப ரொம் பப் பிடிக்கும்.

: ஏன்?

: காரணம், ரேடியோ வுக்கு நிறைய எழுத வேண் டியதில்லை. உதாரணமாகப் பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு நாடகம் தேவை என்றால், அதற்குச் சோகக் கதைதான் எழுதுவேன். கதாநாயகியை நிறைய அழும்படி விடுவேன். கதையின் நடு நடுவே விசித்தல் விம்மல் கேவிக் கேவி அழுதல் பெரிதாகப் பிலாக்கணம் பாடி அழுதல், என்று போட்டுவிட்டால் அதிலேயே பத்து நிமிடங்கள் கழிந்து விடும். பாக்கி ஐந்து நிமிடங்களுக்கு ஏதாவது எழுதினால் காரியம் தீர்ந்தது!

: ரேடியோவில் வரும் கருத்தரங்குகளில் நீங்கள் கலந்து கொள்வதில்லையா?

: கலந்து கொள்கிறேனே! இதில் சீக்கிரம் நேரம் போவது தெரியாமலே போய்விடும்!

: அது எப்படி?

: கருத்தரங்குக்காக நாங்கள் நாலைந்துபேர் குழுமியிருப்போம். ஒவ்வொருவரையும் ரேடி யோக்காரர் குறுமூச்சு, நெடுமூச்சு விட்டு, நிறுத்தி, மிக அழகாக அறிமுகப்படுத்தி வைப்பார்.

: எதை? விஷயத்தையா?

: இல்லை. ஆளை! அப்புறம் ஒவ்வொரு வரிடமும், "...இதைப் பற்றி நீங்கள் என்ன

நினைக்கிறீர்கள்?'' என்று தமக்கே உரிய பாணியில் இருமிக் கனைத்துக் கேட்பார். ''அதுவா? அந்த விஷயமா? அதைப் பற்றி நான் என்ன சொல்கிறேன் என்றால்...'' என்று நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குரிய நேரத்தை எடுத்துக் கொண்டு சொல்வதற்குள் கருத்தரங்கு முடிந்து விடும்.

: அப்படியானால் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் முக்கிய நோக்கம் என்ன?

: 'செக்' தான். 'செக்'கைப் பைக்குள் போட்டுக் கொள்வதுதான் முக்கிய நோக்கம்.

: நீங்கள் எதற்காக நகைச்சுவைக் கதைகளை அதிகம் எழுதுகிறீர்கள்?

: பல பத்திரிகைகள் 'ஹாஸ்ய மலர்'-போடுகிறார்களே! அதற்காகத்தான்!

: ஆனால் உண்மையில் இந்த ஹாஸ்யக் கதைகளைப் படிக்கும்போது சிரிப்பு வருகிறதா?

: சிரிப்பு வருகிறது என்றுதான் நான் சொல்லணும்! காரணம் அட்டைப் படத்திலும் உள்ளேயும் இது 'ஹாஸ்ய மலர்' என்று எழுதியிருக்கிறார்களே!

: ஹாஸ்யக் கதைகள் எழுதும் எழுத்தாளர்கள் உங்கள் கதையைப் படித்து என்ன சொல்கிறார்கள்?

: நீங்கள் சாதாரண விரமிக்க கதைகளையே எழுதுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். வாசகர்களோ நீங்கள் ஹாஸ்யக் கதைகளே எழுதுங்கள் என்கிறார்கள்.

: நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

: இரண்டு அபிப்பிராயமும் கேட்டு இருசாராருக்கும் ஏற்ப நான் கதைகளை எழுதுகிறேன்.

: மராட்டியில் நவீன கதை இலக்கியம் தொடங்கியது எப்படி?

: காட்கில் — கோகலே — பாவே — மாட்கோல்கர் — இவர்கள் பேனாப் பிடித்து எழுதப் போகத் தொடங்கியது நவீன கதை இலக்கியம்.

: அவர்களுக்குப் பின்னால் நவீன எழுத்தாளர் பரம்பரை தோன்றி யிருக்கிறதே! அவர்கள் எழுதுவதெல்லாம் நவீனக் கதைகள் என்கிறீர்களா?

: விடை சொல்லுவது கடினம்.

: ஏன்?

: அவர்கள் கதைகளைப் படித்துத்தான் சொல்லணும்.

: நீங்கள் பிறருடைய கதைகளைப் படிப்பதில்லையா?

: உண்டு. எழுதியவர்களே வந்து கழுத்தில் ஏறி அமர்ந்து படிக்க வைத்தால்! இல்லாவிட்டால், எழுத்தாளர்களாகிய எங்களுக்கு எங்கள் கதைகளைப் படிக்கவே பொழுதில்லையே!

: உங்கள் கதைகளை நீங்களே படிப்பதுண்டா என்ன?

: ஆமாம்! ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? எங்களைத் தவிர எங்கள் கதைகளை வேறு யார் படிப்பார்கள்?

: முன்பே வெளிவந்த கதைகளை எழுத்தாளர்கள் மறுபடியும் எழுதி, வேறு புனை பெயர் இட்டுப் பிரசுரித்து விடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே, இது உண்மையா?

: அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

: ஏன் தெரியாது?

: கதை முதன் முறையாகப் பிரசுரிக்கப் பட்டபொழுது படித்தால்தானே தெரியும் என்பதால் கேட்டேன்.

: 'சாரி!' உங்கள் எழுத்துக்கும் நடைக்கும் உங்களுக்கு யாராவது ஒரு குரு உண்டா?

: ஒரு குரு என்ன? பல குருக்கள் இருக்கிறார்கள்.

: ஓரிருவர் பெயர் சொல்லுங்களேன்!

: என் பிழைப்பில் மண்ணைப் போடுகிறீர்களே! ஒருவர் பெயரைச் சொன்னால் பொல்லாப்புத்தான் மிஞ்சும்! எல்லாப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுமே என்னைக் கேட்டால் என்னைப் பொறுத்தவரையில் குருக்கள்தான்! சரியான பாதையை அவர்கள்தான் காட்டுகிறார்கள்!

: அது எப்படி?

: நாங்கள் எதை எப்படி எழுதவேண்டும் என்பதை அவர்கள்தான் நிர்ணயிக்கிறார்கள். ஹாஸ்ய மலர் என்றால் சிரிப்புக் கதை எழுதுவோம். உண்மைக் கதைகளுக்கு ஒரு மலர் போட்டால் எங்கள் வாழ்க்கையில் நடந்த அனுபவத்தைக் கதையாக எழுதுவோம்.—தவறு. கேட்ட கதையை அநுபவமாகச் சித்திரிப்போம். காதல் மலருக்குக் கதை தேவை என்று கடிதம் வந்தால் காதல் கதைகளைக் காதலிப்போம். சுருங்கச் சொன்னால் உங்களை ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரிகளே பத்திரிகை ஆசிரியர்கள்தாம்!

: நீங்கள் உண்மைக் கதைகள் எழுதுவதுண்டா?

: உண்டு, உண்டு, உண்டு! கதை என்றால் வாழ்க்கையில் உண்மையாக நடந்திருக்கும் என்று மட்டும் உறுதிகூற முடியாது. எழுதுகிற எழுத்தாளனும் உண்மைக் கதையைத்தான் எழுதினான் என்று சொல்ல முடியாது!

: உங்கள் கதை பிரசுரிக்கப்படாமல் திரும்பி வந்திருக்கிறதா?

: ஓ! வந்திருக்கிறதே!

: அப்பொழுது நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

: மனம் ஒடியும். நமக்குக் கதை எழுத வரவில்லை போலிருக்கிறது என்று தோன்றும்.


: ஆனால் இப்பொழுது?

: இப்பொழுது அப்படித் தோன்றுவதில்லை!

: அப்படியானால் மனம் பக்குவப்பட்டு விட்டதா?

: அது தானாகவே பழக்கப்பட்டு விட்டது! என்







கதைகளைப் பற்றி ஆசிரியருக்கு என்ன தெரியும் என்று மனத்தில் நினைத்துக் கொண்டால் திரும்பிவிட்ட கதைகளைக் குறித்து மனம் நோகாது.

: திரும்பி வந்துவிட்ட கதைகளை என்ன செய்வீர்கள்?

: என் பெயரை எடுத்து விட்டு என் மனைவியின் பெயரைப் போட்டு, அதே கதையை அதே பத்திரிகைக்கு அனுப்புவேன்!

: பிறகு?

: பிறகு என்ன? கதை பிரசுரமாகும். நானும் பிழைத்துக் கொள்வேன்.

: கேட்க ஆச்சரியமாக இருக்கிறதே!

: ஆச்சரியம் என்ன? பெண் தாட்சிண்யம்!

: இப்பொழுது சமீப காலத்தில் பிரபலமடைந்த பெண் எழுத்தாளர்கள் எல்லாம் ஆண்களா, பெண்களா?

: பதில் சொன்னால் சர்ச்சைக்குரிய விஷயமாகப் போய்விடுமே!

: இப்படித்தான் எல்லா எழுத்தாளர்களும் செய்கிறார்களா?

: எல்லோரும் இப்படித்தான் செய்கிறார்களென்று சொல்ல முடியாது. காரணம் ஆண் எழுத்தாளர்கள்கூடப் பிரபலமாகி யிருக்கிறார்கள். திரும்பிவிட்ட கதையை என்ன செய்வது என்ற பிரச்னை இப்பொழுது எழுத்தாளர்களுக்கு இல்லை.

:அது எப்படி?

: சமீப காலத்தில் ஏகப்பட்ட பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. அவை எதை எதையாவது போட்டுப் பக்கத்தை நிரப்பினால் போதும் என்கின்றன. எனவே ஒரு பத்திரிகையிலிருந்து திரும்பிவிட்ட கதையை வேறொரு பத்திரிகைக்கு அனுப்பி விடுகிறோம்!

: ஆனால் வேறொரு பத்திரிகை ஆசிரியர் அதைப் பிரசுரிக்கிறாரா?

: ஆமாம்! பிரசுரித்துக் கதைரும் நன்றாக இருக்கிறது என்று கடிதம் எழுதுகிறார்!

:மராட்டிப் பிரசுரகர்த்தர்களில் புகழ்பெற்றவர் யார் என்று சொல்ல முடியுமா?

: சொல்வது கடினம்.''முடிவு பெறவில்லை'' ''ஏமாந்தவன்'', ''முழுக்க நனையவில்லை'', ''அதுவே அவனுடைய அறை''போன்ற கதைகளை வெளியிடுகிறார்கள் இக்கால பிரசுரகர்த்தர்கள்.இவர்களில் யார் சிறந்தவர்,யார்மட்டமானவர் என்று எப்படிச் சொல்ல முடியும் ?

: இருந்தாலும் நீங்கள் யாரைச் சிறந்த பிரசுரகர்த்தர் என்று எண்ணுகிறீர்கள்?

: எந்தப் பிரசுரகர்த்தர் எங்களை ஸ்தோத்திரம் செய்கிறாரோ, அவர்தான் சிறந்தவர் என்று நாங்கள் சொல்வது வழக்கம்.

: உங்களை எந்தப் பிரசுரகர்த்தர் ஸ்தோத்திரம் செய்கிறார்?

: ஏன் என்னை எவனும் ஸ்தோத்திரம் செய்ய மாட்டான் என்று நினைக்கிறீர்களா?

: அப்படி இல்லை. சரி, இப்பொழுது நாம் விஷயத்துக்கு வருவோமா ?

: ஓ, வருவோமே!

: உண்மையில் நீங்கள் எதற்காக எழுதுகிறீர்கள்?

: உங்களுக்கும் இந்தக் கேள்வி கேட்கணும் என்று தோன்றி விட்டதா?

: இல்லை, இல்லை! எழுதுவதற்கு ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும் அல்லவா?

: மனத்தில் தோன்றுவதை வெட்ட வெளிச்சமாக்க எழுதுவதாக நாங்கள் சொல்வது வழக்கம்.

: ஆனால், உண்மையில் மனத்தில் பட்டதை, கற்பனையையா எழுதுகிறீர்கள்?

: ஏன்இந்தச் சந்தேகம் உங்களுக்கு வந்தது?

: உங்களுடைய கதையெல்லாம் ஆங்கிலக் கதைகளிலிருந்து எழுதப்பட்டது என்று சில பேர் சொல்கிறார்களே, அதனால்தான்...

: இப்படிச் சொல்பவர்களே மராட்டி மொழிக்கு நிகர் இல்லை என்கிறார்களே; அது எப்படி சரியாகும் ?

: நீங்கள் உங்கள் நாடகங்களில் விசேஷமாக ஆங்கில மொழியி லிருந்துதானே நையாண்டித்தனத்தை (Farce) கையாண்டிருக்கிறீர்கள்?

:- யார் சொன்னது? எந்த எழுத்தாளனும் அப்படி ஒப்புக்கொள்ள மாட்டானே !

: சமீபத்தில் உங்களுடைய நாவல் குறித்து ஏதோ ஒரு பத்திரிகையில் விமர்சனம் வந்திருக்கிறது—

: ஆமாம். என்னுடைய 'சக்கரம்' என்னும் நாவல் குறித்து வந்திருக்கலாம்.

: ஆமாமாம்! 'சக்கரம்'தான். எங்களுடைய தாதர் நூலகத்தில் இந்த நாவலைப் பார்க்கவில்லை. நாவல் வரிசையில் உங்களுடையதைக் காணோம்.

: அப்பொழுது வேறோர் இடத்தில் இருக்கும்! இன்ஜினியரிங் புத்தகங்களுக்கு நடுவில் தேடுங்கள். காரணம், சமீபத்தில் எனக்கு 'கீதா ரகசியம்' என்ற நூல், மர்மக் கதை நூல்களின் அடுக்கில் கிடைத்தது. அது சரி, விமர்சனத்தைப்பற்றி நீங்கள் ஏதோ சொல்ல வந்தீர்களே!

: அதில் உங்கள் போட்டோ வந்திருக்கிறது.

: நான்தான் 'ப்ளாக்' செய்து கொடுத்தேன். 'ப்ளாக்' செய்ய ரொம்பச் செலவாயிற்று. ஒரு கதையின் சன்மானமே 'ப்ளாக்' செய்வதில் போய்விடுகிறது!

: நீங்கள் நேரில் பார்ப்பதற்குக் கடுகடுப்புடன் இருக்கிறீர்கள்; போட்டோவில் சிரிக்கிறீர்களே?

: ''என்னைப் பார்த்துச் சிரியுங்கள்'' என்று போட்டோகிராபர் சொன்னதால் சிரித்தேன்!

: அந்தப் போட்டோ என்ன ரொம்பப் பழசோ?

: ஏன்? நான் கிழவனாகத் தெரிகிறேனா?

: அப்படி இல்லை.! அந்தப் போட்டோவில் தலைமயிர் கறுப்பாகத் தெரிகிறது!

: அது பிரசுரித்தவரின் தவறு! முகத்தில் அடிக்க வேண்டிய மையைத் தலையில் அடித்துப் பிரசுரித்து விட்டார்!


: உங்களுக்கு இந்த வழக்கை எப்பொழுது விழுந்தது?

: நான் எழுத்தாளன் ஆனபொழுது!

: இன்று நீங்கள் நிறையப் பேசிவிட்டீர்கள். எனக்கென்னமோ நீங்கள் உங்களுடைய படைப்புக்களைப் பற்றி மிகவும் குறைச்சலாகச் சொன்னதாகத் தோன்றுகிறது!


: கேள்விக்கு ஏற்றபடிதானே பதிலும் இருக்கும்! தமிழாக்கம்: **பி. ஆர். ராஜாராம்**




சிங்கக் கழுகு
7
பீட்டர் ஓ'டான்னல்
ஸாண்டா மரியா கன்னிமாடத்தில்...
ஆன்ஜெலோ, ஃப்ரான்ஸெஸ்கா ...? ஓ! ஆமாமாம்! அந்த இரு அனாதைக் குழந்தைகளையும் எங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள முயன்றோம். ஆனால் அவர்கள் சதா ஓடிப்போய்விடுகிறார்கள்.
அவர்களை நான் எங்கே பார்க்க முடியும்?
பழங்காலக் கிடங்கு ஒன்று. யாரும் அதைப் பயன்படுத்துவதில்லை, இப்போது. அங்குதான் வசிக்கிறார்கள். உனக்கு வழி சொல்லுகிறேன்.
அவர்களுக்கு நல்ல வார்த்தை சொல்லி எங்கள் அனாதை ஆசிரமங்களில் வந்து சேரப் பண்ணு, பார்க்கலாம்.
அவர்கள் தனித்தனியே பிரிந்துவாழப் பிரியப் படவில்லை. என்றாலும் சொல்லிப் பார்க்கிறேன்.
1724
பாழடைந்துபோன ஒரு கிடங்கு. கவனிப்பாரின்றிக் கடலில் சிறிது சிறிதாக மூழ்கிக் கொண்டிருக்கிறது...
ஆன்ஜெலோ? ஃப்ரான்ஸெஸ்கா?
அக்கா! காப்பாற்று!
எங்களைக் கொல்லப் போகிறார்கள் அக்கா!
இவளை விடு! அவனைப் பிடி!
ஆ! ஐயோ!
1725



இதுபோன்ற மெல்லிய கத்தி குறி பார்த்து வீசப் பயன்படாது...
...ஆனால் நெருங்கி வந்தால் கத்தியை எப்படிப் பயன்படுத்துவது என்பது இவனுக்கு நன்றாய்த் தெரியும்.
ஆன்ஜெலோ! உன்னை ஓடிப்போகச் சொன்னேனே!
ஃப்ரான்ஸெஸ்காவை விட்டு விட்டு நான் எப்படிப் போவேன் அக்கா?
1729
ஃப்ரான்ஸெஸ்காவுக்கு மயக்கம் தெளிகிறது...
அக்கா ஒரு ஆளைத் தரையில் தாக்கி வீழ்த்தினாள். ஆனால் இன்னொருவன் கத்தி வைத்திருக்கிறான்.
ஆன்ஜெலோ! என்ன நடக்கிறது?
மாடல்டி தனக்கும் கத்தி தாங்கிய கயவனுக்கும் இடையில் ஒரு மெல்லிய தூண் இருக்குமாறு கவனித்துக் கொள்கிறாள்.
மெதுவாக முன்னேறி வரட்டும். நான் அவசரப்படக் கூடாது!
இதுதான் சரியான சமயம்!
(தொடரும்)


அம்மணிதன் மாடஸ்டியைப் பிடிக்க ஓடிவருகையில் அவள் 'ஜிப்'பை விருட்டென இழுத்துத் தன் இடையில் உள்ள...
...ஆடையை அவன் மேல் வலைபோல் வீசுகிறாள். அதே சமயம் காலணி கனைக் கழற்றி விட்டு...
ஜாக்கிரதைடா!
...கைப்பிடிக் கம் பிக்குக் கோகத் தொங்கியபடியே பாய்கிறாள்.
1726
மாடஸ்டியின் தாக்குதல் மலைப் பாறை போல் விழ, அம்மணிதன் மயங்கிச் சாய்கிறான். அதே சமயம் ஆன்ஜெலோ தன்னைக் கட்டிப் பிடித்திருந்த கைகளைக் கடிக்கிறான்.
ஆ-ஆ-ஆ!
ஆன்ஜெலோ! ஓடு!
காவலனின் கையில் மெல்லிய கத்தி ஒளிர்கிறது.
1727



ராஜாஜி

80. விபீஷணன்

சபையில் ராவணனுடைய தம்பி கும்பகர்ணன் எழுந்து பேசினான்:

''மகாராஜனே ! நீதி சாஸ்திரம் அறியாதவனைப் போல் நடந்துகொண்டபடியால் பெரும் அபாயத்தைத் தருவித்துக் கொண்டிருக்கிறீர். ராம லக்ஷ்மணர்கள் பேரில் உமக்கு விரோதம் இருந்தால் முந்தி அவர்களை எதிர்த்து அவர்களைத் தோற்கடித்து வதம் செய்துவிட்டுப் பிறகு அல்லவோ சீதையைக் கொண்டு வந்திருக்க வேண்டும்? அவ்வாறு செய்திருந்தீர்களானால் சீதையும் உம்மை விரும்பியே ஒப்புக் கொண்டிருப்பாள். மலையைத் தொடர்ந்து தழுவி நதி ஓடுவது போல் வெற்றி பெற்ற வீரனை அவள் தொடர்ந்திருப்பாள். அப்படி நீர் செய்ய வில்லை. யாரையும் ஆலோசனை கேட்காமல் பாப காரியம் செய்து விட்டு விரோதம் சம்பாதித்துக் கொண்டு இப்போது காலம் தாண்டியபின் ஆலோசனை சொல்லும்படி கேட்கிறீர். இது அரசனுக்குரிய உத்தம வழியல்ல. ஏன், மத்திம வழியுமல்ல.''

இவ்வளவும் தைரியமாகச் சொல்லிவிட்டுக் கும்பகர்ணன் அண்ணன் முகத்தைப் பார்த்தான். தான் சொன்ன கடினமான மொழிகளைக் கேட்ட ராவணன் முகம் வாடியதைப் பார்த்து அவனால் பொறுக்க முடியவில்லை. சூரன் கும்பகர்ணனுக்கும் ராவணனுக்கும் அளவுகடந்த அன்பு. நடந்தது நடந்து போயிற்று. இனி அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. அண்ணனை விட்டுவிடுவதற்கில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

ராமன் நிகரற்ற வில்லாளி என்பது கும்பகர்ணனுக்குத் தெரியும். ராவணன் பெற்றிருக்கும் வரங்களின் வரம்பும், குறையும் கும்பகர்ணன் அறிவான். ஆயினும் இப்போது ராவணனைக் கைவிடுவதற்கு இல்லை. அதைரியப் படுத்துவதில் பயனில்லை என்று எண்ணிக் கும்பகர்ணனும் மந்திராலோசனை சபையில் மற்றவர்கள் பேசியது போலவே தைரியம் பேச ஆரம்பித்தான் :

''நீர் செய்தது தவறு. கையாள்கிற முறையும் தவறு. முன்னால் செய்ய வேண்டியதைப் பின்னால் செய்கிறீர். பின்னால் செய்ய வேண்டியதை முன்னால் செய்து விட்டீர். ஆயினும் இந்த ராமனை நான் வதம் செய்வேன். பயப்பட வேண்டாம். அவன் பாணங்கள் ஒன்றிரண்டு என் மேல் படும். ஆயினும் அவனைக் கொன்றுவிட்டு அவன் ரத்தத்தைக் குடித்துவிட்டு உமக்கு நான் வெற்றி சம்பாதித்துத் தருவேன். அண்ணா ! கவலையற்றுச் செய்யவேண்டியதைச் செய்வீர்'' என்றான்.

கும்பகர்ணன் ஏதோ முன்னுக்குப் பின் முரணாகப் பேசினான் என்றும், அதற்குக் காரணம் அவனுடைய மந்த புத்தி என்றும் சிலர் வியாக்கியானம் செய்வது உண்டு. சாபத்தால் ஆறு மாதங்கள் தூங்கினாலும் விழித்தபோது அவன் அறிவுக்குக் குறைவில்லை. முதலில் உண்மையைப் பயப்படாமல் பேசினான். பிறகு ராவணனுடைய நிலையைப் பார்த்து அன்பு மேலிட்டுப் பேசினான். குடும்பக் காப்புக்கு வேண்டிய நற்குணங்களை நன்றாகப் பெற்ற வீரன்.

ராவணனுடைய பிரதான ஆலோசனைக்காரன் பிரஹஸ்தன். இவன் ராவணனுடைய பலத்தை எடுத்துக் காட்டி அவனை யாராலும் வெல்ல முடியாது என்றும் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் சொல்லி ராவணனைச் சந்தோஷப்படுத்தினான்.

ராவணனும் உற்சாகமடைந்து பேசினான்: ''குபேரனை ஜெயித்தவன் அல்லவா நான்? அவனை விரட்டியடித்து இந்த லங்கையைப் பற்றிக் கொண்ட என்னை யார் இங்கே வந்து எதிர்ப்பார்கள் ? பார்க்கலாம்!'' என்றான். சபை ஆரவாரித்தது.

* * *

அந்த ஆரவாரத்தில் சபையிலிருந்த விபீஷணன் சேரவில்லை. அரசனும் தமையனுமான ராவணன் எவ்வளவு கோபமாக இருந்தாலும் அபாயத்தை எடுத்துக் காட்டி அவன் போகும் தவறான வழியிலிருந்து அவனை மீட்டு ராஜ்யத்தையும் ராக்ஷச குலத்தையும்

காப்பாற்ற வேண்டியது தன்னுடைய கடமை என்று உணர்ந்து மற்றவர்கள் பேசியதை ஒப்புக் கொள்ளாமல் எழுந்து நின்று பேசினான்:

''சீதை ஒரு கொல்லுய விஷப் பாம்பு. அவளை ஏன் எடுத்து வந்தீர்? இப்போது உம்முடைய முதல் கடமை அவளைத் திருப்பி ராமனிடம் சமர்ப்பித்து விடுவதுதான். இதைச் செய்யாவிட்டால் எல்லாரும் அழிந்து நாசமாகப் போவோம். இது நிச்சயம்.''



ராமனுடைய சாமர்த்தியம், பலம், ஆயுதப் பயிற்சி எல்லாவற்றையும் எடுத்து மறைக்காமல் தைரியமாகச் சொன்னான்.

''ராமனை எதிர்த்தால் தோல்வி நிச்சயம். நம்முடைய அதிர்ஷ்டம் க்ஷீணித்து வருகிறது. சீதையைத் திருப்பிக் கொடுத்து, ராமனிடம் சரண் புகுந்து, சுகமாக ராஜ்யம், சம்பத்து, மாடம் எல்லாம் காப்பாற்றிக் கொள்வோம்'' என்றான்.

இப்படி விபீஷணன் விடாமல் மன்றாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்து பொறுமை இழந்தான்.

''சிற்றப்பா பேசும் பேச்சுக்கள் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. நம்முடைய குலம் என்ன? நம்முடைய சக்தி என்ன? புலஸ்திய குலத்தில் பிறந்த ஒருவர் இப்படிப் பேசுவதும், சபையோர் அதைச் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருப்பதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. சிறுமைக்குணத்தைக் காட்டி விட்டார் சிற்றப்பனார். அவருடைய பேச்சை ஒருநாளும் நாம் அங்கீகரிக்க முடியாது. இரண்டு மானிடர்களைக் கண்டு யாராவது இப்படிப் பயப்படுவார்களா? இந்திரனையும் அவன் தேவகணங்களையும் அடித்துத் தள்ளி நான் வெற்றி பெறவில்லையா? நம்மைக் கண்டு உலகம் இப்போதும் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விபீஷணர் இந்த யோசனை சொல்லுகிறார். இது நமக்கு அவமானமாக இருக்கிறது'' என்றான்.

இதைக் கேட்டு விபீஷணன், ''பாலனே! உனக்கு அனுபவம் போதாது. இப்படித்தான் பேசுவாய். நீ அரசனுக்கு மகனாக இருந்தாலும் அவனைக் கெடுக்க வந்த சத்துரு என்றே நான் நினைக்கிறேன். அரசனுக்கு ஹிதம் சொல்வதற்கென்று இருக்கும் மந்திரிகளே! அரசனுக்கு அழிவைத் தரும் யோசனை சொல்கிறீர்கள். லங்கேசனே! நான் சொல்வதைப் புறக்கணிக்க வேண்டாம். ஜானகியைக் கௌரவமாகத் திருப்பி ராமனிடம் கொண்டு சேர்த்துவிட்டு, நடந்து போன குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி பிரார்த்தித்துக் கொள்வீர். இதுவே வழி. வேறில்லை. இல்லாவிடில் அனைவரும் அழிந்து போவோம்'' என்றான்.

ராவணனுடைய கோபம் கரை புரண்டு போயிற்று.

''தம்பியாயிற்றே என்று நீ சொன்னதை யெல்லாம் இது வரை நான் பொறுத்து வந்தேன். இல்லாவிடில் இங்கேயே உன் உயிர் மாய்ந்திருக்கும். ஒருவனைக் கெடுப்பதற்கு உடன் பிறந்த சத்துருவைப் போல் வேறொருவருமில்லை. பொறுமைப்பட்ட தம்பிகளும் தாயாதிகளுமே சூரர்களுக்கு அவமானமும் தோல்வியும் தருவார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. அவர்கள் தங்களுடைய எண்ணத்தை மறைத்து வைத்துக் கொண்டு சமயத்தில் துரோகம் செய்வார்கள். கதையில் காட்டு யானைகள் சொல்லவில்லையா? 'நெருப்பையும் நாம் கண்டு பயப்படவில்லை. வேடர்களுடைய ஈட்டியையும் நாம் பொருட்படுத்தவில்லை. சுருக்குப் போட்டு இழுக்கும் கயிறும் சங்கிலியும் நம்மை ஒன்றும் செய்ய இயலாது. இந்தப் பாவி தாயாதி யானைகள் வேடர்களோடு சேர்ந்து கொண்டு நம்மைத் துன்புறுத்துகின்றனவே. அவை தாம் நம்முடைய பெரும் பயம்!' யானைகள் கதையில் சொன்னது எவ்வளவு உண்மை! சுகமாக இருக்கும் வரையில் தம்பி சிரித்துச் சந்தோஷமாக இருப்பான். அபாயம் வந்த போது கைவிடுவான். பூவிலிருக்கும் தேனைக் குடித்துவிட்ட பிறகு தேனீ அந்தப்பூவில் தங்காது. வேறு பூவைத் தேடிப் போய் விடும். அவ்வளவுதான் தாயாதிகள் சங்கதியும். எனக்குக் கஷ்டம் வந்த காலத்தில் நீ உதவவில்லை. வேறு யாராவது உன்னைப் போல் பேசியிருந்தால் இங்கேயே அவனை வதம் செய்து விட்டிருப்பேன். நீசனே! குலத்தை அவமானப்படுத்தப் பிறந்தவனே!'' என்று ராவணன் சீறி அதட்டித் திட்டினான். (தொடரும்)

உண்மையே வெல்லும்

முதல் பரிசு பெற்ற கட்டுரை

அடுத்த இதழில் இடம் பெறும்

சாதனைகள் இரண்டு!



1930ம் வருஷம் சென்னையில் உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்களான ஹாப்ஸ், சட்கிளிப் வந்து ஆடினார்கள். இவர்களோடு சி.கே. நாயுடு, முஷ்டாக் அலியும் சேர்ந்து ஆடினார்கள். சென்னைக் கோஷ்டியில் எம். ஜே. கோபாலன் பத்தே ரன்களில் ஆங்கில கிரிக்கெட் மன்னரின் விக்கெட்டைத் தூக்கிவிட்டார். இந்தப் பிரசித்தமான மாட்சில் ஜகந்நாதன் 32 ரன்களில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார்; அடுத்த இன்னிங்சில் நான்கு விக்கெட்டுகளை எடுத்தார். இப்படி உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்களை யெல்லாம் சென்னைக்கு அழைத்து வந்து ஆட வைத்தவர் விஜயநகரம் மகாராஜா — 'விஜி' என்ற செல்லப் பெயரால் அழைக்கப் படுபவர். (படம்: மேலே) அவருக்குக் கிரிக்கெட் என்றால் உயிர். 1936ல் விஜயநகரம் மகாராஜா தலைமையில் சி. கே. நாயுடு, அமர்நாத், வி. எம். மெர்ச்சண்ட், முஷ்டாக் அலி, நிஸார் போன்ற இந்தியக் கிரிக்கெட் மன்னர்கள் இங்கிலாந்தில் ஆடிவிட்டு வந்தது நினைவிருக்கும். இந்தக் கிரிக்கெட் போஷகர் விஜயநகர மன்னர் நினைவால் விஜி கோப்பைப் பந்தயம் 1966ம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. முதல் தடவையாக ஐந்து வருஷங்களுக்குப் பிறகு தெற்கத்தியப் பிரிவுக் கோஷ்டியினர் மாபெரும் வெற்றி பெற்று விஜி கோப்பையைப் பெற்றிருக்கிறார்கள்.


தெற்கத்தியப் பிரிவின் முதல் சாதனை

கிழக்கத்தியப்பிரிவு கோஷ்டியினரை முதல் இன்னிங்ஸில் 113 ரன்களில் 'அவுட்'டாக்கியது. தெற்கத்தியப் பிரிவு பௌலர் விஜய கிருஷ்ணா 21 ரன்களுக்குள் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது கிழக்கத்தியப் பிரிவைக் குறைந்த எண்ணிக்கையில் வெளியேற்ற உதவி செய்தது. தெற்கத்தியப் பிரிவில் ஸ்டார் பாட்ஸ்மன் சிவராமகிருஷ்ணன் பல ஆட்டக்காரர்கள் சரிந்து கொண்டு விழுந்த வேளையில், சளைக்காமல் ஆடி 103 ரன்களைக் குவித்ததால் தெற்கத்தியப் பிரிவின் எண்ணிக்கை 284க்கு உயர்ந்தது. முகம்மது இப்ராஹிம் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியும் பகவத் நான்கு விக்கெட்டுகளை எடுத்தும் கிழக்கத்தியப் பிரிவை 77 ரன்களுக்குள் அவுட்டாக்கி, 'இன்னிங்க்ஸ்' தோல்வியடைய வைத்தனர்.

இரண்டாம் சாதனை

வடக்குப் பிரிவுக்கு எதிராகக் காப்டன் முகுந்த் 74 ரன்கள் எடுத்தார். தெற்கத்தியப் பிரிவு முதல் இன்னிங்க்ஸ் ஸ்கோர் 194; வடக்குப் பிரிவு 146; இரண்டாம் இன்னிங்க்ஸில் தெற்கத்திய பிரிவு ஆட்டக்காரர்கள் அனைவருமே நன்றாக ஆடி ஸ்கோரை 421 ஆக்கினர். இரண்டாம் இன்னிங்க்ஸில் பௌலிங் அற்புதத்திறல் பகவத்தும், விஜய கிருஷ்ணாவும் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்த, இப்ராஹிம் ஒரு விக்கெட் எடுக்க வடக்குப் பிரிவு 104 ரன்களில் 'அவுட்' ஆகியது. தெற்கத்தியப் பிரிவு 365 ரன்கள் அதிகம் எடுத்து மாபெரும் வெற்றியைச் சம்பாதித்தது. காப்டன் முகுந்த், பாட்ஸ்மன்கள் சிவராம கிருஷ்ணன், டாண்டன், பௌலர்கள் பகவத், விஜய கிருஷ்ணா, இப்ராஹிம் ஆகியோரது சாதனைகள் இந்த விஜி கோப்பையின் வெற்றிக்கு அஸ்திவாரங்கள். வெற்றி பெற்ற தெற்கத்தியப் பிரிவு கோஷ்டிக்கு நம் வாழ்த்துக்கள். -குண்டுமணி





படங்கள்: 1. தெற்கத்தியப் பிரிவு காப்டனிடம் விஜி கோப்பையை வழங்குகிறார் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு மகாதேவன்.
2. வெற்றிபெற்ற தெற்கத்தியப் பிரிவுக் குழுவினர்.

31. விந்தை மனம்

புதுதில்லியில் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தின் மாடியில் காந்தாமணி ஒரு தனி அறையில் அமர்ந்திருந்தாள். அடிக்கடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து தண்டாயுதபாணி இறங்கி மாடிக்கு வந்தான்.

''பாரதமணி'யில் உள்ள நிருபரை உடன் அழைத்து வந்திருப்பார்... என்னிடம் ஏன் பொய் சொல்ல வேண்டும்? அவருக்கு என்னைக் கண்டாலே வெறுப்புத்தான்... எங்கே அவருடன் ஒட்டிக் கொள்வேனோ என்று பயந்துதான் பொய் சொல்லி யிருப்பார்'' என்றாள் காந்தாமணி சிரித்துக்கொண்டே.

''உன்னுடைய முயற்சி பலித்ததா?'' என்று தண்டாயுதபாணி ஆவலோடு கேட்டான். காந்தாமணி உதட்டைப் பிதுக்கினாள்.

''கொலைதான் என்று சாதிக்கிறார்'' என்றாள்.

''இருந்து விட்டுப் போகட்டுமே. அதற்காக இவன் போலீஸ் அதிகாரியாக மாறுவானேன்?''

''சிவராமன் அவருடைய நண்பராம். அந்தக் கொலைக்கு நீதி வழங்கும்படி செய்வது அவர் கடமையாம்.''



''உம்... வழிக்கு வர மாட்டான். நான்தான் முன்பே சொன்னேனே. நீதான் நேரில் பேசி, சரிப்படுத்தி விடலாம் என்றாய்'' என்றான் தண்டாயுதபாணி, கோபத்துடன். அவனுடைய மூக்குக் கண்ணாடிக்குள் தெரிந்த சிவப்பேறிய கண்கள் காந்தாமணிக்கே பயத்தைக் கொடுத்தன.

''என்ன! இடத்தைப் பார்த்துக் கொண்டீர்களா?'' என்றாள் காந்தாமணி.

''உன்னிடம் என்ன சொன்னான்?''— தண்டாயுதபாணி கேட்டான்.

''யாரோ உறவினர் வீட்டில் தங்கியிருப்பதாகச் சொன்னார்.''

''பொய்! ஹோட்டலில்தான் தங்கியிருக்கிறான். அறை நம்பரைக்கூட குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன். வெளியில் உள்ள போர்டில் முரளி அண்டு பார்ட்டி என்று போட்டிருக்கிறது. அவனோடு வேறு யாரோ வந்திருக்கிறார்கள்'' என்றான் தண்டாயுதபாணி.

''அவரால் என்ன செய்துவிட முடியும்?'' — காந்தாமணி கேட்டாள்.

''அவனிடம் பத்திரிகை பலம் இருக்கிறது. கொலை என்று சாதிக்கிறான். சிவராமனின் உடல் தகனமாவதற்கு முன் எப்படியோ அதைச் சில புகைப் படங்கள் எடுத்து வைத்திருக்கிறான். அவற்றை நாம் பார்க்கவில்லை என்றாலும் கொலை என்று இவன் நிரூபிக்க ஒருவேளை அந்தப் புகைப்படங்கள் பயன்படலாம் அல்லவா? மேலும் அந்தத் துரோகி இவனிடம் என்னவெல்லாம் சொல்லி வைத்திருக்கிறானோ? சீனாவுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு பற்றிய பல விஷயங்களைச் சிவராமன் அறிந்திருந்தான். ஒரு வேளை முரளியிடம் அவற்றை அவன் கூறியிருந்தால்?

முரளியின் சாமர்த்தியத்தை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அவனால் எந்தச் சமயத்திலும் கட்சிக்குக் கேடு விளையலாம்... வேறு வழியில்லை. கட்சியின் கட்டளையை நிறைவேற்றி விடு'' என்றான் தண்டாயுதபாணி, நிதானமாக.



காந்தாமணி ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். சற்று நேரம் அவளுடைய நினைவுகள் பல இடங்களில் திரிந்து விட்டுத் திரும்பின. ''இன்னொரு தரம் முரளியைச் சந்தித்துப் பேசிப் பார்க்கிறேனே'' என்றாள் காந்தாமணி.

''தலைவர் இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்தபோதே நினைத்தேன், நீ இதற்கு லாயக்கில்லை என்று.... நீ ஒரு கோழை'' என்றான் தண்டாயுதபாணி அருவருப்புடன்.

''நெல்லூர் விவசாயிகளின் புரட்சி சமயத்தில், என்னுடைய துப்பாக்கிக்கு இரண்டு போலீஸ் அதிகாரிகள் பலியானது ஞாபகம் இல்லையோ? நானா கோழை?'' என்று சீறி எழுந்து கேட்டாள்.

''பின்னே ஏன் இப்போது தயங்குகிறாய்?''

மைசூர் சந்தனத் தைலம்

இணையற்ற இயற்கை வழங்கிடும் இணையற்ற அதே தூய்மை.







உலகில் எங்குமே உற்பத்தி பெறும் சந்தனத் தைலங்களிலேயே
உன்னதமான தரமுடைய தைலம், தென்னிந்தியாவிலே
மைசூரிலிருந்து வருகிறது.

தரமறிந்த அழகுசாதன, ஒப்பனைப் பொருள்களின் தயாரிப்பாளர்கள்
பலர், உலகெங்குமே நம்பி உபயோகிப்பது மைசூர் சந்தனத் தைலம்.

தி கவர்ன்மெண்ட் ஸான்டல்வுட் ஆயில் பாக்டரி, மைசூர்
தி கவர்ன்மெண்ட் ஸான்டல்வுட் ஆயில் பாக்டரி, ஷிமோகா

காந்தாமணி பதில் சொல்லாமல் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நல்லதம்பி உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறான்'' என்றான் தண்டாயுதபாணி.

''என்னவென்று?''

''கல்லூரியிலே படிக்கிற சமயத்திலேயே உனக்கு முரளி மீது ஒரு கண் என்று....''



இந்த இடைத்தேர்தலுக்கு மத்திய அரசுக்குச் சுமார் 15 கோடி ரூபாய் செலவு ஆகும். இது 1967 தேர்தல் செலவைப்போல் மூன்று மடங்கு.
- டைம்ஸ் ஆப் இந்தியா-
''முந்து''

''சீச்சீ... நல்லதம்பியின் அறிவு அந்த அளவுக்குத்தான் எட்டியிருக்கிறது.''

''சரி சரி, இப்போது அதைப் பற்றி என்ன பேச்சு? இன்னும் பத்து நாட்களில் நீ கட்சியின் கட்டளையை நிறைவேற்றித் தீரவேண்டும். கூடியவரை உன்னுடைய ரிவால்வரைப் பயன்படுத்தாதே. உன்னிடமிருக்கும் விஷத்தைப் பயன்படுத்து. எப்படியும் பத்து நாட்களுக்குள் காரியம் முடிந்தாக வேண்டும்'' என்று கூறிவிட்டு வெளியேறினான் தண்டாயுதபாணி.

அவன் சென்ற பிறகு காந்தாமணி வெகுநேரம் ஜன்னல் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. கைப்பையிலிருந்த ரிவால்வரை வெளியில் எடுத்து அதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அதைப் பைக்குள் போட்டு விட்டு மீண்டும் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள். அவளுடைய மனக் கண் முன் முரளியின் களை பொருந்திய முகம் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

* * *

முரளி தில்லிக்கு வந்து பத்து நாட்களாகிவிட்டன. தில்லிக்கு வந்த பிறகு சாரதாவின் முகத்தில் சிறிது மலர்ச்சி தோன்றியிருந்தது. 'பாரதமணி'க்காகச் செய்திகளைச் சேகரிப்பதற்காக முரளி வெளியே போகும் நேரம் தவிர மற்ற நேரம் முழுவதையும் சாரதாவுடனேயே கழித்தான். அவளுடைய மனக் கவலையைப் போக்குவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தான். காந்தாமணியைச் சந்தித்ததைப் பற்றி முரளி, அவளிடம் கூறவில்லை. காந்தாமணி தில்லிக்கு வந்திருப்பது தெரிந்தால் தன்னைத் தொடர்ந்துதான் வந்திருக்கிறாள் என்று எண்ணிச் சாரதா பயப்படுவாள் என்பதால் காந்தாமணியைப் பற்றிச் சாரதாவிடம் தெரிவிக்கவில்லை.

ஹோட்டலில் முரளியுடன் தனிமையில் தங்கியிருப்பது சாரதாவுக்குக் கூச்சமாகவும் இருந்தது; இனிமையாகவும் இருந்தது. ஹோட்டல் சிப்பந்திகள் அவளை முரளியின் மனைவி என்றே எண்ணிப் பேசுவது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அந்தச் சமயங்களிலெல்லாம் முரளியை ஓரக் கண்ணால் கவனிப்பாள். அவன் எந்தச் சலனமும் இல்லாமல் சிரித்துக் கொண்டிருப்பான். அவனுடைய உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பதில்தான் சாரதாவின் பொழுது கழிந்து கொண்டிருந்தது.

அவளால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் இப்போது காட்டும் பரிவும், பாசமும் பழைய காதலின் தொடர்ச்சிதானா என்பதைத் தெரிந்து கொள்ள இயலாமல் தவித்தாள். சிவராமன் இறந்து விட்ட பிறகு, பிடிப்பற்று ஊசலாடிய சாரதாவின் இதயம் முரளியோடு ஒட்டிக் கொள்ளத்தான் தவித்தது. அவளுடைய இயல்பான இந்தத் தவிப்பை முரளி புரிந்து கொண்டானா என்பதை அவளால் அறிய முடியவில்லை.

அவனுடைய பார்வை, பேச்சு, நடவடிக்கை அனைத்துமே அவள்மீது அவன் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறான் என்பதைப் பறைசாற்றின. ஆனால் அந்த அக்கறை ஒரு சிநேகிதி என்ற முறையிலா, அல்லது உள்ளத்தில் இடம் பெற்றிருக்கும் காதலி என்ற முறையிலா என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் சாரதா தீவிரமாக ஈடுபட்டிருந்தாள்.

இரவில் ஒரே அறைக்குள் இருவரும் படுத்திருக்கும்போது, சாரதா தூக்கம் வராமல் நெளிவாள். அடிக்கடி விளக்கை ஏற்றி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி முரளியை எழுப்புவாள். இரவின் அமைதியும், தனிமையும் அவளிடத்தில் தோற்றுவித்த பரபரப்பையும், ஏக்கத்தையும், பெருமூச்சையும் முரளி கவனித்தானோ அல்லது கவனிக்காதது போல் பாசாங்கு செய்தானோ தெரியவில்லை. சில சமயங்களில் இரவு வேளையில் அவளுடைய காந்தப் பார்வை அவனுடைய பார்வையோடு மோதிக் கலந்தபோதுகூட அவனிடம் எவ்விதச் சலனத்தையும் அவள்

காணவில்லை. அந்த அறைக்குள் இரு உள்ளங்கள் கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டிருப்பது போன்ற பிரமை சாரதாவுக்குத் தோன்றியது. ஆனால் அப்படி ஓர் இனிமையான விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் உற்சாகத்தை முரளியிடமும் எதிர்பார்த்துத் தவித்தாள்.

மிகப் பெரிய பொறுப்புள்ள ஒரு கடமையை நிறைவேற்றும் அக்கறையும், கவலையும்தான் அவனிடம் தென்படுவதாக உணர்ந்தாள்.

ஆனால் உண்மையில் முரளி, அந்தரங்கமாகச் சங்கடப்பட்டுக் கொண்டுதானிருந்தான். ஒரு காலத்தில் எந்த உள்ளத்தின் அன்புக்கும், ஆசைக்கும் ஏங்கினானோ அதே உள்ளம் இப்போது அவனுக்காகக் கதவைத் திறந்துவைத்துக்கொண்டு காத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

ஆனால் அந்த இதயக் கோவிலில் ஒரு மூர்த்தி ஏற்கனவே பிரதிஷ்டை ஆகியிருந்ததே....?

வெறுங் கோயிலாகி விட்ட பிறகு வேறு ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யத் துடிக்கும் இதயத்தின் தவிப்பு அவனுக்குப் புரிந்தது. ஆனால் ஒரு மூர்த்தி ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஸ்தானத்தில் வேறொரு மூர்த்திக்கு இடமளிப்பது என்பது...

மூர்த்தி இல்லாத கோயிலுக்கு அருள் இல்லை. ஆனால் மூர்த்தி கோயிலுக்குள் குடியேற மறுக்கும்போது.... கோயில் பாழடைந்தே கிடக்க வேண்டியதுதானா?

ஒரு நாள் இரவு சாரதா உறக்கம் வராமல் கட்டிலில் புரண்டுகொண்டிருந்தாள். முரளி அந்த அறையின் ஓர் ஓரத்தில் கிடந்த இன்னொரு கட்டிலில் அமர்ந்தவாறு தலையணையை மடி மீது போட்டுக்கொண்டு 'பாரதமணி'க்குக் கட்டுரை எழுதிக்கொண்டிருந்தான். சாரதா பக்கவாட்டில் படுத்தவாறு முரளியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு காலத்தில் தன்னைக் காதலித்து ஏமாந்தவன் என்னும் நினைவினால் ஏற்பட்ட பச்சாதாபம், அவள் மனத்தை உறுத்திக் கொண்டே யிருந்தது.

ஒருவேளை அவனுடைய காதல் ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தால் அவனுடைய மனமும் இணங்கியிருந்திருக்குமோ....?

சாரதாவின் மனத்தில் சிவராமனின் முகம் தோன்றியது. கண்களில் நீர் நிறைந்து பார்வையை மறைத்தது.

சிவராமனைப் பற்றிய நினைவுகள் நெஞ்சில் இனித்தாலும் கைகூடாமல் போன ஏக்கம், வலியையும், கொடுத்தது. வலியைப் போக்க வேறோர் இதயத்தை நாடித் தவித்தாள்.

எதிர்க் கட்டிலில் அமர்ந்திருந்த முரளியின் உருவம் அவள் மனத் திரை முழுவதையும் நிரப்பிக் கொண்டிருந்தது. எழுதுவதை நிறுத்தி விட்டுத் தற்செயலாகத் தலை நிமிர்ந்த முரளியின் பார்வை சாரதாவின் பார்வையோடு மோதியது.

''இன்னும் தூங்கவில்லையா?'' என்று முரளி கேட்டான்.

''ஊஹூம்... நீங்கள் என்ன எழுதுகிறீர்கள்?''

'''பாரத மணி'க்குக் கட்டுரை.''

''எம். ஏ. பரீட்சையில் நீங்கள் முதலாவதாகத் தேறியிருந்தால் இப்போது பெரிய உத்தியோகத்தில் இருப்பீர்கள்!'' என்றாள் சாரதா.

''அதைப் பற்றி நானே கவலைப்படவில்லையே.''

''ஆனால் நீங்கள் எப்படிஃபெயிலானீர்கள்? மாகாணத்திலேயே முதலாவதாக வருவீர்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்தபோது, நீங்கள் ஃபெயிலானது விசித்திரம்தான்'' என்று கூறி விட்டு அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

முரளி பழைய நினைவில் சற்று நேரம் மௌனமா யிருந்தான். பிறகு சாரதாவைப் பார்த்தான்.

''பழைய கதை இப்போது எதற்கு?'' என்று கூறி ஒரு பெருமூச்சை விட்டு விட்டு மீண்டும் எழுதத் தொடங்கினான். பழைய நினைவுகளை நெஞ்சிலிருந்து, பிடுங்கித் தூர எறிந்துவிட வேண்டும் என்னும் துடிப்பு அவனுடைய முகத்தில் தெரிந்தது. சாரதா மிகுந்த ஆற்றாமையுடன் அவனைப் பார்த்தவாறே படுத்திருந்தாள். விளக்கு ஒளியில் குனிந்து எழுதிக் கொண்டிருந்த அவனுடைய உருவம், அவள் இதயத்தில் பலவித உணர்வுகளைப் புரட்டிக்கொண்டிருந்தது.

அவனுடைய எளிமையான தோற்றமும், முகத்தில் பொலியும் களங்கமற்ற மலர்ச்சியும், பார்வையில் தென்படும் கனிவும், கடந்த கால வேதனைகளை மனத்துள் மறைத்துக் கொண்டு சிரிக்க முயலும் பாங்கும் சாரதாவின் உள்ளத்தில் நிறைந்து சிலிர்ப்பை உண்டாக்கின.

இவனிடம் இவ்வளவு ஈடுபாடு தனக்கு இப்போது ஏற்படுவதை எண்ணி வியந்தாள். அதே சமயம் அவனுடைய இதயக் கதவு சாத்திக் கிடப்பதையும் உணர்ந்தபோது, அவள் மனம் தவித்தது. பலவித எண்ணங்களால் குழப்பப்பட்டுக் குழம்பிக்கொண்

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

எப்படி?

நம்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்விஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர். ஏனெனில் இம்முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாக கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்விஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம். இந்த சர்விஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்கள் ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் முதலைத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்த சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்,

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- இவர்களின் டிரைவர்கள், உடலியலையும், உளவியலையும் பொறுத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப்பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் [illegible] பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 100 [illegible] மற்றும் [illegible] கொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

இக்காரணங்களால் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடையே ஸதர்ன் ரோட்வேஸ் பெருமதிப்பை பெற்றிருக்கிறது.



TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை

டிருந்த சாரதா சற்று நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

*   *   *

நாடாளு மன்றத்தில் தினமும் காந்தாமணியைச் சந்தித்தான் முரளி. மன்றக் கூட்டம் முடிந்ததும் இருவரும் ஒன்றாகவே வெளியே வந்து கான்டீனில் அமர்ந்து வெகுநேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். அவளுடைய கட்சியைப்பற்றியோ, கொள்கையைப் பற்றியோ முரளி பேச்செடுப்பதே யில்லை. ஒரு முறை காந்தாமணி அதுபற்றிப் பேசியபோது முரளி சொன்னான்:



கண்பார்வை இல்லாதவர்கள் படிக்கும் பிரெய்லி எழுத்துக்களைக் கண்டுபிடித்தது கண் பார்வை தெரியாத ஒரு பதினைந்து வயது மாணவன்.
டெக்கான் ஹெரால்ட் - பாலி

''வீணான தர்க்கத்தில் ஈடுபட்டு மனத்தில் கசப்பை ஏற்படுத்திக் கொள்வானேன்? நான் சொல்வதை நீங்கள் ஏற்கப்போவதில்லை. நீங்கள் கூறுவது எனக்கு ஏற்காது. நமக்குள் ஏன் இந்தச் சர்ச்சை?''

''நமக்குப் பொழுது போக வேண்டாமா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தாள், காந்தாமணி. பிறகு சொன்னாள்: ''நீங்களும் உடன் வருவதாயிருந்தால், இந்த ஊரைச் சுற்றிப் பார்க்கலாமே?''

முரளி சம்மதித்தான். தினமும் நாடாளுமன்றத்தின் வேலை முடிந்ததும் இருவரும் டாக்ஸியில் புதுதில்லி நகரைச் சுற்றிப் பார்த்தார்கள். சில நாட்கள் இருவரும் சேர்ந்தே சினிமாவுக்குப் பகல் காட்சிக்குச் சென்றார்கள். இரண்டு மூன்று முறை தான் தங்கியிருந்த கிராண்ட் ஹோட்டலுக்கே முரளியை அழைத்து விருந்துண்ணச் செய்தாள் காந்தாமணி.

பத்து நாட்களுக்கு மேல் முரளியோடு நெருங்கிப் பழகிய காந்தாமணிக்கு அவன் மீது இனம் புரியாத அபிமானம் தோன்றியது.

கல்லூரியில் படித்த காலத்திலேயே அவனுடைய அறிவு முதிர்ச்சியிலும் பேச்சின் இனிமையிலும் முகப் பொலிவிலும் ஒருவித ஈடுபாடு தனக்கு ஏற்படுவதைக் காந்தாமணி உணர்ந்திருந்தாள். ஆனால் அவனுடைய பூர்ஷ்வா சிந்தனையும், மார்க்ஸியக் கொள்கைகளின்மீது அவன் கொண்டிருந்த வெறுப்பும்தான் அவளை அவனிடமிருந்து தூரத் தள்ளிக் கொண்டிருந்தன. கொள்கை அவளை விலகியிருக்கும்படி செய்தாலும், மானசிகமான அன்பு அவனையொட்டியே இருந்தது. கட்சியில் அவள் தீவிரமாக ஈடுபட்ட பிறகு அவனைப் பற்றிய நினைவிலிருந்து பூரணமாக விடுபட்டு விட்டாள். இப்போது எதிர்பாராத விதமாக அவனோடு நெருங்கிப் பழக வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தபோது பழைய எண்ணங்கள் மீண்டும் மனத்தில் தோன்றி அலைக் கழித்தன.

தனக்கு அளிக்கப் பட்டிருந்த பொறுப்பை எண்ணி எண்ணித் தன்னுள்ளேயே மறுகி மாய்ந்தாள். புதுதில்லியைச் சுற்றி இருவரும் திரிந்தபோது எத்தனையோ சந்தர்ப்பங்கள் சாதகமாக இருந்தன, அவளுடைய கடமையை நிறைவேற்ற. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த எண்ணி எண்ணிக் கடைசியில் அவளாகவே நழுவ விட்டுக் கொண்டே யிருந்தாள்.

தன்னுடைய நிலையை எண்ணித் தன்னுள்ளேயே அழுதாள். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமையைத் தன்னால் நிறைவேற்றவே முடியாது என்று நினைத்தாள். நிறைவேற்ற அவள் மனம் அனுமதிக்கவில்லை.

ஒரு நாள் முரளியைத் தேடி அவன் தங்கி யிருந்த ஹோட்டலுக்கே வந்து விட்டாள். அங்கு தங்கியிருப்பதை அவன் தன்னிடமிருந்து மறைப்பதற்கான காரணத்தை அறியவே சென்றாள். அப்போது முரளியின் அறைக் கதவு சாத்தியிருந்தது. வேலையாளிடம் விசாரித்தாள்.

''அவருடைய மனைவி உள்ளே இருப்பார்களே?'' என்றான் வேலையாள்.

''மனைவியா?'' — வியப்புடன் கேட்டாள், காந்தாமணி.

''ஆமாம், அவர் மனைவி, சாரதா'' என்றான் வேலையாள்.

காந்தாமணி வியப்பில் ஆழ்ந்தாள். முரளிக்கும் சாரதாவுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்ற கேள்வியைத் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு திணறினாள். ஒரு வேளை இவள் வேறு ஒரு சாரதாவோ? அறைக்குப் போய்ச் சாரதாவைச் சந்திக்கலாமா என்றுகூட நினைத்தாள். ஆனால் முரளி ஏதோ ஒரு காரணத்துக்காக மறைத்திருக்கும் போது தெரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ள அவள் பிரியப்படவில்லை. வேகமாக ஹோட்டலை விட்டு வெளியேறி, கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தை நோக்கிச் சென்றாள் காந்தாமணி.

(தொடரும்)

ஹிந்தி

பிழைக்கத்

ஹிமாம்சு ஜோஷி

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த 'கேதிகான்' என்னும் ஊரில் 5-5-1935ல் பிறந்தவர் ஸ்ரீ ஹிமாம்சு ஜோஷி. பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிப் பின்னர் சிறிது காலம் அரசாங்க ஊழியம் பார்த்துத் தற்பொழுது 'காதம்பினி' என்னும் ஹிந்தி சஞ்சிகையில் உதவி ஆசிரியராக இருக்கிறார். இவரது நவீனம் உத்தரப்பிரதேச அரசாங்கத்தின் பரிசு பெற்றுள்ளது. குழந்தைகளுக்கும் இவர் எழுதியுள்ளார். 'பிழைக்கத் தெரிந்தவர்' என்ற இவரது கதை சமூகத்தின் போக்கை எப்படி விண்டு வைக்கிறது; காலத்துக்கேற்ற கதையாக இருக்கிறது, பாருங்கள்!





முழுசாக முப்பது ஆண்டுகள் சர்க்கார் உத்தியோகம் பார்த்த பிறகு அரசாங்கத்தின் விதிமுறைகளின்படி வேலையிலிருந்து ஓய்வு பெற்றவனாக விளம்பரப்படுத்தப்பட்டு, அதாவது உலக வழக்கப்படி துறவறம் மேற்கொள்ளாவிட்டாலும், உத்தியோக முறைப்படி துறவறம் பூண்டவனாகக் கருதப்பட்டுக் குழந்தை குட்டிகளின் பட்டாளம் புடைசூழ நான் எனது கிராமத்துக்குத் திரும்பினேன். கிராமத்து மண்ணில் அடியெடுத்து வைத்ததும் வைக்காததுமாக நான் முதன் முதலில் கண்டது குக்கு பாபுவைத்தான். நான் கிராமத்துக்கு வரப்போகிறேன் என்பது தெரிந்ததும் அவர் முன்கூட்டியே எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். நான் அவருடைய பழைய ஆப்த நண்பன் என்பதனாலும் வெகு நாளைக்குப் பிறகு சொந்த ஊருக்குத் திரும்புகிறேன் என்பதனாலும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர்மேற்கொள்ளும் நாட்டுப்பணியில்நல்லது கெட்டது எதுவாயிருந்தாலும் மனமார ஈடு கொடுத்து ஒத்துழைப்பதாக நான் வாக்கு அளித்திருக்கிறேன் என்பதனாலும் என்னை வரவேற்கத் தாம் சித்தமாக இருப்பதாக அதில் குறிப்பிட்டிருந்தார். குறிப்பிட்டிருந்த படியே செய்யவும் செய்தார். ஊர்த் தொடக்கப் பள்ளியிலிருந்து ஏதும் அறியாத ஏழெட்டுச் சிறுவர்களைத் தம்மோடு அழைத்துக் கொண்டு, கொம்பு ஒன்றில் ஐதர் காலத்துப் பழைய கிழிந்த கொடியை மாட்டிக்கொண்டு, முன்கூட்டியே பஸ் நிலையத்தில் வந்து அமர்ந்திருந்தார். பஸ் வந்து நின்றவுடன் தமது தடித்துச் சிறுத்த கைகளைக் காற்றில் வீசி வீசிப் பிளந்த சூலங்கிலைப் போலத் தமது வாயைப் பிளந்து தொண்டை கிழியும் குரலில் 'வாழ்க மிசிராஜி!' என்று ஒலி எழுப்பினார். கூட இருந்த சிறுவர்களின் கூட்டுத் தொனி வானைத் துளைத்தது. நான் அந்த வரவேற்பில் அயர்ந்து போனேன்.

இதயம் தழுதழுத்தது. இமைகள் நனைந்தன. என்னை அவர் இறுக மார்புறத் தழுவிக் கொண்டார். பிறகு அப்படியே சரிந்து எனது இரு கால்களிலும் தமது இதயத்தைப் பதித்து முரண்டு பிடிக்கும் சிறு பிள்ளைக் கணக்கில் உட்கார்ந்து விட்டார். ஒருகால்

இதற்கு மேல் அவரால் உயர்ந்து வளர முடிய வில்லையோ, என்னவோ ?

நான் ஓர் அரசியல் தலைவனோ அருங்கலை வல்லுநனோ இல்லை. தாவர இயல் கற்பிக்கும் அதி சாமான்யப் பள்ளி ஆசிரியன்தான்; ஏழை வாத்தியார் என்ற அடைமொழிக்குள் அடங்கியவன்தான். நிலை இப்படி இருக்க, எனக்கு இப்படி ஒரு வரவேற்பு என்றால், குக்கு பாபுவின் தாராள மனப் போக்கை என்னவென்று கூறுவது?


நீண்ட பயணத்தின் நெடுங் களைப்புக் காரணமாக நான் நீட்டி முழங்கிப் படுத்திருந்தேன். சில முக்கிய அலுவல்களைப் பற்றிய சிந்தனையில் மனம் உழன்று கொண்டிருந்தது. இந்த நேரம் பார்த்துக் கிராமத்தைச் சேர்ந்த ஏழெட்டு 'நல்லோர்கள்' குக்கு பாபுவை முன் இட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

மனம் இல்லாவிட்டாலும் வேறு வழியின்றி எழுந்து உட்காரும்படி ஆகிவிட்டது. எல்லோருக்கும் தேநீர் தயாரிக்குமாறு மனைவியிடம் கூறினேன். சூடான தேநீர் நாக்கை நனைத்துச் சூடேற்றியதும் இந்நேரம் வரை வாய் அடைத்து உட்கார்ந்திருந்தவர்களின் தொண்டைகள் 'தானியங்கி காற்றூடி'யென இயங்கலாயின.

''குக்கு பாபுவின் பெரு முயற்சியினால் தான் இந்த வட்டாரம் ஒளி பெற்றுக் களையுற்றிருக்கிறது, மிஸ்ராஜி! சிரமதானத்தின் உதவி கொண்டு வடிகால் நீரைத் தேக்கிக் குட்டையைக் குளமாக்கிக் குளத்தைக் கடலாக்கி விட்டார் குக்கு பாபு. ஐம்பது முழ நீளத்துக்கு, நாற்பத்திரண்டு முழ அகலத்துக்கு மண்ணைப் பறித்துப் புரட்டிக் கரை கட்டிக் குளமாக்கி விட்டார். தேங்கியிருக்கும் நீர் கடலாகக் காட்சி தருகிறது. ஆமாம், கடலாகக் காட்சி தருகிறது. எருமைகளே மூழ்கி விடுகின்றன என்றால், ஆழம் எவ்வளவு இருக்கும் என்று நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்களேன்! அதனால் விஷமக்காரப் பிள்ளைகள் குளத்தின் பக்கமே போகக் கூடாது என்று தடை விதித்திருக்கிறோம். பெண் பிள்ளைகளே கூடக் குளத்தின் பக்கம் போகப் பயப்படுகிறார்கள். முழங்கால் அளவு நீரில் 'காக்கைக் குளி' குளித்துவிட்டுக் கரை யேறிவிடுகிறார்கள்.''

''கன்யா ரத்னப் பள்ளிக்கூடம் கூட இவருடைய பிரயாசையில் உருவானதுதான். இவர் மட்டும் இல்லையென்றால்...''

ஒருவன் விரலை ஆட்டி ஆட்டிக் கூறினான்: ''... இல்லையென்றால் அரசினர் எங்கே காதில் வாங்கிக் கொள்ளப் போகிறார்கள்? அதிகாரிகளிடம் சண்டை



பிடித்து இரவுக்கிரவே இவர் கட்டடம் எழுப்பிவிட்டார். ஆனால் அந்தப் பாழாய்ப் போன சுவர்தான் மழைக்கு முந்தியே உட்கார்ந்து விட்டது. ஆண்டவனின் அருள் என்று தான் கூறவேண்டும். நல்ல மழையிலே சுவர் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ, அந்த ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்! கிராமத்திலே ஒரு குழந்தை கூட விதைக்குத் தப்பியிருக்க முடியாது. ஹரே ராம்கா என்று ஒருத்தன் இருந்தானே, அவனுடைய சோம்பேறிக் கழுதைப் பயல் பெண் மட்டும் எருமை மாட்டின்மேல் மழை பெய்தாற்போல் மெதப்பா யிருந்து விட்டாள். காயம் பட்டுக் கால் ஒடிந்து விட்டது. உடனே சனங்கள் அவளை ஆசுபத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். குக்கு பாபுவினாலே அந்தச் சமயம் ஆசுபத்திரிக்குப் போக முடியவில்லை. ஆனால் அந்த அதிர்ஷ்டக் கட்டைப் பெண், பண்ணின பாவம், பிழைக்கவில்லை; செத்து விட்டது. அப்பொழுது எல்லோருக்கும் முன்னாலே தோள் கொடுத்தவர் குக்கு பாபுதான். இடுகாடு வரை இட்டுச் சென்று இந்தப் புண்ணியவாளன் தம் கையாலேயே தீ வைத்தார், தம் வயிற்றிலே பிறந்த குழந்தையாட்டம்!

"ஊரிலே யாராவது நோய் வாய்ப்பட்டால், மருத்துவரோடு புரோகிதரையும் கையோடு கூட்டி வந்து விடுவார் குக்கு பாபு. எந்த நேரத்திலும் இவரிடம் மூன்றரை முழத் துணி தயாராக இருக்கும். எப்போது என்ன தேவைப்படுமோ, யார் கண்டார்கள்? என்ன இருந்தாலும் இவர் அபார அறிவாளி இல்லையா?

"பத்திரிகைக்காரர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள், தெரியுமா? சிரமதானத்தின் மூலம் மூன்றேகால் மைல் நீளத்துக்கு முதன் முதல் சாலை போட்டவர் இவர்தான் என்கிறார்கள், பிரொஜி! நீங்கள் இரண்டுக்கு நாலாகக் கண் உள்ளவர்கள். நல்லாப் பார்த்திருப்பீர்கள். இவருடைய இந்தப் பணியில் மகிழ்ந்து அரசாங்கம் இந்த வட்டாரத்தின் நன்மைக்காக ஆயிரக்கணக்கில் உதவி வழங்குகிறது என்று பேசிக் கொள்கிறார்கள். அந்த உதவித் தொகையைக் கொண்டு குக்கு பாபு பெரிய பூங்கா சமைத்திருக்கிறார். ஊரிலே ஒன்பது நீர்த் தொட்டிகளை அமைத்திருக்கிறார், அந்தத் தொட்டிகளுக்குக் கருங்கல் மூடி போட்டிருக்கிறார். நாற்புறமும் மேடைகள் கட்டி விட்டிருக்கிறார். இவற்றுக்கெல்லாம் மேலாக, ஒரு 'காந்தி பஞ்சாயத்து'க் கட்டடமும் கட்டியிருக்கிறார்!"

குக்கு பாபுவைப் பற்றி அவ்வப்போது இப்படி ஏதாவது காதில் விழுவதுண்டு. ஆனால் நிர்மாணப் பணியில் விநோபா அடிகளைப் போன்று இவ்வளவு ஈடுபாடு இருக்கும் என்று எண்ணிப் பார்த்ததில்லை. பள்ளிக் கட்டடம் விழுந்து விட்டது என்றால், அதை அவருடைய அல்லது அவர் உதவியாளர்களுடைய குறையாக எப்படிக் கொள்ள முடியும்? 'சாதனைக் குறை'யாகக்கூட இருக்கலாம் அல்லவா? பெரிய பெரிய 'யானை பிராண்ட்' அணைகளா அவர் கட்டினார்? இத்தனை செய்ததே பெரிய காரியம் ஆயிற்றே! கால் நடைகளுக்குத் தண்ணீர் தட்டாமல் கிடைக்கும். பூங்கா, பஞ்சாயத்துக் கட்டடம்! மனத்துக்குள்ளாக என் உள்ளிருந்த ஏழை ஆசிரியர் குக்கு பாபுவைப் போன்ற பரோபகாரச் சிந்தனையுள்ள பெருமகனுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

ஒன்றன்பின் ஒன்றாக ஐந்தாண்டுத் திட்டத்தின் காகிதப் புள்ளி விவரங்களைப் போல் பேச்சு வார்த்தை தொடர்ந்து கொண்டே போயிற்று. எல்லோருடைய கூற்றுக்கும் முடிவானதொரு சாரம் என்னவென்றால், நான் வெளிநடப்பு இடையூறுகளிலிருந்தெல்லாம் தப்பிப் பிழைத்து, ஆண்டவனின் அருளோடு ரயிலின் அருளையும் பெற்று ஜாக்கிரதையாக, சௌகரியமாகச் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டதால், குக்குபாபுவின் பணிகளில் எல்லாம் என் ஒத்துழைப்பை நல்கி அவரது புகழுக்குப் பங்குதாரனாக ஆகவேண்டும் என்பதே ஆகும். நான் அவருடைய பால்ய நண்பன் என்பதோடு பக்கத்து வீட்டுக்காரனாகவும் இருப்பதை என் கிடைத்தற்கரிய பாக்கியமாகவே அவர்கள் கருதினார்கள்.

பேச்சுத் தொடர்ச்சியில் இன்னொரு விஷயமும் தெரிய வந்தது. அந்தப் பகுதிக்கு டெபுடி கமிஷனராக இருக்கும் ஜமீல் சாஹப் மறு நாள் வட்டார வளர்ச்சியைக் காண விஜயம் செய்ய விருப்பதாகவும், அவரது நிகழ்ச்சி நிரலில் பஞ்சாயத்து அலுவலகம், பூங்கா ஆகியவற்றைப் பார்வையிடும் அலுவல்களும் இடம் பெற்றிருப்பதாகவும் தெரியவந்தது. ஜமீல் சாஹப் எனது பழைய பள்ளித் தோழர். என்னோடு என் வகுப்பில் எனக்கு அடுத்த சீட்டில் உட்கார்ந்து படித்தவர். என்னை அவர் இன்னும் மறக்கவில்லை. எனவே, எங்கள் ஊரில் இருக்கும் நேரத்தில் என்னைத் தம் பக்கத்திலேயே இருத்திக் கொண்டு பார்வையிடுவார் என்பதாக எந்த ஊர்க் குருவி மூலமாக அவர்களுக்குச் செய்தி கிட்டியதோ, தெரியவில்லை! இந்த விஷயத்தில் நான் குக்கு பாபுவுக்கு உதவ வேண்டும். கிராமத்து வளர்ச்சியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் நல்லபடியாக அவர் காதுகளில் போட வேண்டும். இது கிராமத்தில் பிறந்த என் கடமை என்பதை நினைவூட்டவே அவர்கள் விஜயம் செய்து அத்தனை பெரிய பீடிகை போட்டனர்.

இதில் எனக்கு என்ன தடை இருக்க முடியும்?

அவர்கள் விடைபெற்றுச் சென்றதும் நான் என் மனைவியிடம் உள்ளம் திறந்து கூறினேன்: "உன் எதிரில் உட்கார்ந்திருக்கிறேனே, வெறும் வறட்டுப் புத்தகப் புழு! என்னால் என்ன பயன்? என்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மேலானவர் குக்கு பாபு. தமது வட்டாரத்துக்கு வளர்ச்சி தேடி ஒளியூட்டியதோடு தமக்கும் புகழ் தேடிக் கொண்டார்! என்னையும் அவரையும் ஈடுகட்ட முடியுமா? என்னைப்போல், உன்னைப்போல் உலகத்தில் யார்தான் வயிறு வளர்க்கவில்லை?"


அன்று மாலையும் நாங்கள் அதே பேச்சில் தான் ஆழ்ந்திருந்தோம். வால் அறுந்த முயலெனக் குக்கு பாபு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தார். பேயறைந்தாற் போலக் கதிகலங்கிப் போயிருந்த அவருக்குத்

வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.

அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.

எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.





லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்

LIPTON

லிப்டன் என்றாலே நல்ல டீ

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் இருக்கிறது

LRDG-5 TAM


பனாமா
கொள்ளைக்
கன்னி...
PANAMA
MADE IN INDIA
PANAMA
MADE IN INDIA
SMA-PA-S-47
பனாமா பிளேடுகள் ஷேவிங் செய்து கொள்வதை பொக்கிஷமாகப் போற்றும் வகையில் இன்பமயமாக ஷேவ் செய்கின்றன. நீங்கள் ஆனந்தமான அருமை ஷேவ் பெற அச்சாரமளிக்கின்றன.

தமது பைஜாமா தரையில் புரண்டது தெரியவில்லை; நீண்ட காதுகளை மறைத்து அணிந்து கொள்ளும் தொப்பி போன நிலை தெரியவில்லை. வெல வெலத்துப் போய் நின்றார்.

"மிஸ்ராஜி! நான் உங்களிடம்தான் வந்திருக்கிறேன்!" தமது பழைய வழக்கப்படி மூக்கால் பேசினார். ஐந்தாறு தடவைகள் இரு விரல்களுக்கிடையில் மூக்கைக் கொடுத்து அழுத்தி 'ஹ்ம், 'ஹ்ம்' என்று ஒலியெழுப்பிச் சிந்திக் கொண்டார். அப்புறம் என் முகத்தையே பார்த்தவாறு நின்றார்.

நான் பாய்ந்து அவரை வரவேற்க முனைந்தேன். "புத்தி! புத்தி! இந்தச் சாணிப் புழுவுக்கு இந்த இடமே போதும், மிஸ்ராஜி!" என்று கூறியவர் இரண்டொரு முறை மூக்கைத் தடவி விட்டுக் கொண்டு, அப்படியே சப்பணம் இட்டுத் தரையில் முளையடித்தாற் போல் உட்கார்ந்துவிட்டார். நான் எத்தனையோ வேண்டிக் கொண்டும் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை.

நான் அவருடைய ஆழ்ந்த நண்பன் என்பதை நினைவுபடுத்தினார். என்னைத் தாம் தமது உற்ற தோழனாகக் கருதுவதாகக் கூறினார். அதனால் என்னிடம் தமது சில சொந்த விஷயங்களைப் பேச விரும்புவதாகவும் குழந்தைகளை வெளியே அனுப்புமாறும் கேட்டுக் கொண்டார்.

நான் குறும்புக்காரக் குழந்தைகளை எப்படியோ வெளியே அனுப்பினேன். அவர் இங்கும் அங்கும் பார்த்து விட்டுக் கட்டை விரலைக் கோணலாக்கி என் மனைவியைச் சுட்டிக் காட்டினார். அவளும் வெளியே சென்றாள். அப்புறம் அறைக் கதவைச் சாத்துமாறு சொன்னார். அதையும் நிறைவேற்றினேன். கடைசியில் அழுந்தத் தாழ்ப்பாளைப் போடுமாறும் விளக்கை அணைத்துவிடுமாறும் வேண்டினார். ஏனென்றால், அவருடைய தாத்தா அவருக்குக் கூறுவதுண்டாம், 'சுவர்களுக்கும் காது உண்டு. கதவுகளுக்கும் கண் உண்டு' என்று!

அதையும் இயந்திரம் போலச் செய்து முடித்தேன். அப்புறம்தான் உட்கார எனக்கு உத்தரவு கிடைத்தது.

நான் நாற்காலியில் அமர்ந்தேன். அவர் இருட்டில் என் கால்களைத் தடவினார். நான் சட்டென்று கால்களைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டேன். அருகிலேயே நாற்காலிக்குக் கீழே என் கால்களுக்கு அடியில் மழைக் காலத்தில் அணியும் நீண்ட எனது 'கம்பூட்ஸ்'கள் இருந்தன. அவற்றில் தம் தலையை முட்டுக் கொடுத்துக் கொண்டு விம்மி விசிக்கலானார்.

நான்தான் அவருடைய ஒரே ஆப்த நண்பன் என்றும், அவர் கழுத்தளவு மூழ்கிவிட்டதாகவும் கூறினார். அவருக்கு நான் அன்போடு கைகொடுத்து உதவ வேண்டும் என்றார். சுதாமா கிருஷ்ணனின் அவைக்கு ஒரு பிடி அவல்கூட எடுத்து வராமல் வெறுங்கையோடு வந்திருப்பதாகவும், உயிர்ப் பிச்சை கேட்டு நிற்பதாகவும் உள்ளம் உருக, உடல் உருகக் கூறினார்.

என் வியப்புக்கு ஓர் எல்லை இல்லை. ஆயிரம் தடவைகள் நான் விஷயம் என்னவென்று கேட்டும் அவர் சொல்லத் தயாராயில்லை.



"ஒவ்வொரு நாளும் உங்க தியேட்டர் ஆபரேட்டர் திரைக்கதையில் ஒரு புதுமை செய்கிறார்!"

"அப்படியா!"

"1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்று ரீல்களை வரிசைப்படி காட்டாமல் தம் இஷ்டப்படி 8, 6, 4, 3, 2, 1, 5, 7 என்று ரீல்களை போட்டுப் படம் காட்டுகிறார்!"

கண்ணீரை மட்டும் வடித்துப் பூட்ஸ்களைக் கழுவிக் கொண்டிருந்தார்.

நான் எழுந்து அவரைத் தரையிலிருந்து தூக்கி நிறுத்த முயன்றேன். அவர் என் இரு கால்களையும் இடுக்கியென நெருக்கிப் பிடித்துக் கொண்டார். தழுதழுத்த குரலில், அவர் பேச்சை நான் ஏற்பதாக வாக்களிக்க வேண்டும் என்றும் யாரிடமும் கூறுவதில்லையென உறுதி கூறவேண்டும் என்றும் கெஞ்சாத தோஷமாக வேண்டினார்.

ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக என் பால்மணம் மாறாத பிள்ளைகள், உடல் நலிவுற்ற மனைவி, காலஞ்சென்ற என் தந்தை, பற்றாக்குறைக்கு என் உற்றார்—உறவினர், நண்பர் தோழர் ஆகியோர் மீது — அவருக்கோ ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. — பல முறை சபதம் செய்து அதன் பின்னரே கூறத் தொடங்கினார்:

"ஜமீல்சாஹப் தங்கள் நண்பர் அல்லவா?"

"ஆமாம்!"

"அவர் நாளை நமது கிராமத்துக் கூட்டுறவுப் பூங்காவுக்கு வரப் போகிறார்! தெரியும் அல்லவா?"

நான் தலை அசைத்தேன்.

"அவர் உங்களையும் தம்மோடு இருத்திக் கொள்வார் அல்லவா அந்த நேரங்களில்?"

"கொள்ளலாம்!"

"அப்பொழுது தாங்கள் பேசாமல் இருக்க வேண்டும். மற்றவற்றை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!"

"என்ன? என்ன?" — என்னையறியாமல் கேட்டவாறே நான் அவரை நோக்கினேன்.

"நீங்கள் பேசாமல் இருங்கள்! அதிகமாகக் கேட்டால் கிராமத்தின் வளர்ச்சி பற்றி இரண்டு வார்த்தைகள் நல்லபடியாகச் சொல்லுங்கள். இயலாவிட்டால் உதடுகளைத் தைத்துக் கொண்டு உட்கார்ந்

இருங்கள். மீதமுள்ளவற்றை நாங்களே பார்த்துக் கொள்கிறோம்.''

'' குக்குபாபு !'' விதிர்த்து விறுவிறுத்துப் போய் நான் கூறினேன் : ''என் மண்டை மரமண்டை. எனக்கு விளங்கவில்லை. நீங்கள் என்னவோ பார்த்துக் கொள்ளுவதாகச் சொல்கிறீர்களே, அது என்ன?'' என்று கேட்டேன்.

''விஷயம் என்று ஒன்று இருக்கிறதா, மிரொஜீ ! என்ன இருந்தாலும் நீங்கள் பச்சைக் குழந்தை, அறியாப்பிள்ளை !'' என்று கூறி அறியாத ஜடமான என்னைப் பார்த்தார் அவர். சற்று நிதானித்து முந்திய குரலை மாற்றிக் கொண்டு, ''நான் என்னத்தைச் சொல்ல? யாரிடம் சொல்ல? இந்த இரட்டைக்கால் முட்டாள் மிருகங்களின் நிலையை!'' என்றார். ஒரு கையால் அவர் தமது குரங்கு போன்ற இரண்டு அங்குல நெற்றியை அழுந்தப் பிடித்துக் கொண்டார். ''இவர்கள் என் உயிருக்கு உலை வைக்கத் திட்டமிட்டு விட்டார்கள் மிரொஜீ ! என் தோலை உரிக்கச் சித்தமாகி விட்டார்கள்! என்னை ஒழிக்கத் தீர்மானித்து விட்டார்கள், எங்கேயும் இனி நான் தலைகாட்ட முடியாது. சொல்லுங்கள், வாய் திறக்காமல் உட்கார்ந்து விட்டீர்களே ? நான் என்ன செய்யட்டும், சொல்லுங்கள் ! எங்கேயாவது போய் விஷத்தைத் தின்று உயிரை விட்டு விடட்டுமா ?'' என்றும் கேட்டார்.

நான் வியந்து போய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். 'நீங்கள் விஷத்தைத் தின்று உயிர் விடுங்கள், விடாதீர்கள்' என்று நான் எப்படிக் கூறுவது? இது விஷயத்தில் ஓர் அபிப்பிராயம் கூற எனக்கு ஏது உரிமை ? ''அப்படி என்ன நேர்ந்து விட்டது, குக்குபாபு ?'' அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் நான் ஒரு கேள்வியைப் போட்டு வைத்தேன்.

'' விஷயம் என்று ஒன்று சொல்வதற்கு இருக்கிறதா, மிரொஜீ ?'' அலுத்துச் சலித்துக் கொண்டு அதே பரத வாக்கியத்தை மறுபடியும் ஒரு முறை கூறினார்: ''உங்களுக்குத் தெரியும், நீங்கள்தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, நான் எத்தனை பெரிய இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டேன் ! எல்லாம் தெரிந்தும் என்னை நோண்டி நோண்டிக் கேட்டு என் இரு கண்களிலும் விரல்விட்டு ஆட்டுகிறீர்களே !'' என்று என்னை எல்லாம் தெரிந்தவனாக்கி முடித்தார்.

என்னால் எதுவுமே பேச முடியவில்லை. அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர் கைகளை ஆட்டி மெதுவாக ஏதோ முணுமுணுத்தார். எனது ஐயத்தைப் போக்க நீண்டதொரு சொற்பெருக்கு ஆற்றினார். அதன் சுருக்கமான சாரம் இதுதான். அவர் கூட்டுறவுத் தோப்புக்காகத் தமது நிலத்தைக் கொடுத்தார். ஆம், தமது என்றிருந்தவற்றை அர்ப்பணித்தார். ஆனால் கிராமத்தார்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டார்கள். அதோடு நில்லாமல் அவருக்கு எதிராகச் சூழ்ச்சியும் செய்தார்கள், அவரைத் தனியாள் என்று எண்ணி. இப்பொழுது என்னை விட்டால் அவருக்குக் கைகொடுத்து உதவ வேறு யாரும் இல்லை.

'' எத்தனை மரங்கள் வைத்தீர்கள் ?''

''இதுவும் ஒரு கேள்விக்குரிய விஷயமா, மிரொஜீ ! நாக பஞ்சமி அன்று ஆண்டவன் பெயரைக் கூறி முதன் முதலாக இருபத்தொன்றேகால் மரங்கள் நட்டோம். ஆனால் எனது அசோகப் பூங்காவை இந்தச் சாவாடு செத்த ராவணன்கள் அழித்துவிட்டார்கள். அப்புறம் என் பசு மேய்ந்து விட்டதாகக் குற்றத்தை என் தலையில் சுமத்திவிட்டார்கள். நான் செடிகளைப் பிடுங்கி யாருக்கோ விற்று விட்டதாகக்கூடக் கதை கட்டி விட்டார்கள். அவர்களுக்கு என்ன தெரியும், என் மன நிலை? இப்படிப் பலன் தரும் செடிகளைப் பிடுங்கிப் போட்டால், ஆண்டவன் சும்மா விடுவானா? அதனால் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு அவன்மேல் பாரத்தைப் போட்டுப் பேசாமல் இருந்து விட்டேன் !''

அவருக்குப் பதிலாக அவர் ஸ்தானத்தில் வேறு யாராவது இருந்தால் என்ன செய்திருப்பார்கள் என்பதையும் அவர் கூறினார். லட்சம் துஷ்டர்களுக்கிடையே ஒரு நல்லவன் தனியாக என்ன செய்துவிட முடியும்?

''இப்பொழுது என்ன செய்வது? நீங்கள் என்னவோ ஐந்நூறு மரங்கள் வைத்திருப்பதாகச் சொன்னீர்களே!'' என் உதடுகள் திறந்து கொண்டன.

அவர் யோசித்தவண்ணம் கூறினார், அதற்காகத்தான் என்னிடம் வந்திருப்பதாக. '' நான் சரி என்று சொன்னால் முந்நூறு—நானூறு கிளைகளை ஒடித்து வந்து பூமியில் நட்டு விடலாம். அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, சுலபமாக முடித்து விடலாம். ஆனால் வேறு ஒரு சிரமம்தான் குறுக்கிடுகிறது!'' என்றார்.

'' என்ன அது?''

நான் நூறு தடவை குடைந்து கேட்டபின் தண்ணீர்த் தொட்டிகளில் நீர் வருவதில்லை என்பதை ஒருவாறு ஒப்புக் கொண்டார்.

''அப்படியானால் தொட்டிகள் கட்டுவானேன் ?''

'' கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக!'' சட்டென்று பதில் அளித்தார் அவர். ஒரு முறை தண்ணீர் பற்றிக் கிராமத்தார்களுடன் தகராறு மூண்டுவிட்டதாம். கிராமத்திலே ஒன்பது தண்ணீர்த் தொட்டிகளாவது ஏற்படுத்தவில்லை என்றால், 'நான் என் அப்பனுக்குப் பிள்ளை இல்லை' என்று அடித்துச் சொல்லி விட்டாராம். அப்புறம் அப்பாவுக்குப் பிள்ளையாவதற்காகத் தண்ணீர்த் தொட்டி கட்டி விட்டாராம். மேலே அவர் கூறினார்,''நான் சரி என்று சொன்னால் இரவுக்கிரவே வாளிகளைக் கொண்டு தொட்டிகளில் நீர் நிரப்பிவிட நேரம் ஆகாது!'' என்று! காந்தி பஞ்சாயத்து அலுவலகத்தில் இருக்கும் தம் பிள்ளைகளை இப்பொழுதே வீட்டுக்கு அழைத்து வந்து விடுவதாகவும், எருமையைத் தம் வீட்டு முற்றத்தில் கொண்டு வந்து கட்டிக் கொள்வதாகவும் சொன்னார். கூடவே இன்னொன்றும் சொன்னார். நான் சரி என்று கூறினால் கிராமத்துக் கூட்டுறவுக் கழகத்தைச் சேர்ந்த எருமை அது, ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்குவ



மதிப்பிற்குரிய அன்னை

செட்டிநாட்டரசி
உயர்திரு ராணி லேடி மெய்யம்மை ஆச்சி

1905 அக்டோபர் 11-ஆம் நாள்--1970 மார்ச் 1-ஆம் நாள்

சென்ற ஆண்டு இதே தினம் (1-3-1970) எங்களை விட்டுப் பிரிந்து
ஆனால் என்றும் எங்கள் நெஞ்சை விட்டகலாமல் நிலைத்திருக்கும்

கொடைவள்ளல்

மாண்புமிகு செட்டிநாட்டரசியாருக்கு

வணக்கம் செலுத்தி
அன்னார் ஆற்றிவந்த நற்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென
உறுதி பூணுகிறோம்.

பின்கண்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரும் பணியாளர்களும்

ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி, காந்திநகர், சென்னை ○ ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை ○ செட்டிநாடு கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிட்., ○ மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிட்., ○ சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிட்., ○ லோட்டஸ் மில்ஸ் லிட்., ○ சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (திருவாங்கூர்) பிரைவேட் லிட்., ○ ஸ்ரீ கருணாம்பிகை ஜின்னிங் பேக்டரி ○ டுபாரி குரூப் எஸ்டேட்ஸ், ○ மேபிளவர் எஸ்டேட் ○ தொட்லக்கூண்டா எஸ்டேட் ○ சேஷகிரி எஸ்டேட் ○ கூண்டல்லி எஸ்டேட் ○ கொடகிபைல் எஸ்டேட்.

தற்காக வாங்கியது என்று கூறச் சித்தமாயிருப்பதாகவும் கோடி காட்டினார்.

அவர் இதுபோல் என்ன என்னவோ சொல்லிக்கொண்டே போனார். என் மனத்தில் என்னவெல்லாமோ எண்ணங்கள் பாம்பாகப் புரண்டு சுருண்டு சீறின. நான் ஓர் ஐயத்தை எழுப்பினேன். 'அதிகாரி காலையில் ஆய்வுக்கு வரப்போவதாகக் கேள்விப்பட்டேனே! நடந்திருப்பவை இவைகள்தாம் என்று அவருக்குத் தெரிந்து விட்டால்...?'

''ஊஹூம்!'' அவர் சட்டென்று தலையசைத்தார்: ''அதிகாரி காலையில் வரமாட்டார். இரவுதான் வருவார். அந்தக் காரியத்தை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன்! இந்தக் குக்குவைச் சாமான்யப்பட்டவன் என்று எண்ணுகிறீர்கள்!''

''இந்தத் தகடுதத்தத்துக்கெல்லாம் நான் ஆள் இல்லை, குக்கு பாபு!'' என் இதயத்திலே கல்லைச் சுமந்து எப்படியோ நான் உருட்டிவிட்டேன். ''என்னைக் கேட்டால் நீங்கள் கமிஷனரிடம் உங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டு விடுங்கள். அப்புறம் உங்களைக் காப்பாற்றும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்!...'' என்றேன்.

''குற்றமா?'' சர்ப்பமாகச் சீறினார் குக்கு பாபு. என் பேச்சு அப்படியே அரைகுறையாகக் கத்திரித்து விட்டது. ''நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள், மிஸ்ராஜி!'' — தமது சின்னஞ் சிறு மார்புக் கூட்டை ஒரு தட்டுத் தட்டிக் கூறினார்: ''உங்கள் மூளை புரண்டு விட்டதா என்ன? என்னைப் போன்ற ஆளிடம் இப்படி ஒரு வார்த்தை சொல்லி ஆண்டவனின் முகத்தில் நீங்கள் சாணியை அல்லவா பூசிவிட்டீர்கள்! இது உங்களுக்கே அழகாக இருக்கிறதா?'' அப்புறம் அவருக்குத் தொண்டையை அடைத்து விட்டது.

நான் மௌனமானேன். அவர் மறுபடியும் சிலம்பு வித்தை புரிபவன் போல் கால் நடை பழகி என் கால்களோடு ஒட்டிக் கொண்டார். ''இதைக் குற்றம் என்று கூறுகிறீர்கள்,மிஸ்ராஜி! இது ஒரு தவறு; சிறு பிழை. நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் நாட்டுக்காக என்னவெல்லாம் செய்யவில்லை? நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் தலை வைத்துப் படுத்தேன் என்றால் அது ஒரு குற்றமாகுமா? நான் கட்டிய கட்டடம்தானே அது? பஞ்சாயத்து எருமை தரும் பாலில் இரண்டு சொட்டு என் குழந்தைகள் தொண்டையிலும் இறங்கிற்று என்றால் அது ஒரு பெரும் குற்றமா? எத்தனைபேர் வெள்ளையப்பனைச் சேர்த்துவிடவில்லை? நான் இரண்டு வேளைச் சாப்பாட்டுக்குத் தேவையான பொருள் சேர்த்து விட்டேன் என்றால், அது என்ன அவ்வளவு பெரிய மன்னிக்க முடியாத குற்றமா?''

''.... ஆனால் குக்கு பாபு! என் மனசு இதற்கு எல்லாம் தயாராக இல்லை. என்னால் இதைச் சரியென்று கொள்ள முடியாது!'' என்று கூறி நான் கதவின் பக்கம் ஓடினேன். அவரோ என் மீது கழுகாகப் பாய்ந்தார். ஆயினும் நான் முந்திக் கொண்டு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து விட்டேன்.

சிறிது நேரம் அவர் பிரமித்துப் பேதலித்து விழிகள் அகல விரியப் பார்த்துக் கொண்டே



மிக்கி மௌஸுக்கு இப்பொழுது வயது 43 ஆகிறது. வால்ட் டிஸ்னியின் இந்தக் கார்ட்டூன் பிறந்த ஆண்டு 1928. 'ஹக்'-பாலி

நின்றார் என்று கேள்விப்பட்டேன். அப்புறம் முணு முணுத்தவாறே என்ன என்னவோ சாபமிட்டுக் கொண்டு போய்விட்டாராம். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால், தம் வீட்டு முற்றத்துக் கைப்பிடிச் சுவரில் ஏறி நின்று கொண்டு கைகளை ஆட்டி ஆட்டி என்னைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். எனக்குத் தீய நடத்தைக்காரன், மோசடிக்காரன், மானங்கெட்டவன் என்றெல்லாம் பட்டம் சூட்டினார். நான் கிராமத்துக்கு வந்ததுமே கிராமத்துக்குச் சனியன் பிடித்துவிட்டது! கிராமத்தை ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் நான் மூச்சு விடுவேன் என்றெல்லாம் கூடப் பொருமித் தள்ளினார்.

நான் எல்லாவற்றையும் இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டு விட்டேன்.

இரவு நான் படுக்கையில் படுத்ததுதான் தாமதம்; வாசலில் ஒரு டஜன் குழந்தைகளோடு ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள். அவள் கூறிக் கொண்டிருந்தாள்: அவள் எனக்கு அண்ணியாம். என்னை அண்ணனுக்கு மேலாகக் கருதுகிறாளாம். ஆனால் நான் அவளுடைய நெற்றிக் குங்குமத்தை அழிக்கத் திட்டம் தீட்டுகிறேனாம். அவள் கைம்மை உற்றுவிட்டால், என் அண்ணன் இறந்துவிட்டால், நான்தான் அந்தக் குடும்பச் சுமையை ஏற்கவேண்டுமாம். நான்கு இளம் பெண்கள் திருமணத்துக்குத் தயாராக இருக்கிறார்கள். வரதட்சிணை முதல் வரன் பார்த்துக்கொண்டு வருவது வரை எல்லாம் என் தலையில்தானாம்!

நான் என் தாய் தந்தையருக்கு ஒரேபிள்ளை. எனக்கு மேலோ கீழோ அண்ணனோ தம்பியோ கிடையாது. இந்த மாற்ற முடியாத உண்மை நிலைக்குப் பின்னரும் கூட, என் தமையன் மீது எனக்கு மிகுந்த அனுதாபம் உண்டு என்று தான் நான் சொல்லும்படி ஆயிற்று! நான் என் அண்ணியின் சிந்தூரத்தை அழிக்க எள்ளளவும் விரும்பவில்லை என்பதையும் உறுதியாகக் கூறினேன்.

நான் இத்தனை கூறிய பின்னரும் கூட எனது அந்த அண்ணி சொல்லிக் கொண்டே போனாள். நான் என் அண்ணனின் மீது ஏதோ

மந்திரம் போட்டு விட்டேனும். நான் என்ன மருந்து வைத்தேனே என்றான். என் வீட்டுக்கு வந்து திரும்பிய பின்னர் அவர் தம் சுய நிலையில் இல்லையாம். பித்தம் தலைக்கேறியவர் கணக்கில் நடந்து கொள்ளுகிறாராம். விஷப் பாட்டிலைக் கையில் எடுத்துக் கொண்டு தோப்பின் பக்கம் ஓடிக்கொண்டிருந்தாராம். நல்ல வேளையாக மக்கள் ஓடிச்சென்று சமயத்தில் பிடித்துவிட்டார்களாம். இல்லாவிட்டால் அந்த ஆண்டவன்தான் அறிவான், என்ன நிலையாகுமோ என்று!

என் அண்ணி அழுது புலம்பத் தொடங்கி விட்டாள். குழுமியிருந்த டஜன் அண்ணன் பிள்ளைகளும் அன்னையின் குரலோடு குரல் இணைத்துக் கருதி சேர அழத் தொடங்கி விட்டார்கள்! எனக்கு அறிவு பிறழ்ந்துவிட்டது. வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் விழித்துக்கொண்டு விட்டார்கள். என் மனைவி தன் தலையில் இரண்டு கைகளாலும் அடித்துக் கொண்டு எனக்கு ஈரமற்ற நெஞ்சு என்று சாடினாள். காரணமின்றி இந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளை என் வீட்டுக்கு வரவழைத்துத் துயரம் அளிப்பதாகவும் குற்றம் சாட்டினாள். இந்த அக்கிரமத்தைக் காண அவளுக்குச் சகிக்கவில்லையாம்.

என் மனைவி ஆறுதல் கூறவே, அண்ணி தனது அழுகையை எப்படியோ நிறுத்தினாள். அதைத் தொடர்ந்து அந்தக் குழந்தைகளின் அழுகையும் நின்றது.

''ஆமாம், அவர்கள் என்ன வேண்டும் என்கிறார்கள்?'' உள்ளம் சோர்ந்து, வழுக்கைத் தலையில் முத்திட்டுவிட்ட வியர்வையைத் துடைத்தவாறே நான் கேட்டேன்.

அது தனக்குத் தெரியாது என்றும் எனக்குத்தான் தெரியும் என்றும் அண்ணி விசிப்புக் கிடையே கூறினாள்.

நான் என்ன செய்வேன்? இந்த நள்ளிரவில் இப்படி ஒரு வேடிக்கை! ஆளை விட்டால் போதும் என்பதற்காக நான் 'சரி' என்று தலையாட்டி வைத்தேன். அவர்களுக்கு விடையளித்து நிம்மதியாக மூச்சு விட்டேன்.

காலையில் பொழுது விடிவதற்கு முன்பாகவே வீட்டுக் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

குக்குபாபு எதிர்த்தாற்போல் நின்றுகொண்டிருந்தார். அணிலைப் போல் என் காலடியில் விழுந்து புரண்டு கூறினார்: 'இந்தக் கலியுகத்தில் நான் கிருஷ்ணன் — சுதாமா போல் நட்பைக் காப்பாற்றி யிருக்கிறேன். நான் முற்பிறவியில் அவருக்குக் கூடப் பிறந்த சகோதரனாகத்தான் இருக்க வேண்டும்!' என்றெல்லாம் 'ஐஸ்' வைத்தார்.

சிறிது நேரம் என்னோடு உட்கார்ந்திருந்தார். போகும்பொழுது நான் சரியென்று சொன்னால் என் வீட்டிலேயே இந்த மகிழ்ச்சி நிகழ்ச்சியை யொட்டி அதிகாரிக்கு விருந்து நடத்தலாம். ஏனென்றால், அதிகாரி எனது பழைய பள்ளித் தோழர்! வந்திருந்த சேவகவிடம் என் அனுமதியை முன்னிட்டு அவரே அதிகாரிக்குச் சொல்லி அனுப்பி விட்டாராம்! நான் சரி என்று சொன்னால் தமக்கும் என் வீட்டில் உணவு அருந்த ஆட்சேபணை இல்லை என்று குக்குபாபு சொல்லிச் சென்றார்.

நான் அவர் உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மதியம் ஆகிச் சூரியன் மேற்கே சாயவும் தொடங்கி விட்டான். என் மனைவி விருந்து செய்து வைத்து விட்டுத் தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். ஆனால் அதிகாரி வருவதற்கான அறிகுறியையே காணோம்.

அப்புறம் விசாரித்ததில் தெரிய வந்தது: அதிகாரியின் கழுதை போன்று நேர்மையான குதிரை வாழ்க்கையில் முதன் முதலாகத் தும்பை அறுத்துக் கொண்டு காட்டை நோக்கி ஓடிவிட்டதாம். டிபுடி கலெக்டர், கணக்குப்பிள்ளை, பட்டாமணியம், தாசில்தார் எல்லோரும் அதைத் தேடிக் கொண்டு போயிருக்கிறார்களாம். அதனால் கமிஷனர் மாலையில்தான் விஜயம்செய்யப்போகிறாராம்!

நன்றாகப் பொழுது சாய்ந்த பின்னரே அவர் சொன்னபடி வந்தார். குக்கு பாபு கிராமத்துக் குழந்தைகளுக்குக் கிளிப் பிள்ளை போலச் சொல்லிக் கொடுத்திருந்தார்: 'கமிஷனருக்கு ஜே! கமிஷனருக்கு ஜே! காந்திஜிக்கு ஜே!... தலைவருக்கு ஜே!' என்று கோஷமிட! இந்தக் கோஷங்கள் சூன்யமான பள்ளத்தாக்குகளில் எல்லாம்கூட எதிரொலித்தன. காட்டுப் பிராணிகள் அதைக் கேட்டு ஓடி ஒளியலாயின. வண்ண வண்ணக் காகிதங்களில் கொடிகள் படபடத்தன. கமிஷனரின் கழுத்தை மாலைகளுக்கு மேல் மாலைகள் அலங்கரித்தன. இல்லை; அழுத்தின.

இந்த மாபெரும் வரவேற்பைக் கண்டு கமிஷனர் அயர்ந்து போனார். வியப்பு மீதூறும் விழிகளால் நாற்புறமும் பார்வையை ஓட்டினார். குழந்தைகள் ஓடத்தில் ஏறி அலை அடிக்கும் நீரை ஆனந்தத்தோடு பார்ப்பது போலிருந்தது அவரது பார்வை.

சிவப்பு நாடாவைக் கத்திரித்துவிட்டு, அவர் கேட்டார்: ''என் மிஸ்டர் மிச்ரா! நீங்கள் 'பாடனி' படித்திருக்கிறீர்களே! சற்றுக் கூறுங்கள், இந்தச் செடிகள் எப்பொழுது பலன் தரும்?'' கேட்ட கையோடு வழுவழுவென்றிருந்த இலைகளைத் தடவிக்கொடுத்தார்.

குக்கு பாபுவின் உயிர் ஒரு முறை நடுங்கியது. செடி வேருடன் பறித்துக் கொண்டு கையோடு வந்து விட்டால்?

அதிகாரி என்னை நோக்கவே, நான் வேறு வழியின்றிச் சொல்லும்படி ஆயிற்று: ''செடி வைத்து ஐந்தாறு வருடங்களில் பலன் தரலாம்!'' — அசுவத்தாமா கதைதான்.

''இத்தனை செடிகள் எல்லோரும் வைத்தால் மிஸ்டர் மிச்ரா, நம் நாட்டு மலைகள் ஸ்விட்சர்லாந்து ஆகிவிடாதா? அயல் நாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு தீர்ந்து விடாதா? வேலையில்லாப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட முடியாதா?''

அதிகாரியின் இத்தனை கேள்விகளுக்கும், நான் மௌன ஒப்புதல் அளித்தேன்.

பூங்காவுக்கு இரு வாசல்கள் இருந்தன. வடக்கு வாசலுக்குத் தயானந்தர் வாசல் என்றும், தெற்கு வாசலுக்குச் சிவானந்தர் வாசல் என்றும் பெயர் சூட்டியிருந்தார்கள்.

கமிஷனர் இதில் ஒரு திருத்தம் செய்தார். '' 'நார்த்' துக்கு வடக்கு வாசல் என்றும், 'ஸௌத்' துக்குத் தெற்கு வாசல் என்றுமே பெயர் சூட்டுவோம். இப்படிச் சூட்டுவதனுக்

UCO-1/71

இவர் சிறுகச் சிறுக தன் எதிர்கால செல்வச் சுபிட்சத்திற்கு வழி வகுக்கிருர்



யூகோ பாங்க் ரெக்கரிங் டிபாஸிட் திட்டத்தின் மூலம்

பிரதி மாதம் இவர், யூகோ பாங்கின் ரெக்கரிங் டிபாஸிட் திட்டத்தின் மூலம் சிறிய தொகைதான் சேமித்து வருகிருர். திட்டத்தின் கால அளவின் இறுதியில் கணிசமான தொகை இவருக்கு கிடைக்கிறது.

குறைந்த பட்சம் ரூ. 10/-. அதிக பட்சம் ரூ. 450/-. பிரதிமாத தவணையாகக்கொண்டு ரெக்கரிங் டிபாஸிட் அக்கௌண்ட் தொடங்கலாம். ரெக்கரிங் டிபாஸிட் அக்கௌண்டை உங்கள் பெயரிலோ அல்லது மற்றவருடன் கூட்டாகவோ ஆரம்பிக்கலாம்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

யூகோபாங்க் வளம்பெற வழி வகுத்தளிக்கின்றது

அல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஏற்ற இலட்சிய டானிக்.



இளைஞர், முதியோர் யாவருக்கும், எல்லாக் காலத்திலும் ஏற்ற டானிக்காகிய அல்போ-ஸாங்கை அருந்தி, உங்கள் உடல்வலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

ஜே.& ஜே. டிஷேன்

ஹைதராபாத், இந்தியா

அடிக்கடி சிறுநீர் கழிப்பது

அடிக்கடி சிறுநீர் கழிப்பது ஒரு கொடிய வியாதி. அது, பாதிக்கப்பட்டவரை நாளுக்கு நாள் மரணப் பாதையை நோக்கி இட்டுச் செல்லும்.

இவ்வியாதியால் அல்லல்படுவோருக்கு அதிக தாகம், பசி, உடல் பூராவும் வலி ஏற்படும்; உடலால் உழைக்கவோ, அல்லது மூளையை உபயோகப்படுத்தி வேலை செய்யவோ உற்சாகமிராது. நாளுக்கு நாள் உடல் எடை குறையும். உடலில் ஒருவித நமைச்சல் ஏற்படும், சரும வியாதியால் அவதியுறுவர். கல்லீரல் மந்தமாகி, மூத்திரக் காய்கள் பலவீனமடைந்து, சரிவர இயங்காது. இந்த வியாதியை உடனடியாகக் கவனிக்காவிடில், பல் வாயு, பார்வைக் குறைவு, தூக்கமின்மை, அதிகக் களைப்பு, உடலில் கட்டிகள் ஏற்படுவது போன்றவைகளால் கஷ்டப்பட நேரிடும்.

பழையகாலத்திலிருந்து அனுசரிக்கப்பட்ட யூனானி முறைப்படி அபூர்வ மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட "யூரிடோன்" மாத்திரைகள் இந்தக் கொடிய வியாதியை குணப்படுத்தும்.

"யூரிடோன்" மாத்திரைகளை உபயோகப்படுத்தி, ஆயிரக்கணக்கானவர்கள் பயன் அடைந்துள்ளனர். அடிக்கடி சிறுநீர் போவது கட்டுப்படுத்தப்பட்டு, ஒரு சில நாட்களிலேயே வியாதியின் அல்லல்களிலிருந்து நிவாரணம் அடைந்து மன நிம்மதியைப் பெறுகின்றனர்.

"யூரிடோன்" சிக்கனமானது, பத்திரமானது, எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது. உணவு உட்கொள்ளுவதில் விசேஷ கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. சாதாரண உடல்நலமுள்ளவர்களும் நல்ல ஆரோக்கியமாக இருக்க இதை உட்கொள்ளலாம். விவரங்கள் அடங்கிய இலவச பிரசுரத்துக்கு எழுதவும்.

40 மாத்திரைகள் கொண்ட பாட்டில் விலை ரூ. 10. பாக்கிங் தபால் செலவு ரூ. 2 தனி.

ஒரே தடவையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாட்டில்களுக்கு ஆர்டர் அனுப்புபவர்களுக்கு பாக்கிங் மற்றும் தபால் செலவு இலவசம்.

Barrys Remedies Laboratories

(K L)

G. P. O. BOX 874

CALCUTTA-1

நாஷனல் இன்டக்ரேஷனுக்கு — தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு 'லஹு' கிடைக்கும். என்ன மிச்ரா, நான் சொல்வது?'' என்ருர்.

நான் பேசாமல் தலையாட்டிக் கொண்டிருந்தேன். அப்பாவின் மீது அல்லவா ஆணையிட்டிருந்தேன், வாய் திறப்பதில்லை என்று!

சங்கு முழங்கத் தண்ணீர்த் தொட்டிகளின் குழாய்கள் திறக்கப்பட்டன. சலசலவென்று நீர் வந்தது. கமிஷனர் மதி இறங்கிப் பார்த்தது பார்த்தபடியே நின்ருர். ஒரு கிராமத்தில் சேர்ந்தாற்போல ஒன்பது — பத்து நீர்த் தொட்டிகளா? ஆகா, நாடு எவ்வளவு முன்னேறிக் கொண்டிருக்கிறது! இவையெல்லாம் அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் அல்லவா? — அதிகாரி மனத்துக்குள் மகிழ்ந்து வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டிருந்தார். சுற்றி ஆடிக் கொண்டிருந்தார், மதுவருந்தியவர்போல குக்கு பாபு!

காந்தி பஞ்சாயத்து அலுவலகம் விளக்கு ஏற்றித் திறக்கப்பட்டது. பள்ளிப் பிள்ளைகள் ஆசிரியரோடு பள்ளிப் பிரார்த்தனை கீதத்தை முழக்கினர்.

''பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்...''

இதைக் கேட்டுத் தொலைவிலிருந்த ஓர் அறிவிலி ஆட்சேபனை எழுப்பினன்: ''இது இரவு நேரம்...''

கமிஷனர் குறுக்கிட்டார்:''இல்லை, இல்லை! இந்தப் பாடலே இருக்கட்டும்! இது 'மார்னிங் சாங்க்' இல்லை. இது 'நேஷனல் அவேகனிங் சாங்க்' ஆகும். நாடு விழிப்புறுகிறது என்பதற்கு இதுவே அடையாளம்.''


பிறகு, 'வந்தேமாதரம்' பாட்டும் உரத்த குரல் எழுப்பிப் பாடப்பட்டது.

'எருமை ஸ்கீம்' அதிகாரிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. தம் கையால் அவர் ஏழைக் குழந்தைகளுக்குப் பால் வழங்கினர். 'நாஷனல் ஹெல்த்' பற்றி அப்படியே ஒரு சொற்பொழிவும் ஆற்றினர்.

மக்கள் மகிழ்ந்து போயினர். குழந்தைகள் கை ஒலி எழுப்பி அந்த மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சி கூட்டினர். ஆனல் எனக்குத் தலைவலி மண்டையைப் பிளந்தது. என்னல் நிற்க முடியவில்லை. ஆகலால் அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து கதவை அறைந்து சாத்திப் படுத்து விட்டேன்.

அடாது மழை பெய்தும் இரவு மூன்று மணி வரை விடாது சொற்பொழிவுகள் நடைபெற்றன. கிராமத்து ஏழை எளிய மக்கள் மழை நீரில் நனைந்தனர். அவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. இருந்தாலும் பேச்சாளர்களின் முகங்களையே பார்த்துக்கொண்டிருந்தனர். எல்லோரும் சடசடவென்று கைதட்டினல் அவர்கள் 'படபட'வென்று வாய்க்கு வந்ததைப் பொழிந்து தள்ளினர்.

கமிஷனர் குக்கு பாபுவைக் காலத்துக்கேற்ற பிரமுகர் என்று கூறிப் புகழ்ந்தார். அவருடைய ஆதர்ச வாழ்வைப் பின்பற்றுமாறு முக்கியமாகக் குழந்தைகளுக்கு ஆலோசனை கூறினர். 'வருங்காலத் தலைமுறையினர் அவருடைய பெயரைச் சிரத்தையோடு கூறுவர். ஏனென்றல் இறந்தும் இறவாத அமரர்களின் பெயர் வரிசையிலே அவருடைய



- கிஷன்

பெயர் என்றென்றும் வாழும். அடிப்படை மக்கள் ஊழியர்கள் ஒருசிலரில் குக்கு பாபு குறிப்பிடத் தக்கவர்!' என்று பாராட்டு மழையே பொழிந்து தள்ளி விட்டார்.

பிறகு குக்கு பாபு பேசினர். அவர் கமிஷனரை நாட்டின் நல்லாட்சியாளர்களின் வரிசையிலே தலையானவர் என்று பாராட்டினர். அவர் செயல் திறன் பிறர் பார்த்துப் பின்பற்றவேண்டியவற்றுள் ஒன்று என்ருர். அவருடைய கடமையுணர்வு கொண்ட வாழ்விலிருந்து படிப்பினை பெற வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்று கூறினர். அப்புறம் இரு கண்களையும் மூடிக் கொண்டு கிராமத்தின் ஏழைமை நிலையைத் தமது வர்ணனையால் படம் பிடித்துக் காட்டினர். உள்ளத்தைத் தொடும் இரக்க உணர்வைத் தட்டி எழுப்பும் அந்தக் காட்சியைச் செவிமடுத்துக் கமிஷனரின் இமைகள் நனைந்து விட்டன. இந்தச் சமயம் பார்த்துக் குக்கு பாபு இரு கைகளையும் விரித்து அரசின் உதவிக்காக விண்ணப்பம் விடுத்ததோடு மட்டும் இல்லாமல், மேல் துண்டின் தலைப்பையே விரித்து நின்ருர். — இவ்வளவும் காதில் விழ என் மனக் கண்ணும் பார்த்து ரசித்தது.

மறுநாள் எழுந்ததும் என் மனைவி என்னை உலுக்கி எடுத்து விட்டாள். நான் எப்பொழுதுமே அலட்சியக்காரன் என்று குற்றம் சாட்டினள். நான் அவள் சொல்வதைக் கேட்பதில்லை என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

குக்கு பாபுவின் திட்டங்களுக்குக் கமிஷனர் பதினையாயிரம் ரூபாய் உதவுவதாக வாக்குறுதி அளித்தார் என்று கேள்விப்பட்டேன். குக்கு பாபுவின் பிள்ளைகளுக்கு வேலை வாங்கித் தரும் விஷயத்தில் கவனம் செலுத்துவதாகவும் கூறினர். அதோடு போகும்பொழுது கமிஷனர் ரொக்க இனமாக நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் குக்கு பாபுவின் கையில் திணித்துச் சென்ருர் என்றும் கேள்விப்பட்டேன். எங்கு பார்த்தாலும் குக்கு பாபுவின் புகழ்தான் பாடப்பட்டுக் கொண்டிருந்தது.

நான் என் வாழ்வை எப்படி வீணக்கிக் கொண்டு விட்டேன்! ஒன்றுக்கும் உபயோகமில்லாத தாவர இயலை வைத்துக் கொண்டு எங்கெங்கெல்லாமோ புல் செதுக்கினேனே ஒழியப் பெரிதாக என்னத்தைச் சாதித்து விட்டேன்.....?

ரா. வீ.

பிளேடு தயாரிப்பு முறையில் ஓர் புதிய முன்னேற்றம்

உலகத்திலே சிறந்த பிளேடுகளை தயாரிப்பதில் கையாளப்படும் மிக நவீனமும் ரகசிய தொழில் நுணுக்கமுமான பிரத்யேக முறையான "மல்டி பேஸட் கிரைண்டிங் ப்ராஸஸ்" மூலமாக, முதன்முறையாக பனாமா ஒரு புதிய க்ஷவர பிளேடைத் தயாரித்து அளிக்கிறார்கள். அது மட்டும் அல்ல, உலகத்திலேயே வெகு சுகமாக க்ஷவரம் செய்யக் கூடியதும், நீண்ட நாள் நன்கு உழைக்கக்கூடிய பிளேடுகளின் இரு ஓரங்களில் மட்டுமே ரசாயன முறையில் பூசப்படும் உயர்ரக ரசாயனப் பொருளான "ஹை டென்ஸிடி பாலி டெட்ரா ப்ளுரோ எதிலீன்" என்னும் கலவைப் பொருள் இப்புதிய பிளேடின் இரு ஓரங்களிலும் பனாமா தொழில் நுணுக்க முறை மூலம் பூசப்பட்டு இருக்கிறது.



★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.



★தமிழ்நாடு அரசு செய்தித் துறை இயக்குனரால் வெளியிடப்படும் திங்கள் இருமுறை ஏடான ''தமிழரசு'' 16–1–71 மலரைப் படித்துப் பார்த்தேன். 'இது அரசாங்கம் நடத்தும் ஏடா ? அல்லது ஆளும் கட்சியினர் நடத்தும் பிரசார ஏடா?' என வியப்புறத் தோன்றுகிறது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களின் ஏடுகள்கூட இந்த அளவுக்குக் கட்சிப் பிரசாரம் செய்கின்றனவா என்பது சந்தேகமே. பக்கத்துக்குப் பக்கம் கட்சிப் பிரசாரம்தான். ''இன்று என்ன செய்தி?'' என்ற பகுதியில் ஆளும் கட்சியை ஆதரிக்கும் ஒரு தினசரியைப் பலர் படிப்பதுபோல் படம் பிடித்துப் போடப்பட்டிருக்கிறது. அந்தத் தினசரிக்கு இது ஒரு நல்ல விளம்பரம். அடுத்ததாக 'கேளுங்கள், கொடுக்கப்படும்' என்ற பகுதியில் வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்பட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருவர் கேட்டிருந்த, ''விவசாயி — அரசு ஊழியர் இருவருக்கும் இதுவரை இந்த அரசு செய்துள்ள சாதனைகளின் முழுப் பட்டியல் கூறுகிறீர்களா ?'' என்ற வினாவுக்கு, விவசாயிக்குச் செய்திருக்கும் நன்மைகளைக் கூறிவிட்டு, அரசு ஊழியர்களுக்கு இன்றைய அரசு வரலாறு காணாத அளவுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்துள்ளது என்று பதில் கூறப்பட்டுள்ளது. இந்த ஊதிய உயர்வு கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதான். இவ்விதமாக இந்த ஏடு கட்சிப் பிரசாரத்துக்குப் பயன்படுகிறது என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். இவையெல்லாம் செய்தித் துறை இயக்குனருக்குத் தெரியாததல்ல. அரசு மாறலாம்; அமைச்சரவை மாறலாம். ஆனால் அதிகாரிகள் என்றும் நிரந்தரமானவர்கள். அதிகாரிகள் எந்த அரசியல் கட்சியின் வற்புறுத்தலுக்கும் இணங்காமல் செயல்பட வேண்டும். ஆளும் கட்சிக்கு மக்களின் வரிப் பணத்தில் இது ஒரு நல்ல விளம்பர ஏடு. இம்மாதிரியெல்லாம் செய்து கொள்ளத் தெரியாமல் ஆண்டதே முன்பும் ஓர் அரசு !

சென்னை — 34
3–2–71 களம்பூர் எஸ். கோபிநாத்

ஐம்பது கோடி மக்களுடன் கூடிய பாரதம் என்ற மிகப் பெரிய விமானத்தை ஜனபதி என்ற விமானியை அடக்கி இந்திரா தம் இஷ்டப்படி ஹைஜாக் செய்து ஓட்டிப் போவதைத் தடுத்து நிறுத்தும் நாள் எந்நாளோ, அந்நாளே இந்தியாவின் பொன்னாள்; சுபிட்ச நாள்.

மதுரை—1
7–2–71 ஆ.வெ. கிருஷ்ணமூர்த்தி

திரு ஹனுமந்தையா அவர்கள் ஸ்ரீமதி இந்திரா காந்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ரூ. 5000 கோடி செலவில் ஒரு திட்டம் வைத்துள்ளதாகக் கூறியுள்ளார். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ரூ. 20000 கோடிக்கும் மேலாகச் செலவு செய்தும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியாமல் மேலும் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆகவே இச்சமயத்தில் அடிப்படைக் கொள்கையில் மாறுதல் தேவையே ஒழியப் பழைய உளுத்துப்போன சோஷலிஸக் கொள்கையையே பிடித்துக் கொண்டிருக்கும் இந்திரா அரசா வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போகிறது?

தேவகோட்டை,
10–2–71 சு. கண்ணன்

திரு முன்ஷியின் மறைவு குறித்து இந்திரா அம்மையார் கூறியுள்ள ஒரு கருத்து நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. அதாவது முன்ஷியின் பல உன்னதமான பணிகளில் ஒன்றான அரசியல் சட்ட சாஸனத்தை உருவாக்க அவர் பாடுபட்டதைப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். முன்ஷி போன்ற மூதறிஞர்களால் புனிதமாக உருவாக்கப்பட்ட இந்த அரசியல் சாஸனத்தைத்தான் செல்லாக் காசாக்க இந்திரா அம்மையார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். மறைந்த தலைவர் முன்ஷியினிடம் பிரதமருக்கு உண்மையிலேயே மதிப்பு இருக்குமானால் அவர் வகுத்துத் தந்த அரசியல் சட்ட சாஸனத்துக்கு உரிய மதிப்பளித்து நடந்து கொண்டிருப்பாரே !

முன்ஷியின் பாரதிய வித்யா பவனையும், இதர கலாசாரப் பணிகளையும் தொடர்ந்து போற்றுவது போல் அரசியல் சட்ட சாஸனத்தையும் பக்தியுடன் பேணி வருவதே மறைந்த தலைவருக்கு நாம் செலுத்தக் கூடிய மிகப் பெரிய புனிதமான அஞ்சலியாகும்.

சென்னை—2
9–2–71 அமர்தா வாசுதேவன்

சமீப காலமாகத் தேர்தல் கூட்டங்களில் ஆளும் கட்சியினர் பேசுவது என்னவென்றால் ''ராஜமானிய ஒழிப்புக்கு எதிராகக் காமராஜர் ஓட்டு அளித்துவிட்டார். ஆகவே அவர் பிற்போக்குவாதி!'' இதையெல்லாம் கேட்கும்பொழுது நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. ராஜமான்ய ஒழிப்பினால் வருடத்துக்கு நாலரைக் கோடி ரூபாய் மிச்சமாகும் என்று கணக்குப் போடுகிறவர்கள் அரசாங்கத்தின் வசம் இருக்கும் சில இரும்புத் தொழிற்சாலைகளில் வருடாவருடம் ஐம்பது கோடிக்கு மேல் நஷ்டமாகிறதே, அதைக் கவனிப்பார்களா? பாங்குகளைத் தேசிய மயமாக்கினார்களே, அதனால் அரசாங்கத்துக்கு எவ்வளவு நஷ்டம்? இதைக் கணக்குப் போட்டுப் பார்ப்பதுதானே? தேசிய மயமான பிறகு பாங்குகளின் கட்டடங்கள்தான் அரசாங்கத்துக்குச் சொந்தமாயின. மற்றப்படி நடைமுறையில் நடுத்தர மக்களுக்கு என்ன பலன் கிடைத்தது?

வருடா வருடம் பணம் போடுகிறவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. வட்டியும் ஒரு சதவிகிதம் ஏறிற்று. இதுதான் நாம் கண்ட பலன். ஆனால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு ''ராஜாக்களுக்குக் கூஜா தூக்குகிறார்'' என்று ஏசுவதில் என்ன பிரயோசனம்? ''தேசிய மயம்'' என்ற நாடகத்துக்குப் பிரதமர் விரயம் செய்த பணம் 88 கோடி ரூபாய். அதாவது நம்முடைய வரிப் பணம். இப்படிக் கண் எதிரே தெரியும் பல நஷ்டங்களை மூடி வைத்துவிட்டு ராஜ மான்யத்தை ஒழிக்கப் போகிறேன் என்று நாடகமாடுவது எவ்வளவு போலித்தனம்!

சென்னை—1
10—2—71 ஆர். ராமகிருஷ்ணன்


சமீபத்தில் ஆயிரம்விளக்குப் பகுதியில் திரு கருணாநிதி ''சிண்டிகேட் காங்கிரசார் ஆட்சிக்கு வந்தால் அடுத்த நாளே அண்ணன் சமாதி தூள் தூளாக்கப்படும்'' என்று பேசியிருக்கிறார். இதை அவர் எந்த அர்த்தத்தில் பேசினார்? சிண்டிகேட்காரர்கள் அவ்வளவு பயங்கரமானவர்களா? இந்த மாதிரி அக்கிரமமான செயலை எந்தக் கட்சிக்காரர்களும் செய்ய மாட்டார்கள். அதற்கு மக்களும் அனுமதிக்க மாட்டார்கள். திரு கருணாநிதி அவர்கள் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். திரு அண்ணாதுரை இறந்தபோது அவருடைய சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தி. மு. க. காரர்கள் மட்டுமல்ல.

முதலமைச்சர் இம்மாதிரியெல்லாம் பேசுவது அழகல்ல. நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி, கம்யூனிஸ அபாயம் போன்ற பிரச்னைகளை மூடி மழுப்பிவிட்டு எதை எதையோ சொல்லி மக்களை வயப்படுத்த முயல வேண்டாம்.

செல்லப்பம்பட்டி,
9—2—71 அ. ஆறுமுகம்

இந்திரா காங்கிரசுக்குப் 'பசுவும் கன்றும்' சின்னம் அளிக்கப்பட்டுள்ளது. கன்றுக்குட்டியின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதனை ஒருவர் பிடித்துக் கொண்டிருப்பதாக அமைந்திருந்தால் மேலும் சிறப்பாக இருக்கும்.

பால்காரர் பசுவிடம் உள்ள பாலைச் சுரக்க வைக்கத்தான் கன்றுக் குட்டியைப் பயன்



படுத்துகிறார்; ஆனால் பசுவினின்று சுரக்கும் பால் முழுவதையும் பால்காரர் தாமே கறந்து வைத்துக் கொள்கிறார். அதே போல் இந்திய ஜனநாயகம் என்ற பசுவை இந்திரா காந்தி என்ற கன்றுக்குட்டி மூலம் தமதாக்கிக் கொள்ள கம்யூனிஸ்ட் பால்காரர் காத்துக் கொண்டிருக்கிறார்.

பெங்களூர் — 25
7—2—71 ச. வே. சுந்தரம்

இன்றைய இந்தியாவின் சீர்கேடான நிலைமைக்குக் காரணம் ஸ்ரீமதி இந்திராகாந்தியே தான். அவரை ஆதரிப்பவர்கள் யாரா யிருந்தாலும் எந்தக் கட்சியா யிருந்தாலும் சரி, அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். நான் என்ற கர்வத்தோடு வீண் ஜம்பம் பேசிக்கொண்டு கம்யூனிஸ்ட் அட்டகாசங்களுக்கு இடம் தந்து நாட்டையே அழிவு நிலைக்கு ஆளாக்கிவிட்டார். உலகின் பெருமைக்கே உரித்தாய் இருந்த ஒரு பெரும் கட்சியைப் பிளவுபடுத்தி ஊதாரித்தனமாக நடந்து கொண்ட பெருமை ஸ்ரீமதி இந்திரா அம்மையாருக்குத்தான் உண்டு. அப்படிப் பட்டவரைத்தான் தி. மு. க.வும் ஆதரித்து நிற்கிறது. நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை, எங்களுக்குப் பதவிதான் முக்கியம் என்ற நோக்கமே தவிர வேறு எதுவும் இல்லை. இவர்களிடத்தில் ஆட்சியை ஒப்படைத்தால் நாடு என்ன நிலையை அடையும் என்பதை எடுத்துக் கூற வேண்டியதில்லை.


சொக்கன் குடியிருப்பு,
8—2—71 அ.ம.அந்தோனிமுத்து

நாட்டின் பத்திரிகை சுதந்திரத்தில் அரசு சமீப காலமாகத் தலையிடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. சென்னை மெரீனா கடற்கரையில் நடந்த கூட்டத்தில் இந்திரா காங்கிரஸின் தமிழ் நாட்டுத் தலைவர் திரு ஆர். வி. சுவாமிநாதன், ''ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி'' ஆகிய தினசரிகள் தம் கட்சி பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்றும், தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அப்பத்திரிகைகளை நொறுக்குவோம் என்றும் பேசியது அனைவரும் அறிந்ததே.

"D. M. K. takes the plunge" என்று தலையங்கத்தில் தன் கருத்துக்களை வெளியிட்டதற்காக 'இந்து'ப் பத்திரிகைக்கு அரசாங்க விளம்பரம் கொடுப்பதைத் தமிழக அரசு நிறுத்திவிட்டது. மேலும், பிப்ரவரி 15ந் தேதி வரவேண்டிய 'துக்ளக்' பத்திரிகையை அரசு தடை செய்துவிட்டது. காரணம், சேலத்தில் பெரியாரால் நடத்தப்பட்ட 'புண்ணிய' காரியங்களை அது படத்துடன் வெளியிட்டதுதான். ஹிந்துக்களின் மனம் புண்படும்படி சம்பவம் நடக்கலாமாம். அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது! ஆனால் எந்த அளவுக்கு அநீதி நடக்கிறது என்று மக்களுக்கு உணர்த்த ஒரு பத்திரிகை அச்சம்பவத்தைப் புகைப்படம் எடுத்து வெளியிட்டால் அதற்குத் தடை! ஹிந்துக்கள் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்று அதற்குக் காரணமும் கூறப்படுகிறது! விந்தையான வாதம்!

நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போகிறது என்பது தெளிவு.

அம்பத்தூர்,
16—2—71 டி.வி. ராதாகிருஷ்ணன்.



இலவசம்! உங்கள் குழந்தைக்காக பெயர்களைக் கொண்ட புத்தகம்.

அழகிய பெயர்களைக் கொண்ட ஒரு சிறு புத்தகத்தை இலவசமாகப் பெறுங்கள். உங்கள் ஆண்/பெண் குழந்தைகளுக்காக பலப்பல அழகான பெயர்கள் தரப்பட்டுள்ளன. கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து 25 பைசா தபால் தலையுடன் அனுப்ப வேண்டிய முகவரி: டிபார்ட்மெண்ட் கே-1 என்.ஓ.ப்பி. தபால் பெட்டி 16558, பம்பாய் 18 டபிள்யூ.பி.

K-1

பெயர்: திரு/திருமதி ____________________

(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி: ____________________

(கொட்டை எழுத்துக்களில்)

____

____

சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திட உணவு.

பாரெக்ஸ்® - க்ளாக்ஸோ தயாரிப்பு

CMGF-11-202R TAM

மலையாளம்

மாலையில் கல்லூரி முடிந்து மாணவர்களும் மாணவிகளும் கலைந்து போன பின், கல்லூரியின் ஆரவாரம் முற்றிலும் ஓய்ந்த போது சிட்டுக் குருவிகள் தம் கூடுகளை அடைந்தன. அப்போது சந்தடியற்ற தாம் வசிக்கு மிடத்துக்கு அருகில் இரண்டு மனிதர்களைக் காணவே அவை வியந்து போயின.

ஒரு டஜனுக்கும் அதிகமான சிட்டுக் குருவிகள்! அவை கீச்சிட்டன. 'காச்க மூச்' செனக் கத்தித் தம் எதிர்ப்பைத் தெரிவித்தன. தம் கூடுகளுக்கு நாலாபுறமும் வட்டமிட்டுப் பறந்தன.

கல்லூரியின் முக்கியமான கட்டிடங்களுக்கு அப்பால் கல்லூரியின் எல்லைக்கு உள்ளேயே உள்ள ஒரு பழைய கட்டிடம் அது. மொத்தம் இரண்டு சிறு அறைகளும், இரண்டடி அகல முள்ள வராந்தாவும் உடைய ஒரு சிறு வீடு. தோட்டக்காரன் தன் வேலைக் கருவிகள், எரு, மணல், காரை, செங்கல் துண்டுகள் போன்றவை போட்டு வைக்க அந்த இடத்தைப் பயன்படுத்தி வந்தான். பாழடைந்திருந்தபடியால் அந்த இடத்தை வேறு யாரும் எட்டிப் பார்ப்பதுகூட இல்லை. இப்படி நிம்மதியாக வாழக் குருவிகள் தேர்ந்தெடுத்த அந்த இடத்தை இரண்டு மனிதர்கள் வசப்படுத்தி யிருக்கிறார்கள்!

அவ்வளவு அநாகரிகமான உடையில் அந்தக் கல்லூரிச் சுவருக்குள் இதற்கு முன் எவரையும் அந்தக் குருவிகள் கண்டதில்லை. ஒரு கிழவனும் கிழவியும்! கிழவன் ஒரு கிழிந்த துண்டை மட்டும் உடுத்தியிருந்தான். கிழவி கந்தல் கந்தலான ஒரு வேட்டியும் ஒரு ரவிக்கையும் அணிந்திருந்தாள். இருவரிடத்திலும் மூட்டை முடிச்சுக்கள் வேறு. தோட்டக்காரன் அங்கே மூலையில் குவித்து வைத்திருந்த சாணி எருவைப் போன்று அவர்களுடைய உடல் சுருங்கிச் சுளித்திருந்தன. அவர்கள் கண்கள் குருவிக் கூட்டின் முகப்பைப் போன்று குழி விழுந்திருந்தன. அவர்களுடைய கழுத்தோ அந்தக் கூடுகள் போன்று சொர சொரவென்று இருந்தன.

ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ—மாணவிகள் அந்தக் கல்லூரியில் கல்வி பயின்று வந்தார்கள். கற்பதைக் கற்றல், வேடிக்கை வேடிக்கையாகப் பேசுதல், சிரித்துக் களித்து மகிழ்தல் என்பவை தவிர எந்த ஒரு பிரச்னையும் அவர்கள் வாழ்க்கையில் இருந்த தில்லை. காலை ஒன்பது மணிக்கு அவர்கள் வரத் தொடங்குவதிலிருந்து மாலை வீடு திரும்பும் வரையில் அந்தக் கல்லூரியின் சூழ்நிலை கலகலப்பாக இருக்கும்.

கல்லூரி முடிந்தவுடன் சுற்றுச் சுவருக்குள் விளையாடு பவர்களால் அந்தக் குருவிகளுக்குச் சிறிதளவு தொல்லை ஏற்பட்டாலும் ஆறு மணிக்குப் பிறகு அங்கே முற்றிலும் அமைதி நிலவி யிருக்கும்.



அதற்குப் பிறகும் தம் நிம்மதியைக் குலைக்க வந்துள்ள அவ்விரு மனிதக் கோலங்களைப் பார்த்துத் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அவை கீச்சிட்டுப் பறந்து வட்டமிட்டன.

வண்ணப் பட்டாடைகள், நவ நாகரிக உடைகள், குதூகலமிகும் பற்பல குரல்கள், மகிழ்ச்சி பொங்கும் ஆரவாரங்கள் ஆகியவைதான் அந்தக் குருவிகளுக்கு அங்கே பழக்கம். ஆனால் அப்போது அங்கு வந்துள்ள இருவருமோ, இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள்.

மாணவர்கள் ஏன் அங்கே வருகிறார்கள் என்று குருவிகளுக்குத் தெரியாது. கருங்கிச் சுளித்த மேனியுடைய கிழவனும் கிழவியும் கூட ஏன் அங்கு வந்துள்ளார்கள் என்றும் அவற்றுக்குத் தெரியாது.

கிழவன் மூன்று கற்களை எடுத்துக் கொண்டு வந்து ஓர் அடுப்பைச் செய்தான். கிழவி ஒரு சட்டியில் நீர் கொண்டு வந்தாள். பிறகு தன் கந்தல் மூட்டையிலிருந்து சிறிது அரிசியை எடுத்துப் போட்டுத் தீமூட்டி, அடுப்பின்மீது வைத்தாள். அதன் பிறகு இருவரும் அடுப்புக்கு அருகில் அமர்ந்தனர்.

அடுப்பிலிருந்து புகையும் ஜ்வாலையும் உயர எழும்பலாயின. புகை வளையங்கள் மேலே மேலே உயர்ந்த வண்ணம் இருந்தன.

வானம் கறுத்தது. ஆதவன் மறைய வெளிச்சம் விடைபெறலாயிற்று. சற்று முன் வரை ஒளி விட்டுக் கொண்டிருந்த அழகுமிகு வண்ண முகில்கள் கருநிறம் பூண்டு அச்சத்தை ஊட்டலாயின.

கிழவன் தன் மூட்டையிலிருந்து சிறிது அரிசியை வாரி எடுத்து இறைத்தான். ஆனால் குருவிகள் அதை ஏறெடுத்துப் பாராதவை போல நடந்து கொண்டன. அந்த இருவரும் அங்கே வருகை தந்தது அவைகளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ஆதலால் அவை ஒரு மணி அரிசியைக்கூடத் தீண்டவில்லை.

மேலும் சிறிது நேரம் சென்றது. வானம் முற்றிலும் கருநிறம் பூண்டது. எப்பக்கம் நோக்கினும் காரிருள். அந்த



சீட்டுக்குருவிகளும் பிச்சைக்காரர்களும்

ஏ. எஸ். ராபர்ட்

அடுப்பிலிருந்து கிளம்பிய சிவப்பு வெளிச்சம் மட்டும் அவர்கள் கருங்கிச் சுளித்த முகங்களிலும் உடலிலும் பட்டுக் கொண்டிருந்தது.


கஞ்சி வேக்காடானதும் இருவரும் அதை ஆற வைத்துப் பருகினார்கள். பிறகு அந்த வீட்டின் வராந்தாவில் சென்று படுத்து உறங்கலாயினர். இதற்குள் அந்தக் குருவிகளும் தூக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தன.

மறுநாள் பொழுது விடிந்ததும் இருவரும் அந்த இடத்தை விட்டுச் சென்றார்கள். ஆனால் மாலையில் குருவிகள் கூட்டை அடைந்தபோது அவர்கள் மறுபடியும் வந்திருந்தார்கள்.

ஒரு டஜனுக்கும் அதிகமான குருவிகள். அவை திரும்பவும் தம் எதிர்ப்பைத் தெரிவித்தன. 'காச்மூச்' சென்று கத்தி ரகளை செய்து வட்டமிட்டுப் பறந்தன.

★

கொச்சியில் மத்தியதர வகுப்பில் பிறந்த ஸ்ரீ ஏ. எஸ். ராபர்ட்டுக்கு 46 வயதாகிறது. இவர் எழுதிய சில நாவல்களும் சிறுகதைத் தொகுதிகளும் மலையாள இலக்கியத்துக்கு மெருகு கூட்டுகின்றன. சொல் நயம் மிகுந்த எளிய நடையில் கருத்தாழத்துடன் ஒரு சோக காவியத்தைச் சிறுகதை வடிவில் படைத்துள்ளார் ஸ்ரீ ராபர்ட். சில காலம் அரசியல் வாழ்க்கை நடத்தித் தற்சமயம் சொந்தத் தொழில் நடத்துகிறார். எழுதியது குறைவு என்றாலும் இவர் எழுத்துக்கள் நிறைவு தருபவை.



அன்றும் அந்தக் கிழவனும் கிழவியும் தம் உணவைச் சமைத்தார்கள். வளையம் வளையமாக வானத்துக்கு எழும்பிய புகையி னூடே நுழைந்து அன்றும் அந்தக் குருவிகள் இங்குமங்கும் பறந்தன. மறுநாளும் இந்த நிகழ்ச்சி தொடரப்பட்டது.

இப்படியாக நாட்கள் பல சென்றன.

இப்பொழுதெல்லாம் குருவிகள் தம் எதிர்ப் பைக் காட்டுவதில்லை. அந்த இரண்டு ஏழை களுடனும் அவை பழகிப் போயிருந்தன. அவ்விருவரும் தங்களுக்கு எவ்விதமான தீங் கும் தருபவர்கள் அல்ல என்று அவைகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவை அவர் களின் மூட்டை முடிச்சுக்களில் தத்தித் தத்தி விளையாடும். அவர்கள் தினந்தோறும் உணவு சமைக்கும்போது அடுப்புக்கு அருகில் சென்று எட்டிப் பார்க்கும். பிறகு இனிமையாகக் கலகலவென்று ஓசை செய்து புகையினூடே பறக்கவும் செய்யும்.

கிழவனுக்கும் கிழவிக்கும் அவைகளை மிக வும் பிடித்து விட்டது. தம் மூட்டையிலிருந்து அரிசி மணிகளை எடுத்து அவைகளுக்குத் தூவு வார்கள்.

பாழடைந்த அந்தச் சிறு வீட்டின் முகப் பில் உள்ள தங்கள் கூடுகளுக்குப் போவதற்கு முன்தினம் அக்குருவிகள் மூட்டைக்கும் அடுப் புக்கும் அருகில் தத்தித் தத்தி விளையாடும். அரிசி தூவினதும் கலகலவென ஓசை எழுப்பி அவை அரிசி மணிகளைக் கொத்தித் தின் னும். தத்தித் தத்தி நடந்து, இனிமையாக என்னவென்னவோ கொஞ்சிக் கொஞ்சி அந் தக் குருவிகள் அரிசி மணிகளைக் கொத்தித் தின்பதைக் காண்பது அவர்களுக்கு ஒரு சிறந்த பொழுதுபோக்காக இருந்தது.

ஆனால் எதற்காக அந்தக் கிழவனும் கிழவி யும் பாழடைந்த அந்த வீட்டு வராந்தாவில் உண்டு உறங்குகிறார்கள் என்று அந்தக் குருவி களுக்குத் தெரியாது. கந்தல் கந்தலான துணிகளைத் தைத்து ஏன் அவர்கள் உடுத்து கிறார்கள் என்றும் அவைகளுக்குத் தெரி யாது. அவர்கள் உடல் ஏன் இவ்வளவு காய்ந்து சுருங்கியுள்ளது என்றும் அவைகளுக் குத் தெரியாது. அவர்கள் தினமும் பிச்சை எடுத்துச் சம்பாதிப்பதன் ஒரு பகுதியைத்தான் தங்களுக்காகத் தூவுகிறார்கள் என்பதும் அந்தக் குருவிகள் அறிந்திருக்கவில்லை.

ஒரு நாள் தோட்டக்காரன் அங்கே எதற் காகவோ வந்தான். குருவிகள் அப்பொழுது அங்கே வந்திருந்தன. அந்தப் பிச்சைக்காரர் களும் இராப் பொழுதைக் கழிக்க அங்கே வந் திருந்தார்கள்.

''சரிதான் போ, இங்கேதான் சமையலும் படுக்கையுமா?'' என்று தோட்டக்காரன் அதிகார தோரணையில் வினவினான்.

குருவிகள் அந்தப் பிச்சைக்காரர்களுக்கு அருகில் தத்தித் தத்தி விளையாடிக்கொண் டிருந்தன. தோட்டக்காரனைக் கண்டதும், அவை நாலா பக்கமும் பறந்து போயின. தோட்டக்காரன் அங்கிருந்து போகுமட்டும் அவை வானத்தில் பறந்தவாறே ரகளை செய்து கொண்டிருந்தன.

''சாமீ! படுத்துக்கிறதுக்கு வேறே இடம் இல்லீங்க. இராப் பொழுது மட்டும்தான் இங்கே தங்குவோமுங்க. சாமீ, நீங்க பெரிய மனசு பண்ணினால் மழையும் பனியுமா வருந் தாமல் இந்த ஏழைங்க வாழ்வோமுங்க'' எனப் பிச்சைக்காரன் குரல் நடுங்க மிகவும் பணி வுடன் சொன்னான்.

தன்னைச் 'சாமீ' என்று அழைத்ததனால் உண்டான அகந்தையினாலோ அல்லது அவர் களின் துன்ப நிலையைப் பார்த்ததனால் உண் டான இரக்கத்திலோ என்னமோ தோட்டக் காரன் தடையாக ஏதும் கூறவில்லை. 'உம்உம்' எனக் கூறியவாறே அவன் அங்கிருந்து சென் றான். அந்தப் பிச்சைக்காரர்களுக்கு அது நிலையான அடைக்கலமாயிற்று.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் பல கழிந்தன.

ஒரு நாள் குருவிகள் தங்கள் கூடுகளை அடைந்தபோது பிச்சைக்காரர்களில் ஒருவன் மட்டுமே அங்கே இருக்கக் கண்டன.

கிழவியைக் காணோம்!

கிழவன் களைப்புற்று, தள்ளாடிப் போய், மூட்டையின் மீது சாய்ந்தவாறு உட்கார்ந் திருந்தான். அவன் அழுது கொண்டிருந்தான் என்பது குருவிகளுக்குத் தெரிந்திராது. அவர் களில் இன்னொருவர் எங்கு போயிருக்கலாம் என அவை வியந்திராது. ஒருவேளை அங்கே ஒரு மாற்றம் உண்டானதுகூட அவைகளுக்குத் தெரிந்திராது!

குருவிகள் சிறிது நேரம் வட்டமிட்டுப் பறந்த பிறகு கிழவனின் மூட்டைக்குப் பக்கத்தில் வந்து விளையாடலாயின.

கிழவன் அசையவில்லை.

இன்று அரிசி இறைக்க ஏன் இவ்வளவு தாமதம் என அவை வியந்திருக்கலாம். இருப்பினும் அவற்றுக்கு வெகு நேரம் காத் திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கிழவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறே மூட்டையை அவிழ்த்து ஒரு பிடி அரிசியை எடுத்து இறைத்தான். குருவிகள் அதைக் கொத்தித் தின்னலாயின.

அதைப் பார்த்தவாறே கிழவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். அப்பொழுது அவன் கண்கள் மறுபடியும் நிரம்பின.

அங்கே வந்த நாளிலிருந்து நேற்று வரை குருவிகளுக்கு அரிசியைத் தூவும்போது தன் னுடனிருந்த கிழவியைப் பற்றி அவன் தானாத் துயரத்துடன் நினைப்பதா யிருந் திருக்கலாம். இனியதும் கசப்பதுமான எத் தனை எத்தனையோ அனுபவங்களும் அவளது நினைவுகளும் கண் முன் தோன்றி யிருக்கலாம்.

ஆனால் குருவிகள் இதை யெல்லாம் அறிய வில்லை; இதைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் இல்லை. அவை தத்தித் தத்தி நடந்து, அரிசி மணிகளைக் கொத்தித் தின்று கொண் டிருந்தன. கிழவன் தன் கண்களைத் துடைத் தான். அவைகளில் ஒன்றினைப் பிடித்துத் தன் கன்னத்துடன் அணைத்தவாறே விம்மி விம்மி அழுதுகொண்டு சொல்லலானான்:

''சிட்டுக்குருவி! போயிட்டாளே என் துணைவி! என் துணைவி போயே விட்டாளே! ஐம்பது வருஷங்கள் நாங்கள் ஒன்னா இருந் தோமே! குடியிருந்த இடத்தைப் பறிச்சுத் துரத்தினபோதுகூட ஒன்னாத்தானே கிளம் பினோம். அவள் ஒரு நாள் கூட என்னை விட்டுப் பிரியவில்லையே... ...நோயாளியாய் நான்

நடக்க முடியாமல் படுத்த படுக்கையாயிருந்த போதுகூட என்னை விட்டுப் போகவில்லையடா! விடு விடாகப் பிச்சை எடுத்து என்னைக் காப்பாற்றினுளே! இனி எனக்கு யாருடா துணை? என் சின்னக் குருவியே! இந்த உலகமும் வானமும் எல்லாம் உனக்குச் சொந்தம். உனக்கு வேண்டியதெல்லாம் இருக்கு. ஆனால் எனக்கு? ஒண்ணுமில்லே. இருக்க இடமில்லே. கட்டிக்கத் துணியில்லே. தின்னச் சோறில்லே. வியாதி வந்தால் சாகத்தான் வேணும். என்னைக் கவனிக்க யாருமே இல்லேயேடா! நான் செத்துப் போனுல் உலகத்துக்கு என்ன நஷ்டம்? ஒரு பிச்சைக்காரன் குறைஞ்சுபோவான், அவ்வளவுதான்!''

இந்த முறையிடு இப்படியே தொடர்ந்தது. குருவிகளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தின்னும்போது குத்தகம் விளைந்தது அதற்குச் சற்றும் பிடித்திருக்கவில்லை. அது மீண்டும் மீண்டும் கீச்சிட்டுக் கிழவன் கையிலிருந்து விடுதலை பெற முயன்றது. கிழவன் அதைப் போக விட்டான். அப்பொழுது அது தன் நண்பர்களுடன் சேர்ந்து அரிசி மணிகளைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தது.

அரிசி மணிகளைக் கொத்தித் தின்றுனதும் குருவிகள் வானத்தில் பாடிப் பறந்தன. பாடிப் பறக்கின்ற குருவிகளையும் அதற்கப்பால் எல்லையின்மையில் கருநிறம் கொள்ளும் வானத்தையும் நிறைந்த கண்களால் பார்த்தவாறே கிழவன் உட்கார்ந்திருந்தான்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஒன்றன் பின் ஒன்றுகக் கடந்து சென்றன.

மழைக்காலம் வந்ததிலிருந்து கிழவன் அதிகமாக வெளியே எங்கும் போவதில்லை. குருவிகளும் அப்படித்தான். மழை இல்லாத நேரம் பார்த்துத்தான் அவை வெளியே பறந்து சென்றன.

கிழவன் படுத்த படுக்கையாகி விட்டான். சிற்சில சமயம் குளிரால் நடுங்குவான். போர்த்திக் கொள்ள ஒரு கந்தல் வேட்டி மட்டும்தான் அவனிடத்தில் இருந்தது. அதுவும் உடல் முழுதும் மூட இயலாத ஒன்று! பாவம், வெட வெடவென அவன் உடல் முழுவதும் நடுங்கும். எப்பொழுதும் அவன் முனகிக் கொண்டே யிருப்பான்.

குருவிகள் ஏதாவது கிடைக்கும் என நம்பிக்கையுடன் அவனுக்கு நாலா புறமும் தத்தித் தத்தி நடக்கும். சிற்சில சமயங்களில் அவன் தன் நடுங்கும் கைகளால் அரிசியைத் தூவவும் செய்வான்.

இப்படியும் பல நாட்கள் கழிந்தன.

கிழவனுடைய மூட்டை முற்றிலும் காலியாகி விட்டது. சிறிது கஞ்சி காய்ச்சிக் குடிக்கக்கூட அரிசி இல்லை. உடம்பு சரியில்லாததால் எழுந்து எங்காவது போய்ப் பிச்சை எடுக்கவும் அவனுல் முடியவில்லை. குளிர் மிகுதியால் ஒரு கால் முற்றிலும் சோர்ந்து போயிற்று. இப்படித் தன் ஒவ்வோர் அங்கமும் உயிரற்று ஜடமாவதைத் தெரிந்து கொண்டு சாவின் வருகையையும் எதிர்பார்த்தவாறு அவன் படுத்துக் கிடந்தான்.

கிழவன் சாகத் தயாராகக் கிடந்தான்.

மூன்று நாட்களாகப் பட்டினி. இரவானதும் பசி தாள முடியவில்லை. வயிற்றுக்கு ஏதாவது கிடைக்காதா, கிடைத்தால் அனு



அரசியல் விடுமுறைக்கு

அருள்புரிவீர்!

1 குன்றமர்ந்த முருகா - உனக்கு
இன்று என்ன ஆசை?
எங்கள் தேர்தல் களத்தில்
ஏன் வந்து நின்றுய்?

2 சாந்தரூப ராமா - நீயும்
சந்தைக்கு வந்து விட்டாய்
பாதுகை காட்டிப் பெரியார்
வாதுக்கு அழைத்து விட்டாரோ?

3 சபரிகிரீசா ஐயப்பா - நீ
தவம் மறந்து போனுயோ
சீலம் குறைந்த சிலராலே
சேலம் வந்து சேர்ந்தாயோ?

4 அசுரர் அமரர் அனைவரையும் - நீர்
போகவிட வதைத்தது புதிதல்ல.
தமிழகம் வந்த தங்களுக்குத்
தருந்த புதுப்பகை காத்திருக்கு!

5 மூடநம்பிக்கை ஒழிக்கவா? - சிலர்
முன்னேற்றக் கொள்கை ஓங்கவா?
கருவத்தை எங்கும் காட்டவா?
முருகா! உனேப் பகைத்தார்?


6 புயலாய் எழுந்த சிற்றத்தில் - நீ
புன்னகை புரிந்து நிற்கின்றாய்.
'வெள்ளி' காத்த தம்பிகளைத்
தோல்வி காணச் செய்திடுவாய்.

7 தருமம் காப்பாய் ஸ்ரீராமா - நீ
விரதம் காத்த வீரன்தான்
துவேஷம் தூண்டும் மனிதர்களின்
வேஷம் கலைந்து விரட்டாயோ?

8 மன்னன் மகனே மணிகண்டா! - நீ
என்ன செய்யப் போகின்றாய்?
மொழிந்த வாக்கை மறந்திட்டோர்
வழியை மடக்கி அருள்வாயே!

9 ஊர்வலம் எடுத்த உத்தமர்கள் - அவர்
உறவை மிகவும் நாடுபவர்
அனைவரும் அரசியல் விடுமுறையை
அனைந்து ஒதுங்க அருள்செய்வீர்!

—வோட்டுடையோன்



"அரசு பஸ் போக்குவரத்தில் நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்க இரண்டு யோசனைகள்."

"என்ன ?"

"பஸ்ஸுக்காகப் பிளாட்பாரத்தில் நிற்கும் பிரயாணிகளிடம் இருபது பைசா பிளாட்பாரம் டிக்கெட் வாங்கணும். தவிர, காத்திருக்கும் ஒவ்வொரு ஐந்து நிமிஷத்துக்கும் ஐம்பது பைசா வெயிட்டிங் சார்ஜ் வாங்கணும்."

அணுவாகக் கொல்லும் இந்தக் குளிரிலிருந்தாவது கொஞ்சம் தப்பித்துக்கொள்ளலாமே? எப்பாடு பட்டாவது வயிற்றுக்குள் சூடான பொருள் ஏதாகிலும் செலுத்தியாக வேண்டும் என்றெல்லாம் கிழவன் மனத்தில் எண்ணிக் கொண்டான்.

கிழவன் மூட்டைக்குள் கையை விட்டுத் துழாவினான். அதன் மடிப்புக்குள் எங்கோ கொஞ்சம் அரிசி இருப்பதைத் தெரிந்து கொண்டான். ஒரு பிடிகூட இருக்காது. கொஞ்சம் வெந்நீர் வயிற்றுக்குள் செலுத்த வேண்டும். மூட்டையிலிருந்து அரிசியைக் கொட்டி எடுக்க முற்படுகையில்தான் கிழவனுக்கு வேறு ஒரு கொடிய உண்மை புலப்பட்டது. இடது கை சோர்ந்து முற்றிலும் பயனற்றதாகி விட்டது.

ஒரு கையும் ஒரு காலும் இனி அசையாது.

அங்கே படுத்துச் சாவதே மேல் எனக் கிழவன் முதலில் எண்ணினான். ஆனால் உள்ளே கொழுந்து விட்டு எரியும் இந்த நெருப்பை எப்படித் தாங்கிக் கொள்வது? அது சற்று அணைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

கிழவன் ஒரு கையால் சட்டியைத் தேடி எடுத்துக் கொண்டு முற்றத்தை நோக்கி நகர்ந்தான். கூரையிலிருந்து ஒழுகி வந்த மழை நீரைச் சட்டியில் பிடித்து மறுபடியும் நகர்ந்து தன் இடத்துக்கு வந்தான். ஒரு கையும் ஒரு காலும் செத்துப்போன இரண்டு பெரும் பாம்புகளை உடம்புடன் சேர்த்துக் கட்டி வைத்தது போலுள்ள ஒரு பாரத்தை அவனுள் தோற்றுவித்து அவனுடன் சென்றன.

அவன் தீப்பெட்டியைத் தேடி எடுத்தான். பிறகு அடுப்பின் கற்களை எப்படியோ சேர்த்து வைத்தான். பல தடவை எரிந்தணைந்து கடைசியில் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. கூடவே கிழவன் உள்ளத்தில் உயிர் வாழ வேண்டும் என்னும் ஆசையும் கொழுந்தாக எரிந்தது.

உயிர்த் துடிப்பு எஞ்சியுள்ள தன் வலது கையால் அவன் செத்துப் போன கையையும் காலையும் தடவினான். குளிரால் வெட வெட வென நடுங்கிக் கொண்டிருந்த கையைத் தீக்கருகில் காட்டிச் சூடாக்கி உயிரற்ற தன் உறுப்புக்களைத் தடவிச் சூடாக்க முனைந்தான்.

அடுப்பிலிருந்த மண் பாண்டம் 'ச்ச்ச்' என்று இலேசான ஒலியை எழுப்பி அதனுள்ளிருந்த நீரில் சிறு சிறு நுரைகளை உண்டாக்கியது. சட்டியிலிருந்த நீரில் ஒரு பிடி அரிசியை இடக் கொதிக்க ஆரம்பித்தது. அதைப் பார்த்தபோது கிழவனுக்குச் சற்று ஆறுதல் உண்டாயிற்று. ஆனால்...

எரிகின்ற அடுப்பு திடீரென்று மங்கி மறைவது போல் அவனுக்குப் பட்டது. அவன் முற்றிலும் சோர்ந்து தள்ளாடிப் போனான்.

அவனுடைய கை அல்லது கால் அடுப்பின் மீது பட்டிருக்க வேண்டும். அடுப்பு அசைய மேலே இருந்த சட்டி கொதிக்கிற நீருடன் அடுப்புக்குள் விழுந்தது. அத்துடன் அடுப்பும் அணைந்தது. நீர் அடுப்புக்குள் விழுந்ததால் உண்டான 'ச்' என்னும் ஓசையை வெகு நேரம் வரையில் அங்கே கேட்க முடிந்தது. அதைக் கேட்டுத் தூக்கம் கலைந்த சிட்டுக் குருவிகள் பயந்து கீச்சிட்டன.

ஆனால் அந்தச் சத்தத்துக்கான காரணத்தை அந்தக் குருவிகள் அறியவில்லை. இதற்குள் நெருப்பு முற்றிலும் அணைந்திருந்தது. கிழவனின் முனகலும் நின்றிருந்தது. பேய் மழையின் இரைச்சல் மட்டும் தான் நிற்கவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தபோது, குருவிகள் கூட்டிலிருந்து வெளியே வந்தன. அன்று அவைகளுக்கு இரை தேடி அதிகாலையிலேயே வெளியே போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அணைந்துபோன அடுப்புக்குள்ளும் மண் பாண்டத் துண்டுகளிலும் இருந்த கால் வேக்காடான அரிசி மணிகளைக் 'கலகல'வெனச் சத்தமிட்டபடி தத்தித் தத்தி நடந்து வேகமாகக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன. அரிசி மணிகள் எல்லாம் கொத்தித் தின்ற பின் கற்கள் மேலும் மண்பாண்டத் துண்டுகளிலும் அங்கே அசைவற்றுக் கிடந்த கிழவனின் சடலத்தின் மேலும் அந்தக் குருவிகள் சற்று நேரம் தத்தித் தத்தி விளையாடின. பிறகு வெகு தொலைவில் இன்னும் எங்கோ இரை தேடிப் பறந்து போயின.

அங்கே சடமாகக் கிடந்த அந்தக் கிழவனைப் பற்றி அவை எதுவும் எண்ணிப் பார்த்திருக்காது. ஏன், அவன் இறந்து போனதாகக் கூட அவைகளுக்குத் தெரிந்திராது.

நடுப்பகல் ஆனபோது சில மாணவர்கள் எதற்காகவோ அந்தப் பக்கமாக வந்தார்கள். உயிரற்ற அந்தச் சடலத்தைப் பார்த்தபோது சிறிது நேரம் அவர்கள் அதையே நோக்கி நின்றார்கள்.

"ஐயோ, பாவம்! ஒரு பிச்சைக்காரன் இறந்துகிடக்கிறான்" என அவர்களில் ஒருவன் சொன்னான். சற்று நேரம் அப்படியே நின்ற பிறகு அவர்களும் போய்விட்டார்கள். அந்தப் பிச்சைக்காரனைப் பற்றி அந்தக் குருவிகளை விட யாரும் அதிகமாக எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்கள்.

தமிழாக்கம் : **கே. நாராயணன்**


RENEWED GROWTH
WITH
DALMIA
REFRACTORIES
உஷ்ணத்தின் அடிப்படையிலே இயங்கும் தொழிற்சாலைகளுக்கு "ரிஃப்ராக்டரீஸ்" (கட்ட கற்கள்) இன்றியமையாததாக இருப்பதால், நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நமது தொழில்களுக்கு "ரிஃப்ராக்டரி"களின் தேவையும் பெருகி வருகிறது.
ஆசியாவிலே "ரிஃப்ராக்டரி" உற்பத்தியாளர்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் டால்மியாவின் இரண்டு நவீன தொழிற்சாலைகளில், கட்ட கற்கள், ரசாயன முறையில் இறுக்கப்பட்ட கற்கள், மித, அதிக, மிக அதிகமான உஷ்ணத்தை தாங்கவல்ல செங்கற்கள் ; மணற் சத்துள்ள செங்கற்கள், கையனைட், ஸிலிமினைட் மற்றும் திராவகங்களைத் தாங்கக்கூடிய செங்கற்களையும் தயாரிக்கிறார்கள். வாடிக்கையாளரின் விசேஷ தேவைக்கேற்பவும் தயாரிக்கிறார்கள்.
ஒரிஸா சிமெண்ட் லிமிடெட்
ராஜ்கங்பூர், ஒரிஸா
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
M/s. S. G. சப்ளை ஏஜன்ஸி
18-பீ ரூக்தாராம் பாபு தெரு, கல்கத்தா
உலைக் கற்கள் தயாரிப்பாளர்கள்
டால்மியா ஸெராமிக் இண்டஸ்ட்ரீஸ்
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
H. O 4, ஸிந்தியா ஹவுஸ், புதுடில்லி-1
DALMIA ENTERPRISES

கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்



கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

கைத்தறி ஆடைகளணிவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

கைத்தறி ஆடைகள் நவ நாகரிகத்தின் சின்னம் என்பதையறிய நாகரிகக் குறிப்புகளின் உதவி தேவையில்லை.

உள் நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் கைத்தறி ஆடைகள் நவீன மோஸ்தரின் முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

நெஞ்சைக் கவரும் வண்ணங்களில் கிடைக்கும் கைத்தறி ஆடைகள் உங்கள் தோற்றத்திற்கு ஒரு புதுக்கவர்ச்சியை அளிக்கின்றன.

பலவேறு நிறங்களிலும் மாதிரிகளிலும் கிடைக்கும் கைத்தறி ஆடைகள் எந்த விசேஷத்திற்கும் ஏற்றவை.

அனைத்திந்திய கைத்தறி வாரியம்

பம்பாய்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



★ நூலாசிரியர்பற்றி :

கல்லூரி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய டாக்டர் ஜார்ஜ் சாகித்ய அகாடெமியின் தென்பிரதேச நிர்வாகியாகப் பணியாற்றியவர். தற்போது மலையாளக் கலைக்களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராக விளங்குகிறார். இவர் மொழி இயல் வல்லுனர். மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். சோவியத் யூனியனிலும் அமெரிக்காவிலும் பயணம் செய்து பயண நூல்கள் இயற்றியவர். ஹவாய் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றியவர்.


"அமெரிக்காவில்......" என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம். முழு நூலையும் படிக்க விரும்புவோர் "கலைமகள் காரியாலயம், சென்னை-4" என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

ரோம் முதல் சிங்கப்பூர் வரை

கே. எம். ஜார்ஜ்

▲ ரோம் - பல்கலை நகரம்

▼ ஆக்ஸ்போர்ட் - பல்கலைக் கழகம்



ரோமில் ஒரு நாள்

இருக்கிற நேரம் மிகக் குறைவுதான் என்றாலும் ஓடுகிற ஓட்டத்திலே ரோமைச் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதற்குச் சில காரணங்கள் இருந்தன.

இத்தாலி உலக வரலாற்றில் எப்போதுமே முக்கியத்துவம் பெற்றுள்ள நாடு. முஸோலினியின் காலத்தில் அது உலகத்தின் கவனத்தைப் பெருமளவும் கவர்ந்தது. இப்போது அந்நாட்டில் நிலவி வருகிற அரசியலில் கேரள நாட்டின் சாயல் இருப்பதைக் காணலாம். ஐரோப்பிய அளவுகோல்களைக் கொண்டு பார்க்குமிடத்து, இத்தாலி சற்றே வறிய தேசம் என்றே சொல்ல வேண்டும். அரசியல் கட்சிகள் பல. ஆயினும் ஒன்றுக்காவது திட்டவட்டமான பெரும்பான்மைச் செல்வாக்கு உண்டு என்பதற்கில்லை. யாவற்றிலும் பெரிய கட்சி, 'கிறிஸ்டியன் டெமோக்ராட்ஸ்' என்ற கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியாகும். அதற்குள்ளுமே இடம், வலம், மையம் என்ற மூன்று பிரிவுகள் உள்ளன. கம்யூனிஸத்தின் கையும் இந்நாட்டில் வலுப்பெற்றுள்ளது. வத்திக்கானுடைய செல்வாக்குக்கு உட்பட்ட இப்பிரதேசத்தில் இந்நிலை எப்படிச் சாத்தியம் என்றுகூடத் தோன்றலாம். வறுமை, கம்யூனிஸக் கருத்துக்களை வளர்க்கிற உரம் என்பதை அரசியல் சிந்தனையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சென்ற பன்னிரண்டாண்டுகளுக்கிடையில் எல்லாத் துறைகளிலும் இத்தாலி பெருமளவு முன்னேறியிருக்கிறது என்பது தெளிவு.

மேற்கு ஐரோப்பா வழியாக

ரோமிலிருந்து ஜெனிவாவுக்கு இத்தாலி நாட்டின், 'அலிடாலியா' கம்பெனிக்குச் சொந்தமான விமானம் ஒன்றில் பயணமானேன்.

இயற்கையின் எழிற்காட்சி நிறைந்த பட்டணம் ஜெனிவா. செடி கொடிகள் நிறைந்து வளர்கின்ற சிறு குன்றுகளும் பரந்த வெளிகளும் உள்ளம் கவரும் எழிலுடைய ஓர் ஆறும் அந்த நகரின் அழகுக்கு அழகு செய்கின்றன. நகரத்தின் குறுக்கே ஓடுகிற அவ்வாற்றில் பொழுது மங்கியபிறகு இரு புறங்களிலும் நின்று நிழலிடுகிற விளக்குகள் ஒரு நட்சத்திர மாலையையே படைத்து விடுகின்றன. இதமான வெப்பநிலை, அலைக்கழிப்பு இல்லாத அமைதியான வாழ்க்கை; அனைத்துலக ஸ்தாபனங்களில் பல, ஜெனிவாவைத் தம் தலைமை இடமாகக் கொண்டிருப்பதற்கு இவையும் காரணங்களாகும்.

வேறு காரணங்களும் உண்டு. கடிகார உற்பத்தியில் மட்டுமல்ல ஸ்விட்ஜர்லாந்து உலகத்தின் கவனத்துக்கு உரியதாக இருப்பது. உலகத்தின் குடியரசு நாடுகளில் மிகவும் பழைமையானது, ஸ்விஸ் குடியரசு. நீண்ட நாட்களாக நிலைபெறுன ஆட்சி யமைப்பு நிலவி வருகிற இந்நாடு, அமைதிக்கும், செல்வச் செழிப்புக்கும் உறைவிடமாகத் திகழ்கிறது.


ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் ஸ்விட்ஸர்லாந்து ஓர் உறுப்பாக இருக்கச் சம்மதிக்கவில்லை. பண்டைக் காலந் தொட்டே கட்சி சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது இந்நாடு. அதனுல்தான் அனைத்துலக ஸ்தாபனங்கள் பல மகிழ்ச்சியோடும் அமைதியோடும் தம் தலைமைக் காரியாலயங்களை இங்கே அமைத்திருக்கின்றன. இத்துணை நாகரிகமும் மலர்ச்சியும் உள்ள இந்த நாட்டில் பெண்களுக்கு வோட்டுரிமை இல்லை யென்பது ஏதோ நம்ப முடியாத கேலிக் கூத்தாகத்தான் தோன்றும். ஆனுல் உண்மை என்னவோ அதுதான்.*

பிளவுபட்ட நகர்

உலகப் பிரசித்தி பெற்ற பெர்லின் நகரத்தை நடுவிலே கீறி ஒரு பகுதியை கிழ் ஜெர்மனியும் மறு பகுதியை மேல் ஜெர்மனியுமாகப் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறுர்கள். இடையில் உள்ள சுவரில் இரண்டோர் இடங்களில் அமைத்திருக்கிற திட்டி வாசல்கள் வழியாக மட்டும்தான் மக்கள் போக்குவரவை அனுமதித்திருக்கிறுர்கள். அவைகளுக்குத்தான் 'செக் பாயின்ட்'கள் என்று பெயர். அவைகளுள் எல்லாம் பிரசித்தமான செக் பாயின்ட்டுக்குத்தான் 'சார்லி' என்று பெயர்.

இதற்கு, 'ஃப்ரீட்ரிஷ் ஸ்ட்ராஸே' என்ற பெயர்தான் ஒப்புக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜுக்களில் உள்ள பெயர். சார்லி செக்பாயின்டின் மேற்குப் பக்கத்தை அடைந்ததும் வாடகைக் கார் தானுகவே நின்றுவிட்டது. அதைத் தாண்டிப் போக இயலாது என்பது காரோட்டிக்குத் தெரியும். அவருக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. இரண்டொரு சொற்களை வைத்துக் கொண்டும், வரும் வழியில் நாங்கள்

பாரீஸ்: எழில் நகரை.....



* சில நாட்களுக்கு முன்னர்தான் இந் நிலையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

பழக வைத்துக் கொண்ட இரண்டொரு 'கதக்களி' முத்திரையின் உதவியைக் கொண்டும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடிந்தது. என்னையும் பெட்டிகளையும் காரிலிருந்து இறக்கி விட்டுக் கூலியையும் பெற்றுக் கொண்டு, காரோட்டி இடத்தை விட்டு அகன்று விட்டார்.


மணியோ நாலரை; நல்ல குளிர். ஒருசிலர் வாயிலைத் தாண்டிச் செல்கிறார்கள். பட்டாளம், போலீஸ், ஊர்க் காவல் படையினர், சந்தேகப் பார்வை பார்க்கிற ஆசாமிகள், இடையே அமைத்திருக்கிற தடைகள் எல்லாவற்றையும் பார்த்து ஒரு கணம் நான் திகைத்துப் போனேன். சிலர் சாலையின் வலப்புறத்திலே ஐம்பது கெஜ தூரம் நடந்து கிட்டத்தட்ட பதினைந்து அடி உயரமுள்ள ஓர் மேடையில் ஏறி நின்று மறுபுறத்தை எட்டிப் பார்ப்பது தெரிந்தது. பெட்டியை வைத்த இடத்திலேயே வைத்து விட்டு நானும் அந்த மேடையில் ஏறிப் பார்த்தபோது எழுபத்தைந்து கஜ தூரத்துக்கு அப்பால் வேறொரு செக் பாயின்ட் இருப்பது தெரிந்தது. அங்கே சிலர் நின்றிருந்தார்கள். ஆனால் அவ்விடத்தை அடைவது எப்படி? சற்று நேரம் கழித்து என்ன வந்தாலும் வரட்டும் என்று ஒரு போலீஸ்காரரிடம் ஆங்கிலத்தில் பேசினேன். அவர் என்னை முன் செல்ல அனுமதித்தார். பெட்டியையும் தூக்கிக் கொண்டு கீழ் ஜெர்மானிக்காரர்களின் செக் பாயின்டை அடைந்தேன். அங்கே எல்லோரையும் விசாரிப்பதும் சோதிப்பதுமாக இருந்தார்கள். என் கைவசம் இருந்த கடிதங்களை அங்கிருந்தவர்களிடம் காட்டினேன். ஏதோ சிறிது ஆங்கிலம் தெரிந்தோரும் சிலர் இருந்தார்கள். ஜெர்மன் தென்கிழக்கு ஆசியச் சங்கத்தலைவர்கள்தாம் என்னை அழை.. இருந்தார்கள். அவர்களிடம் நான் தொலைபேசியில் பேசலாமா என்று கேட்டேன். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சக பிரயாணி ஒருவர் என்னை அந்தச் சங்கத்தில் கொண்டு சேர்த்துவிடுவதாக ஒப்புக் கொண்டார். இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் என் விஸாவைக் கொண்டு வந்து காட்டிவிட வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் எனக்கு அனுமதி தந்தார்கள். என்னுடைய பெட்டியையும் உடைமைகளையும் சோதனை போட அவர்களுக்கு அதிகாரம் உண்டு. என்னை அதிகம் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றோ என்னவோ கையில் இருந்த 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையை மட்டும் பறிமுதல் செய்துவிட்டுப் பெட்டியைச் சோதிக்காமலே மேற்செல்ல அனுமதித்தார்கள். ஏதோ ஒன்றைச் செய்தோம் என்ற திருப்தி அவர்களுக்கும் வேண்டுமே. அந்தச் செய்தித்தாள் என் கையில் இருந்தது நல்லதாயிற்று. — பறிமுதல் செய்யச் சௌகரியமாக.


* * *

முன்னேற்றம் கிழக்கிலும் மேற்கிலும் காணப்படுகின்ற தென்றாலும் மேற்கில் வளம் கொழிப்பது போல் கிழக்கில் இல்லை. அமெரிக்கர்கள் தாராளமாக உதவி வருகிறார்கள் என்பதுதான் மேற்கு ஜெர்மனி இவ்வளவு விரைவிலும் இவ்வளவு அதிகமாகவும் முன்னேறி இருப்பதற்குக் காரணம். 'சீதளப் போர்' (Coldwar) என்பது போலவே சீதளப் போட்டி என்றும் ஒன்று உண்டு. இப்போது பெர்லின் நகரம் இந்தச் சீதளப் போட்டியில் அகப்பட்டு நிற்கிறது. அது ஜெர்மனியின் அச்சு என்பதை நாம் மறக்கலாகாது. அகதிகளின் வருகை ஒரு பெரிய பிரச்னைதான். மாதம் ஒன்றுக்கு இருபதாயிரம் அகதிகள் கிழக்கு ஜெர்மனியிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குப் போகிறார்களாம். மேற்கிலிருந்து கிழக்கேயும் அகதிகள் போகிறார்கள் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அது ஐந்துக்கு ஒன்று என்ற அளவுதான். இதிலிருந்து வாழ்க்கை வசதி மிகுந்திருப்பது மேற்கு ஜெர்மனிதான் என்பதை ஊகிக்கலாம். அகதிகளை வரவேற்கச் சமஷ்டிக் குடியரசு (மேற்கு) சித்தமாகவே இருக்கிறது. அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக ஒற்றர்களும் பித்தலாட்டக்காரர்களும் புகுந்து விடக் கூடாது என்பதுதான் அவர்கள் போடுகிற நிபந்தனை. இவ்வாறு மேற்கு நோக்கிச் செல்கிற மக்களிடையே தொழில் நுணுக்க அறிவுள்ள என்ஜினியர்கள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சிற்பிகள் ஆகியோர்களும் சேர்ந்திருக்கிறார்கள் என்பதே கிழக்கு ஜெர்மனிக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறது. அவ்வாறு போவோரை மேற்குப் பக்கத்திலிருந்து கிழக்குப் பக்கத்துக்குக் கவர்ந்திழுக்கச் சில திட்டங்களும் இல்லாமல் இல்லை. இவ்வாறு போருக்கு இடையிலேயே நிலவுகிற ஒரு சகவாழ்வு மூலமாகப் பிளந்து கிடக்கிற இரு ஜெர்மனிகளும் முன்னேறி வருகின்றன.

ஜெர்மனி இரண்டு பட்டுக் கிடப்பதே நல்லது என்ற கருத்துக்கூட அரசியல் சிந்தனையாளர்களிடையே உண்டு. ஒன்றுகிவிட்டால் வேறொரு தலைமையின் கீழ் மீண்டும் ஒரு பெரும் போரில் குதிக்கும் அளவுக்குத் தெம்புள்ளவர்கள் ஜெர்மானியர்கள். அவர்களை மூன்று நான்கு கடிவாளங்களைப் போட்டு

.........ரசிப்பவர்கள்





சிங்கப்பூர் — டைகர்பாம் தோட்டத்தில்......

அடக்கி வைத்திருக்கிறார்கள் இப்போதைக்கு. ஆனால் அங்குள்ள இளைஞர்களோடு பேசிப் பார்த்தால் போரினால் விளைந்த தவிப்பையும் அவர்கள் தாங்கிய கஷ்ட நஷ்டங்களையும் பற்றிய பேச்சே அவர்கள் நாவின் நுனியில் இருக்கிறது. அழிவின் சின்னங்களாக அநேகம் கட்டடங்கள் அப்பெரிய நகரத்தில் காணக் கிடக்கின்றன. புகழ் பெற்ற 'மெமோரியல் சர்ச்' என்ற மாதா கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவதற்கான திட்டம் வந்தபோது நீண்ட ஆலோசனைக்குப் பிறகு யுத்தத்தின் பயங்கரத்தைப் பிரதிபலித்துக் காட்டும் ஒரு சின்னமாக அது அந்த நிலையிலேயே நிற்பது தான் சரி என்று முடிவு செய்தார்களாம். அநேகமாக எல்லாப் பகுதிகளும் இடிந்து கிடக்கிற அப்பெருங் கோயிலைக் கண்டால் இதயம் உள்ளவர்கள் வாய் விட்டு அழுதே விடுவார்கள்!

மேற்கு ஜெர்மனியில்

'மெர்ஸிடிஸ்பென்ஸ்' காரில் மேற்குப் பெர்லினைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். சிறிது நேரத்துக்குள் அமெரிக்க வட்டாரத்தை அடைந்தோம். அதன் மையத்தை அடைவதற்கு முன் சூழலிலே ஒரு மாறுதல், கண்ணுக்குக் குளுமையான பசுமை; மூக்குக்கு இதமான நறுமணம்; இதயத்துக்கு அமைதி தரும் ஒரு தனிச் சோலை; என்னவென்று சொல்ல அமெரிக்கர்களது பந்தாவையும், பாணியையும் மிடுக்கையும் விளம்பரக் கை வண்ணத்தையும்! அப்பகுதியிலே என்னை மிகவும் கவர்ந்த காட்சி அமெரிக்கர்களின் செலவில் எழுப்பியுள்ள 'ஃபிரீ யூனிவர்ஸிடி' (இலவசப் பல்கலைக் கழகம்) ஆகும். அப்பல்கலைக் கழக மாணவர்களில் தொண்ணூற்று ஐந்து சதவிகிதத்தினருக்கு உபகாரச் சம்பளம் (ஸ்டைபண்டு) தருகிறார்கள் என்று கேள்விப் பட்டபோது நான் வியப்பில் ஆழ்ந்தேன்.

இந்தக் கல்வி நிறுவனம் அமைந்து இப்போதைக்குப் பதினைந்து ஆண்டாயிற்று. அதற்குள்தான் எவ்வளவு வளர்ந்திருக்கிறது! அதன் சோதனைச் சாலைகள் சிலவற்றையும் விரிவுரைக் கூடங்களையும் பார்த்தேன். ஐந்நூறு பேர் உட்கார வசதியுள்ள ஒரு கூடத்தைக் கண்டதும் எனக்கு மயக்கமே வந்து விட்டது. எவ்வளவு சுகமான ஆசனங்கள்! என்ன வசதிகள்! அலங்காரங்கள்! அங்கு வைத்திருக்கும் நூற்றுக் கணக்கான பூந்தொட்டிகளையும் மின்விளக்குகளையும் ஒலி பெருக்கியையும் கண்டபோது ஏதோ விழாவுக்காக அலங்காரம் செய்து வைத்திருக்கிறார்கள் என்றே நினைத்து விட்டேன்.

பாரிஸில்

நகரத்தைச் சுற்றிக் காட்டுகிற பஸ் புறப்படுவது பதினொரு மணிக்குத்தான். மூன்று மணி நேரம் ஆகும் ஒரு சுற்றுச் சுற்றி வர. அதற்கான கட்டணம் பதினைந்து ஃப்ராங்க். அதற்கிடையில் விற்பனைக் கலையில் கை தேர்ந்த ஏஜெண்டு பாரிஸ் நகரத்தின் இரவுக் கேளிக்கை விவரங்களைப் பற்றி (Night Clubs) சற்றே விரித்துரைத்தார். பாரிஸின் நைட் கிளப்புகள் பெயர் போனவை. — பெயர் இருந்த இடம் தெரியாமல் போய்த் தொலைய வேண்டியவை! அவற்றைக் கா[illegible]வன்றே அமெரிக்காவிலிருந்தும் ஆ[illegible]யாவிலிருந்தும் ஆட்கள் வருவது உ[illegible]டாம். என்னவாயினும் சரி; அதைப் பார்த்துவிட்டால் போகிறது என்று தோன்றிற்று.

பாரிஸில் மூன்று கண்காட்சிக் கூடங்கள் முக்கியமானவை. அவற்றுள் மிகவும் புகழ் பெற்றது லூவர் மியூஸியம் ஆகும். பழைய அரண்மனை ஒன்றில் அமைந்திருக்கிறது இம்மியூஸியம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதில் பல புதுமையான மாறுதல்கள் செய்திருக்கிறார்கள். மூன்றரை மணி நேரம்தான் அங்கே தங்க முடிந்தது. இக்கண்காட்சிக் கூடத்தைச் செவ்வனே பார்க்க மூன்று மாதங்களாவது வேண்டும். அதில் உள்ள இரண்டொரு பிரிவுகளை மேலெழுந்தாற்போல் பார்ப்பது மட்டுமே சாத்தியமாயிற்று. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தெல்லாம் பல நூற்றாண்டுக் காலமாக எத்தனை எத்தனை கலைப் பொருள்களைத் திரட்டி வந்திருக்கிறார்கள், ஃப்ரெஞ்சு நாட்டவர் என்று நினைத்தபோது அவர்கள்பால் எனக்குப் பெரு மதிப்புத்தான் தோன்றியது.

போருக்குப் பிறகு ஜனத்தொகை விஷயத்தில் ஃபிரான்ஸில் பெரிய மாறுதல் விளைந்துள்ளது. மக்கள் தொகையில் வெகு பின் நோக்கமாக இருந்தது ஃபிரான்ஸ். செயற்கையாகக் கருத்தடை செய்து வந்தமை அதற்குக் காரணம் போலும். இப்போது மக்கட் பேறு ஆட்சியாளர்களின் ஆதரவு பெற்ற விஷயம் ஆகியிருக்கிறது. திருமணம் செய்து கொண்டால் ஓர் அலவன்ஸ்; மகப் பேறு உண்டாகி விட்டால் இன்னோர் அலவன்ஸ் என்றெல்லாம் கிடைக்கிறது அங்கே. இந்த விஷயத்தில் ஃபிரான்ஸையும் நம்



........பல பொம்மைகளுள் ஒன்று

நாட்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள், சற்று! ஃபிரான்ஸின் மக்கள் தொகை இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் ஏழு கோடியாகப் பெருகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (Social Security Schemes) மலர்வதில் ஆட்சி கவனம் செலுத்துகிறது. மேற் குறிப்பிட்டபடி அலவன்ஸுகள் வழங்குவது இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். மக்கள் ஆரோக்கியத்தைப் பேணுதலும் கல்வியும் இத்திட்டத்தின் பிற அம்சங்கள். மூன்று குழந்தைகளுக்கு மேல் உள்ள ஒரு தந்தைக்கு அவர் ஊதியத்தின் 33 சத விகிதம் அலவன்ஸாகக் கிடைக்கிறது என்று கேள்விப்படுகிறபோது ஃபிரான்ஸ் மக்களின் அன்றாட வாழ்வில் அல்லலோ அவதியோ சற்றும் இருக்க இடமில்லை என்பது புலனாகிறது அல்லவா?

பிரிட்டிஷ் மியூஸியம்

பிரிட்டிஷ் மியூஸியத்தின் விரிவைப் பற்றி இங்கே பேசத் தேவையில்லை. நாங்கள் மியூஸியத்தின் கீழை நாட்டுப் பிரிவுக்குச் சென்றோம். அந்தக் கீழை நாட்டுப் பிரிவின் நிர்வாகத்தைப் பற்றித் திரு கார்ட்னர் விளக்கினார். அதற்குப் பிறகு அவருடன் பணியாற்றும் திருமதி கௌர் என்னும் பெண்மணியை எனக்கு அறிமுகம் செய்து வைத்துக் கையெழுத்துப் பிரதிகளையும் அரிய நூல்களின் பிரதிகளையும் அம்மாது எனக்குக் காட்டுவார் என்று சொன்னார். ஆங்கிலப் பெண்ணான ஸ்ரீமதி கௌரின் கணவர், கௌர் ஓரியண்டல் ஸ்கூலில் ஹிந்தி ஆசிரியராகப் பணியாற்றுபவர். ஸ்ரீமதி கௌருக்கு ஓரளவு தமிழ் தெரியும். மலேயாளம் படிக்க வேண்டுமென்ற ஆசையும் உண்டு Ramacharitam and the study of early Malayalam என்ற என் ஆராய்ச்சி 'தீஸிஸி'ன் பிரதி ஒன்று அவர் மேஜையின்மேல் இருந்தது. அதை அநேகமாக அவர் வாசித்து முடித்திருந்தார். நான் வருவதை அறிந்து தான் அம்முயற்சியில் இறங்கினாரோ என்னவோ? மலேயாள இலக்கியத்தைப் பற்றி நான் ஒரு நூல் எழுத வேண்டும் என்று அவ்வம்மையார் என்னை வற்புறுத்தினார். நானும் அதைப் பற்றிச் சிந்திப்பதாக வாக்களித்தேன். அரிய சில தமிழ் நூல்களின் கையெழுத்துப் பிரதிகளை அங்கே காண நேர்ந்தது. அவற்றிடை ஃபாதர் பெஸ்கி (வீரமாமுனிவர்)யின் தமிழ் - லத்தீன் அகராதியும் இருந்தது.

சில புத்தகங்களையும் பழைய ஏடுகளையும் பார்த்த பிறகு மியூஸியத்தின் பிற பகுதிகளைப் பார்க்கச் சென்றோம். பல காட்சிகள் மெய்சிலிர்க்க வைப்பவை. பழைய ஏடுகளையும் பொருள்களையும் போற்றிப் பேணுவதில் பிரிட்டிஷ் மக்கள் காட்டும் ஆர்வத்தை நாம் வியந்து பாராட்டுவதோடு நில்லாமல் அவ்விஷயத்தில் அவர்களுக்குக் கைவந்திருக்கிற செயல்திறத்தை நாமும் பெற முயல வேண்டும்.

ஆக்ஸ்போர்டு

ஆக்ஸ்போர்டின் சிறப்பு அங்கு வழக்கிலுள்ள, 'டியூட்டோரியல்' முறை (Tutorial System) யாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு டியூட்டர் இருப்பார். வாரம் ஒரு நாள் அந்த டியூட்டரைச் சந்தித்துப் பாடத் திட்டத்தைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்பது கட்டாய விதி. நம் நாட்டுப் பழங்காலக் குருகுலங்களின் போதனை முறையை இது பெரிதும் ஒத்திருக்கிறது. விரிவுரைகள் கேட்க வகுப்புக்களுக்குச் செல்வதெல்லாம்கூட அவ்வளவு கட்டாயமல்ல. மாணவர்களுக்கு நிறையச் சுதந்திரம் உண்டு. ஆனால் அச்சுதந்திரம் அவர்களுடைய பொறுப்புணர்வை வளர்க்கிறதேயன்றிச் சிறிதளவேனும் குறைப்பதாகக் காணவில்லை. இது நம் சிந்தனைக்கு உரிய விஷயமல்லவா ? கல்வியின் தரம் வெகு உயர்ந்து நிற்க வேண்டும் என்னும் கருத்தும் நோக்கமும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. உலகம் முழுவதும் புகழ் பரப்பியிருக்கும் இப்பல்கலைக் கழகத்தின் இருபத்தேழு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை, சற்றேறக் குறைய எண்ணாயிரம் மட்டும் என்பது வியப்புத்தானே ! எண்ணிக்கையன்று, தரமே முக்கியம் என்பதுதான் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய இரு பல்கலைக் கழகங்களின் குறிக்கோள். எண்ணிக்கை பெருகப் பெருகத் தரம் குறையும் என்பது இவற்றை நிர்வகிப்போரின் கருத்து. சென்னைப் பல்கலைக் கழகத்தைப் போன்றவை பிரிட்டனிலும் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய லண்டன் பல்கலைக் கழகமே இதற்கு எடுத்துக் காட்டு. அதில் 23,000 மாணவர்கள் உள்ளனர். அமைப்பிலும் சட்டதிட்டங்களிலும் அது சென்னை சர்வகலாசாலையைப் பெரிதும் ஒத்திருக்கிறது.

இந்திய ஆபீஸ் நூலகம்

செப்டம்பர் 30, புதன்கிழமை அன்று வழிகாட்டி அம்மையாரோடு இந்தியா ஆபீஸ் நூலகத்தைக் காணச் சென்றேன். நாம் உரிமை கொண்டாடக் கூடிய ஒரு நிறுவனமல்லவா அது? விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு உதவுகிற பொருள்களை விட்டுக் கொடுக்கலாகாது என்று அறிவாளிகளான பிரிட்டிஷார் நன்கு உணர்ந்திருக்கின்றனர். அதனால் தானே விலை மதிக்கவொண்ணாத இந்நூலகம் இன்றும் அவர்கள் வசமே இருந்து வருகிறது. அங்கே ஸ்டான்லி ஸ்டட்டனையும் மிஸ் ஜூலின் டைம்ஸையும் சந்தித்தேன். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் விலைமதிக்கவொணா நூல்களும் பல அங்குள்ளன. மலையாளத்திலும் முக்கியமான சில நூல்களும் தஸ்தாவேஜிகளும் உள்ளன. காலஞ்சென்ற டாக்டர் சேல நாட்டுக் குஞ்சன் பிள்ளை, மலையாளக் கையெழுத்துப் பிரதிகளின் பட்டியல் தயாரித்திருக்கிறார். அழகாக அச்சிடப்பட்டுள்ள அப்பட்டியலின் பிரதி ஒன்றை திரு ஸ்டட்டன் எனக்குப் பரிசாகத் தந்தார். மலையாளப் பகுதியில் நாம் பெருமை கொள்ளத் தக்க சிறப்புப் பொருள் ஒன்று உண்டு. வெள்ளித் தகடுகளிலும் தங்கத் தகடுகளிலும் செதுக்கி வைத்திருக்கிற பல சாஸனங்கள். இத்தகைய ஏடுகள் மற்ற எந்த மொழியிலும் இல்லையென்று திரு ஸ்டட்டன் சொன்னார். இவை அபூர்வமானவை என்பதாலும் விலை மிகுந்தவை என்பதாலும் அவற்றைத் தனியாகப் பூட்டி வைத்துள்ளனர். நான் பார்க்க ஆசைப்பட்டதால் வெளியே எடுத்து எனக்குக் காட்டினர். அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கின்றனர். அதன் போட்டோ பிரதி ஒன்றை எனக்கு அனுப்புவதாக மிஸ் டைம்ஸ் வாக்களித்தார்.

அமெரிக்காவில்

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் கல்வி முறையைப் பற்றி நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. என் கவனத்தை முதலில் கவர்ந்தது பாட விஷயங்களின் பலதிறப்பட்ட வகைப்பாடு. எத்தனை விதம் விதமாக அமைந்திருக்கின்றன, துறைகளும் இயல்களும்! அவற்றின் எண்ணிக்கையைக் காணும் போது நமக்கு மலைப்பு உண்டாகிறது. ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் இத்தனை வகையான இயல்கள் இருப்பது மிக அரிது. ஆசியாவைப் பற்றித்தான் எத்தனை தலைப்பில் பாடத் திட்டங்கள் என்கிறீர்கள்!

மாணவர்களின் வயதுக்கு எல்லை நிர்ணயமில்லை என்பது மற்றோர் ஆச்சரியமான விஷயம்! சாதாரணமாகப் பல்கலைக் கழக மாணவர்கள் என்றால் 15க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதினர் என்றுதானே நாம் நினைக்கிறோம். அங்கே ஐம்பது ஐம்பத்தைந்து வயதுடைய மாணவர்கள் கூட உள்ளனர். இவர்கள் எல்லோரும் டாக்டர் பட்டம் பெறுவதற்குப் படிக்கிறவர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். ஒரு கல்லூரிப் பட்டம் பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் மட்டும் என்ன, 'பட்டம் பெறுவது கிடக்கட்டும்; அறிவு வளர்ச்சியல்லவா முக்கியம்' என்னும் கருத்தோடு படிக்க வருவோருமே உண்டு. நிலையான உத்தியோகம் உடையவர்கள் கூடப் பலதடவை விடுமுறை பெற்றுக் கல்வியைத் தொடர்ந்து கற்பதைக் காணலாம். குறிப்பிட்ட வயதுக்குமேல் கல்வி கற்கப் போவதைக் கேவலமாக நம் நாட்டில் கருதுகிறோம். அமெரிக்கரோ எந்த வயதானாலும் சரி, அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள முயல்வதை உயர்வாகக் கருதுகின்றனர்.

என் கவனத்தைக் கவர்ந்த மற்றோர் அம்சம் கல்வித் துறையில் உள்ள போட்டி. இந்தப் போட்டா போட்டி மாணவர்களிடையில் மட்டுமின்றி ஆசிரியர்களிடையிலும் உண்டு. பெரும்பாலும் இரவு ஒரு மணி வரையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடத் திட்டங்களில் ஈடுபடுவார்கள். படிப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்றாகப் படிப்பார்கள். படிப்புக்கு டிமிக்கி கொடுக்கிறவர்கள் நன்றாக மட்டமும் போடுவார்கள் என்பதே நான் கண்ட உண்மை. புதுப் புதுக் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகளும் நூல்களும் எழுதி வெளியிடுவதைப் பொறுத்திருக்கிறது, ஆசிரியர்களின் ஊதிய உயர்வும் பதவி உயர்வும். திறமை மிக்க ஆசிரியர்களைத் தம்பால் கவர்ந்து இழுப்பதில் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலும் போட்டி. அவ்விதமாகத்தான் பேராசிரியர்களும் தங்கள் ஊதியத்திலும் பதவியிலும் உயர்வு தேடிக் கொள்கின்றனர். இந்தப் போட்டி சற்றே



ஹாங்காங்: பழைமையும்......

வரம்பு கடந்தும் போகிறது என்றுகூட நமக்குத் தோன்றலாம். ஆனால் சுதந்திரத்துக்கும் போட்டிக்கும் ஆடரங்கமான அமெரிக்க நாட்டில் இதைத் தவிர்க்க முடியாதுதானே!

மாணவர்களில் பெரும்பான்மையினருக்கு எல்லாச் செலவுக்கும் போதிய உபகாரச் சம்பளங்கள் (ஸ்காலர்ஷிப்புகள்) கிடைக்கின்றன என்பது கவனத்துக்குரிய மற்றொரு விஷயம். இந்த ஸ்காலர்ஷிப்புகளை அரசினரும், ஃபௌன்டேஷன்களும் (உதவி ஸ்தாபனங்கள்) வழங்குகின்றன. பல குழந்தைகளுக்குத் தந்தையரான மாணவர்களை அநேகமாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் காணலாம். கணவன், மனைவி இருவருமே மாணவர்களாக இருப்பதும் உண்டு. தம்பதிகளில் ஒருவர் கல்வியில் ஈடுபட்டிருக்கையில் மற்றவர் உத்தியோகம் பார்த்து, வாழும் வகைக்கு வழி தேடுவதும் உண்டு. ஸ்காலர்ஷிப்புகளாகக் கிடைக்கும் தொகைகள் அநேகமாக முழு நேரப் பணிக்குக் கிடைக்கும் ஊதியத்தை ஒத்த தொகைகளாக இருத்தலால் எந்த வயதினரும் மாணவராக வருவது சாத்தியம் தானே. என் அமெரிக்க மாணவர் ஒருவர் சமீபத்தில் தமிழ்த் துறையில் உயர்தர ஆராய்ச்சிக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு வந்திருக்கிறார். பிரயாணச் செலவுகள்

..........புதுமையும்



போக ஆண்டொன்றுக்கு 3000 டாலர் அவருக்கு ஸ்காலர்ஷிப்புகளாகக் கிடைக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். கிட்டத்தட்ட 15,000 ரூபாய்! *இந்நாட்டுப் பேராசிரியர்களின் ஊதியத்தைவிட உயர்ந்த ஊதியம்!

▶ அமெரிக்காவில் இருநூறு டாலருக்குப் பழைய கார் ஒன்றை வாங்கலாம். இரண்டாயிரத்துக்குப் புதியதே கிடைக்கும். எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவது அமெரிக்காவில் சாத்தியமாதலால் உப்புப் பெறுதவன் கூட ஒரு கார் வாங்கலாம் அங்கே. இப்போது ஏழு கோடி கார்கள் உள்ளனவாம். அதாவது சராசரி இரண்டரை ஆட்களுக்கு ஒரு கார் என்ற கணக்கில்! ஆண்டுதோறும் எல்லாக் கார் உற்பத்தியாளர்களும் புதுப் புது மாடல்களைத் தயாரிக்கிறார்கள். கார்களின் அழகையும் வசதிகளையும் மேலும் மேலும் அதிகமாக்குவதிலே கம்பெனிகள் போட்டியிடுகின்றன. 1965ன் 'மாடல்' 64 அக்டோபரிலேயே வந்தாயிற்று. அமெரிக்கச் சாலைகளில் பிரவாகமாகப் போகிற கண்கவர் கார்களைக் காணும் போது புதிய கார் ஒன்று வாங்க ஏழெட்டு ஆண்டுகள் கியூ வரிசையில் தவம் கிடக்கிற நமக்கு ஆசை தோன்றுவது இயல்புதானே!

நான் தங்கி இருந்த இன்டர் நேஷனல் ஹௌஸிலேயே பலர் கார் உள்ளவர்கள். கார் நிறுத்துவதற்கான இடம் அதிகம் இல்லாததால் எல்லோரும் சாலை ஓரத்தில்தான் காரை நிறுத்தி வைப்பார்கள். கடைசியில் வருவோர் சுற்றித் திரிந்து அல்லல்பட்டு எங்கோ தொலைவில் ஓர் இடத்தைப் பிடித்துக் காரை நிறுத்தி விட்டு, நாலைந்து பர்லாங்கு நடந்து இருப்பிடம் வந்தடைவார்கள்! இந்த விசித்திரத்தை என்னவென்பது! கார் வைத்திருப்பவர்களில் மிகப் பலர் பணியிடங்களுக்குப் பஸ்ஸில் அல்லது ரயில் வண்டியில் தான் போகிறார்கள் என்று கேள்விப்பட்ட போது நான் பெரிதும் வியந்தேன். சொந்தக் கார் உண்டு; பெட்ரோலும் மலிவு; சாலைகள் முதல் தரமானவை; ஆனால் பிரயாணம் பொது வாகனங்களில்! காரணம், காரை நிறுத்தி வைக்க இடமின்மை! வளத்தின் மிகுதியே தந்த வறுமை என்பதா? ஒரு மணி நேரம் காரை நிறுத்தி வைக்க 50 சென்ட் இட வாடகை— அதாவது இரண்டரை ரூபாய்.† மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் காரைப் 'பார்க்' செய்யப் பத்துப் பன்னிரண்டு மாடியுள்ள கட்டிடங்கள் உள்ளன. கார்களை எங்கெங்கே நிறுத்தி வைக்கலாம்; அங்கு இடம் கிடைக்காவிட்டால் எப்படிச் சுற்றி வளைத்து வந்து இடம் பிடிக்கலாம், 'கராஜில்' எப்படிக் காரைக் கொண்டு போய் இடத்தைப் பிடிப்பது என்பதெல்லாம் அந்நாட்டு மக்களுக்கு அத்துப்படி.

கள்ளக்கையொப்பத்துக்கு 500 டாலர்

அமெரிக்காவில் தங்கியிருந்தபோது மூன்று பாங்கிகளோடு வரவு செலவு செய்ய நேர்ந்தது. வெகு திறமையான நிர்வாகம்! செக்கை நீட்டிய ஒரு நிமிடத்தில் பணம் கைக்கு வரும். பணம் போடவும் அவ்வளவு நேரத்துக்குமேல் ஆகாது. டேவிஸில் இருந்த போது பாங்க் ஆஃப் அமெரிக்காவின் உள்ளூர்க் கிளையில் கணக்கு வைத்திருந்தேன். மே மூன்றாம் தேதி வந்த சம்பளப் பணத்தை நான்காம் தேதி பாங்கில் போட்டேன்.

---

* இன்றைய மதிப்புப்படி சுமார் ரூ. 22,500.   † இன்று ரூ: 3-75.

ஐந்தாம் தேதியே யாரோ என் கையொப்பத்தைப் போல் பொய்க் கையெழுத்துப் போட்டு 500 டாலரைத் தட்டிக் கொண்டு போய்விட்டான். ஏழாம் தேதி அகஸ்மாத்தாக பாங்குக்குச் சென்று எவ்வளவு கணக்கில் பாக்கி இருக்கிறது என்று பார்த்த போது விஷயம் வெளியாயிற்று. உடனே செக்கை எடுத்துக் காட்டினார்கள். என் கையெழுத்தைப் போன்றதே அதிலிருந்த கையெழுத்து. ஒரே ஒரு வித்தியாசம்! நான் உடனே புகார் செய்தேன் இதைப் பற்றி. என் வசம் இருந்த செக் புத்தகத்தைப் பரிசோதித்தார்கள். நான் அதை எங்கே வைப்பது வழக்கம் என்று விசாரித்தனர். அதில் உள்ள ஒரு செக்கைக் கிழித்து எடுத்துத்தான் வேலை நடந்திருக்கிறது. பெரிய மனத் துன்பமாய்ப் போயிற்று. ஒன்றா, இரண்டா? ஐந்நூறு டாலர் — கிட்டத் தட்ட இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய். * ஊருக்குத் திரும்ப ஒரே ஒரு வாரம்தான் இருந்தது. திரும்பக் கிடைக்குமா; போனது போனதுதானா?

பாங்கி நிர்வாகிகள் கள்ளச் செக்கையும் நான் தந்துள்ள இதர செக்குகளையும் ஸான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள நிபுணருக்கு அன்றே அனுப்பி வைத்தனர். போலீஸார் வந்து என்னையும் வேறு சிலரையும் விசாரித்தனர். 12ந் தேதி பாங்குக்குச் சென்றபோது நான் இழந்த ஐந்நூறு டாலரை எனக்கு ஈடு செய்துவிடப் பாங்குக்காரர்கள் முடிவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். குற்றவாளி பிடிபடவில்லையாம். ஆனால் கையெழுத்து என்னுடையது அல்ல என்பது நிருபணம் ஆகிவிட்டது. விரைவையே பெரிதாகக் கருதிக் கையொப்பத்தைச் சரி பார்க்காமல் தொகையைத் தூக்கிக் கொடுத்தது தான் அவர்கள் செய்த பிசகு. இப்படிப் பிசகுகள் நடந்தாலும் அதனால் நஷ்டம் நேராமல், இருக்க வங்கிகள் தம்மை இன்ஷுர் செய்து கொள்கின்றன. அதனாலேயே அவர்கள், பாங்கு அலுவல்களை விரைந்து நடத்துவது சாத்தியம் ஆகிறது. நான்கு நாட்களுக்குள் தொகை ஈடு செய்யப்பட்டமை எனக்கே வியப்பாக இருந்தது.

ஹாங்காங்

ஹாங்காங்குக்கு வருவோர் அநேகமாகப் புது சூட் தைத்துக் கொள்ளவும் அபூர்வ வேலைப்பாடுள்ள பொருள்களை வாங்கவும் தான் வருகிறார்கள். என் நோக்கமும் அதுவே தான் என்று அறிந்ததும் நல்ல கடைகள் சில வற்றைக் காட்டுவதாகச் சொன்னார் டாக்ஸி டிரைவர். ஒருவரையும் அறிமுகம் இல்லாத இடத்தில் சிறிதாவது பழகியறிந்த இந்தச் சாரதியின் உதவியைத் தள்ளுவது அறிவுடைமையாகாது என்று தோன்றிற்று. ஒன்றரை மணி நேரம் தெருத் தெருவாகச் சுற்றிச் சில கடைகளில் புகுந்து விலை விசாரித்தோம்—முதல் தரம் முதல் மூன்றும்தரமான கடைகள்வரை. அதற்குள் ஒரு விஷயம் விளங்கி விட்டது. எந்தக் கடை விஷயத்தில் நம்பிக்கை வைக்கலாம் என்பதை ஒரு வெளிநாட்டான் கண்டு பிடிப்பது அசாத்தியம் என்பதுதான் அந்த விஷயம். ஒரு கடையில் மூந்நூறு டாலர் விலை என்னும் சூட் இன்னொன்றில் இருநூறாகவும் மூன்றாவது கடையில் நூற்று இருபது டாலராகவும் இருக்கும்.

ஜப்பான்

வண்டியில் போகும்போதும் காட்சிகளைப் பார்க்கும்போதும் வெகு தமாஷாகப் பேசிக் கொண்டே வந்தாள், உரையாடலில் கை தேர்ந்த எங்கள் வழிகாட்டி. பேச்சு வாக்கில் ஜப்பானியரின் இயல்புகளைப் பற்றி வெளி நாட்டார் ரசிக்கும்படியான பலவற்றைச் சொன்னாள். ஜப்பானியருக்கு ஐந்து என்ற எண் மங்களகரமாம். நான்கு மரணத்தைக் குறிக்கும்; ஒன்பது துன்பத்தைச் சுமந்து வரும் சின்னம். அதனால் நான்கும் ஒன்பதும் வர்ஜ்யம் அங்கே; காண்பதும் அரிதாம். நாலும் ஒன்பதும் சேர்ந்தால் பதின்மூன்று ஆகுமே. மேனாட்டிலும் அல்லவா இந்த 13 விலக்கு!

ஜப்பானியர் பேசும் ஆங்கிலத்தைப் பற்றி அவள் வேடிக்கைக் கதை ஒன்றைச் சொன்னாள். ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் லண்டனுக்குப் புறப்பட்டாராம். டிக்கெட் வாங்கப்போன இடத்தில், 'டு லண்டன் டிக்கெட்' என்றதும் வந்து விழுந்தது பார்க்க வேண்டுமே ஒன்றுக்கு இரண்டு டிக்கெட்டாக. 'To' என்ற சொல்லில்தான் தவறு என்று நினைத்த பேராசிரியர் தம்மைத் தாமே திருத்தியவராய், 'ஃபார் லண்டன் டிக்கெட்' என்று கேட்டு வைத்தார். நாலாக வந்து விழுந்தன டிக்கெட்டுகள். இது அந்நாட்டுப் பேராசிரியர்களுடைய நிலை. சாதாரண மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

சிங்கப்பூர்

சிங்கப்பூரின் ஜனத் தொகை 18 லட்சம் தான். அதில் முக்கால் பகுதியினர் உழைப்புக்குப் பேர்போன சீனர்கள். பாகிஸ்தானியரும் இந்தியரும் நிறைய உள்ளனர். இந்தியர்களுள் பெரும்பான்மையினர் தமிழரே.

சிங்கப்பூரிலும் அதை அடுத்துள்ள பிரதேசத்திலும் நோவு என்றதும் எல்லோரும் நினைத்துக் கொள்கிற மருந்து 'டைகர் பாம்'. மலேயா நண்பர்கள் இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் இரண்டொரு பாட்டில்கள் வாங்கி வரத் தவறுவதில்லை. அப்படி வந்த நண்பர் ஒருவர் மூலமாகக் கிடைத்த டைகர் பாமின் குப்பி ஒன்றும் என்னுடன் உலகத்தைச் சுற்றி வந்திருக்கிறது. நியாயமாகவே புகழுக்கு உரிய இந்த டைகர் பாமைப் பற்றி மேலும் பிரசாரம் செய்ய அதன் தயாரிப்பாளர்கள் பல உத்திகளைக் கையாளுகின்றனர். அவற்றுள் முக்கியமானது சிங்கப்பூரில் உள்ள, 'ஹாப்பர் வில்லா' என்ற கண்காட்சி அரங்கம். நாலைந்து ஏகரா இடத்தைப் பொழுதுபோக்கான ஒரு பூங்காவாக ஒதுக்கி யுள்ளனர். ஆங்காங்கே தனிப் பதுமைகளும் நாடக அரங்கம் போலப் பதுமைகள் அமைந்துள்ள காட்சிகளும் உள்ளன. பார்க்க வருவோருக்குத் தமாஷ் என்பதோடு சீனர்களின் பழங்கால வாழ்க்கை மரபைச் சித்திரித்துக் காட்டுவதும் இதன் நோக்கமாகும். ✽

* இன்றைய மதிப்பு ரூ. 3,750



தேயிலைக் கலவை
நுண்கலையில்
மிகச் சிறந்த வெற்றி!
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
Brooke Bond
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட் — மிக நேர்த்தியான டீ

6070

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon